தனிப்பிரதி விலை {உள்நாடு 1½ அணா / வெளிநாடு 1½ அணா}

KUDI ARASU.

Reg. No. M. 2041


# குடி அரசு


| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| அரை வருட சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

| |
|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2. |
| குறிப்பிட்ட விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 4 | ஈரோடு, விபவ ஆண்டு மாசி மீ 6௳ (17—2—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 43



R E V O L T

## 'ரிவோல்ட்'

"குடி அரசு"ன் கொள்கையைக் கொண்டு வாரம் ஒரு முறை வெளியாகின்ற ஓர் ஆங்கிலப்பத்திரிகை.

வருட சந்தா ரூ. 4.
வெளி நாட்டுக்கு ரூ. 5.

ஆசிரியர்கள்:—

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்
S. ராமநாதன் M. A. B. L.,

விலாசம்:—

மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

R E V O L T



குளிர்! குளிர்!! குளிர்!!!

## பால கல்வா அல்லது கம்பளி குல்லா.



குளிர், பனி காலங்களில் சரீரத்தைப் பாதுகாப்பதற்காக இந்த கம்பளி குல்லா ஒவ்வொருவரிடத்திலும் ஒன்று இருத்தல்வேண்டும். அசல் கம்பளி, சிகப்பு, கிரே, பிரௌன், வெள்ளை முதலிய பலகலர்களில் கிடைக்கும்.

நெ. 1 குல்லா பெரியது ரூ. 1—8—0
நெ. 2 குல்லா ரூ. 1—0—0

உடனே எழுதுங்கள்,

கனடியன் வாட்சு பீபிள், ஜார்ஜ் டவுன், மதராஸ்,



## ஜீவரசம்! ஜீவரசம்!!

### சகல நோய்களுக்கும் தேவாமிர்தம் போன்றது

ஒரு பாட்டில் ஜீவரசம் உங்களிடமிருந்தால் வியாதிகளைப்பற்றிய கவலை வேண்டாம். இது ஓர் சிறந்த குடும்ப ஔஷதமென பல பெரியோர்களால் நற்சாக்ஷி பெற்றது. உண்மையறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள், பாட்டில் 1-க்கு விலை ரூ. 1—8—0

முக்கிய வியாபாரிகள்:—

T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ், மதுரை.
M. இஸ்மாயில் சாஹிப் அய்யன்கடை, தஞ்சாவூர்:

ஜீவரசம் கம்பெனி லிமிடெட்,
(2) காரைக்குடி S. I.


சந்தாதாரர்களுக்கு

## அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறு வருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்தநம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.


## மதனகாமேஸ்வர லேகியம் (Regd)

பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 8 அணா. காலண்டரும் கியாட்லாக் இனாம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி, K. A. S.
போஸ்டு மூலச்சேரி, தென்மலையானம்.



## செல்வராஜ் & கோ.,

### காலண்டர்.

தலைவர்களின்படங்களடங்கியது.

30 x 20 அங்குல அளவில் நல்ல தடித்த வழுவழுப்பான ஆர்ட்பேப்பரில் திருவாளர்கள் டாக்டர் நாயர், தியாகராயர், பனகால் அரசர், ராமசாமி நாயக்கர், பி. டி. ராஜன், எ. ராமசாமி முதலியார், எம். கே. ரெட்டியார், குமாரசாமி ரெட்டியார், பன்னீர் செல்வம், சௌந்தரபாண்டிய நாடார், கண்ணப்பர், கே. வி. மேனன், சுரேந்திரநாத் ஆரியா, சின்னையா பிள்ளை ஆகிய பதினைந்து தலைவர்களின் திருவுருப்படங்களுடன் கூடியது. காலண்டர் 1-க்கு விலை அணா 8 தான். ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவு இனாம். தனித்தனி தலைவர் படம் விலை அணா 1. வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். விலாசம்:—

செல்வராஜ் & Co.
சைக்கிள் வியாபாரிகள், ஈரோடு.

## சுயமரியாதைச் சடங்குகளும் நன்கொடைகளும்

4-2-29-ஆம்தேதி திங்கட்கிழமையன்று இலங்கை அம்பலாங்கொடை காலிரோட்டு 370-ஆம் நம்பர் வீட்டில் வசிக்கும் மு. ஷண்முக பண்டிதர் தனது தாயாரின் முதல் ஆண்டு திதி விழாவை மிக்க விமரிசையுடன் பார்ப்பனப் புரோகிதத்தை அறவே நீக்கி சுயமரியாதையுடைய குலப் பெரியோரைக்கொண்டு நடத்தி முடித்தார். சாதிவித்தியாசமன்னியில் சுமார் 70 மக்களுக்கு அறுசுவை அன்னம் கொடுக்கப்பட்டது. அவ்வமயம் திரு பண்டித பா. சு. நாராயணன், வெ. சண்முகம் பண்டிதர், ஜனார்த்தன நாயர் ஆகியவர்களால் சுயமரியாதை சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. பின்னர் ஷை திதியின் ஞாபகார்த்தமாக 'குடி அரசு' பத்திரிகைக்கு ரூபாய் ஒன்றும் 'மருத்துவன்' பத்திரிகைக்கு ரூபாய் ஒன்றும் நன்கொடையாக அனுப்பும்படி பண்டித பா. சு. நாராயணன் அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கி இனிது பூர்த்தியாயிற்று.

இளங்காடு திரு சிங்காரவேல் அங்காராயர் காளது 30-1-28ந் தேதியன்று தமது தகப்பனார் இறந்தநாள் ஞாபகத்தை முன்னிட்டு பொருளற்ற புரோகிதத்தை அறவே ஒழித்து (தஞ்சாவூர் தாலூகா இளங்காடு கிராமத்தில் தமது இல்லத்தில்) ஏழைமக்களுக்கும் உறவினர்களுக்கும் இன்னமுதளித்து முடித்தனர். ஷை ஞாபகார்த்தமாக நம் 'குடி அரசு'க்கு ரூ. 1 ஒரு மணியார்டர் மூலம் அனுப்பியிருக்கிறார்.

மதுரை தெற்கு வெளி வீதி கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் திருமணம் பார்ப்பன புரோகிதர் இல்லாமல் நடத்தப்பெற்று 'குடி அரசு' நிதிக்கு நன்கொடையாக ஒரு ரூபாய் திரு. பட்டுக்கோட்டை அழகர்சாமி அனுப்பியிருக்கிறார்,

காஞ்சீபுரம்,— திரு. பரசுராம நாயக்கர் தம் பெரிய தாயாருக்கு புரோகிதமொழிந்த திதி நடத்தினர், 'குடி அரசு'க்கும் 'திராவிடனுக்கும்' நன்கொடையாக 1 ரூபாய் அனுப்பியுள்ளார். சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்காக அன்பு கூர்ந்து நன்கொடை யனுப்பிய ஷை நண்பர்களுக்கு சுயமரியாதை இயக்கச்சார்பாக எமது மனமார்ந்த வந்தனம்.

### காலஞ்சென்றார்

கோயமுத்தூர் இங்கிலீஷ் பேக்கரி புரோப்ரைட்டரும் ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டுமான கனம் எஸ். கே. நரசிம்மலு நாயுடு பிப்ரவரி மாதம் 2 தேதி சனிக்கிழமை மாலை இவ்வுலகை நீத்தார் என்று தெரிவிக்க மிகவும் விசனிக்கிறேன்.

நாயுடு அவர்கள் கடந்த இரண்டுமாத காலமாக ஆசனத்தில் சிறு கட்டியின் உபத்திரவத்தினால் பீடிக்கப்பட்டு அநேக கைதேர்ந்த வைத்திய நிபுணர்களுடைய சிகிச்சைகள் செய்யப்பட்டும் பயனற்றதாய் முடிந்தது. நாயுடு அவர்களின் உதாரகுணமும் நன்நோக்கங்களும் சிறந்த புத்தியும் மிகவும் பாராட்டத் தக்கவைகள். நாயுடு அவர்கள் தம் மனைவியையும் கணக்கற்ற பந்து மித்திரர்களையும் ... விட்டு பிரிந்தது என்றும் மறக்கத்தக்கதன்று.

## கோயமுத்தூர் ஜில்லா கம்மவார் மகாநாடு.

ஷை மகாநாடு உடுமலைப்பேட்டை பழனியாண்டவர் ஜின்னிங் பேக்டரியில் 1929-ரு மார்ச்சுமாதம் 2, 3 தேதிகளில்கூட்டவேண்டும் என்றுதீர்மானிக்கப் பெற்று, ஷை ஜின்னிங் பேக்டரி மானேஜிங் ஏஜண்டுகளாகிய ஸ்ரீமான்கள் பூளைமேடு பி. எஸ். ஜி. கெங்கா நாயுடு டி. நாராயணசாமி நாயுடு முதலியவர்கள் உதவிசெய்யமனமுவந்து ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

மகாநாட்டிற்காக நம் கம்ம சமூகத்தார் யாவரும் வேண்டிய உதவிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். மேலும் கான்பரன்ஸ் நடைபெறும் தினங்களில் விவசாய கண்காட்சி ஒன்றும் நடைபெறும். கண்காட்சியில் நல்ல சாமான்கள் கொண்டு வந்து வைப்பவர்க்கு வெகுமதியளிக்கப்பெறும்.

ஷை 3வது மகாநாட்டிற்கு பிரசிடெண்டாக சித்தூர் ஜில்லாபோர்டு பிரசிடெண்ட் ராவ்பகதூர் ந. முனுசாமி நாயுடு பி. ஏ. பி. எல். எம். எல். சி. அவர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். காரியதரிசி.

## திரு. P. T. ராஜன் & சௌந்தரபாண்டிய நாடாருக்கு தேக்கச்சேரி.

திண்டுக்கல் நாடார் மகாஜனங்கள் திரு பி. டி. ராஜன் எம். எல். சி. அவர்களையும் திரு சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். சி. அவர்களையும் திண்டுக்கல் முனிசிபல் சேர்மன் திரு. எம். எஸ். பி. சோலை நாடார் அவர்களையும் வரவேற்று திண்டுக்கல் டிராவலர்ஸ் பங்களாவில் 6-2-28ல் மாலை 5 மணிக்கு ஒரு தேக்கச்சேரி நடத்தினார்கள்.

## கனம் மந்திரிக்கு கமுதியில் வரவேற்பு.

மெதுமாகான வடிவிருத்தி இலாகா மந்திரி உயர் திருவாளர் எம். ஆர். சேதுரத்தினம் அய்யர் அவர்களுக்கும் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் உயர் திருவாளர் ஊ. பு. அ. சௌந்திர பாண்டிய நாடார் எம். எல். சி. அவர்களுக்கும் நல்வரவு வந்தனோபசாரப் பத்திரங்கள் 1929 ம் வருஷம் பிப்ரவரி மாதம் 9 தேதி மாலை 2 மணிக்கு கமுதி வித்தியாபிவிருத்தி சங்கத்தின் முன் அமைத்திருக்கும் சுதந்திர ஹாலில் வாசித்துக்கொடுக்கப்படும். ஒரு நிருபர்.

நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பழனி சி. எம். சாமி.

குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல் கஷ்ட சுவாசம், சோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ. 16. 6 நாள் புட்டி ரூ 4. வி. பி. சார்ஜ் வேறு.

ஒரு பிரபல டாக்டர் சொல்வதைக் கவனியுங்கள்.

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அயச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இவ்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்று கூறுகார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமென்னும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி சொஸ்தமான பின்பு அயச்செந்தூரம் பலம் உண்டாவதற்காகக்கொடுத்து வந்தேன். மேற்படியாருக்கு பூரண பழைய பலம் ஏற்பட்டு வியாதியஸ்தர் ரொம்பவும் தங்கள் மருந்துகளின் பெருமையையும் அருமையான குணத்தையும் சொல்லி சந்தோஷப்படுகிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடித்த பெருமுறை மருந்துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27,

பழனி சி. எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் கீழ்வுச் ... ண்டது. புட்டி 15ரூ.
" , நாகபஸ்பம் மூலத்திற்கு புட்டி 1-க்கு 4 ரூ.
பிரமேக சிவாமணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1க்கு 2 ரூ.
மருந்து முதலிய அனுப்ப சேகரங்களுக்கு ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி சித்தியானந்த வைத்தியசாலை,
பழனி S. I.

சென்னை ஏஜண்டு ஆபீஸ்:— முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

# தன் மதிப்பைக் காக்கக் கற்ற ஜாதியாரே தலை தூக்குவார்கள்.

(கைவல்ய சாமியார் எழுதுவது)

நமது செங்கல்பட்டில் ஒன்றுசேர்ந்து கூடின கூட்டமும் ஆடின ஆட்டமும் பாடினபாட்டுக்குப் பக்கத்து மேளமும் "மசான வைராக்கியம் வீடு போனவுடன் விட்டுப்போகுமாம" என்பதுபோல அவரவர்கள் ஊர் போய்ச்சேர்ந்ததும் மகாநாட்டுத் தீர்மானங்களை விட்டுவிட்டார்களா, விடவில்லையா என்பதை அவர்கள் வாழ்க்கையின் பின் சரித்திரத்திலிருந்து அறிய வேண்டும்.

தன்மதிப்பு உங்களிடமிருக்குமானால் உங்கள் சமயத்தில் நீங்கள் சூத்திரர்களாக இருப்பதற்குக் காரணமென்ன? சூத்திரன் என்பவன் சமயத்தில் தன் மதிப்போடு எப்படி இருக்கமுடியும்? சூத்திரன் என்றால் நிகண்டில் கிலேசமுடையவன் அதாவது எப்போதும் துக்கத்தோடிருப்பவன் என்றும், தரும சாஸ்திரமென்னும் ஸ்மிருதியில் அடிமை, தாசிமகன், ஏவல்பணி செய்வோன் என்றும், இதிகாசங்களில் ஆச்சாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், கண்டதைப் புசிப்போன் என்றும். (பன்றிதான் கண்டதைப் புசிக்கும்) அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஆசாரத்தைக்கொண்டே மத சம்பந்தமான ஏற்பாடுகள் இன்று வரையிலும் நடந்து வருகின்றன. கிராமங்களிலிருக்கும் ஒரு கூட்டத்து ஆதிதிராவிடர்களை நீயார்? நீ யார்? என்று கேட்டால் கிறிஸ்தவனான ஆதி திராவிடன் "அவன் ஞானஸ்நானம் பெற்றவன், இவர்கள் அஞ்ஞானிகள்" என்கிறான். மற்றவர்களைக் கேட்டால் "நாங்கள் அஞ்ஞானிகள், அவர்கள் கிறிஸ்தவர்கள்" என்கிறார்கள். இவர்களுக்கு அஞ்ஞானிகள் என்பதன் அர்த்தம் தெரிந்தால் தங்களை அஞ்ஞானிகள் என்று சொல்லிக்கொள்ளமாட்டார்கள். இவர்கள் தங்களை ஆதிதிராவிட கிறிஸ்தவர்கள் என்றும் சொல்லுவதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அதுபோல சூத்திரன் என்பதின் அர்த்தம் தெரிந்திருந்தால் நம்மவர்கள் சூத்திரர்என்று தங்களைச் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். பாப்பானும் அவன் புஸ்தகமும் சொல்லுவதையும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்

ஆதி திராவிடர்களுக்கு தங்களையோ இந்த சமூகத்தைப்பற்றியோ அரசன் கடவுளைப்பற்றியோ தங்களைக்காலில்போட்டு மிதித்து கடைசியில் தள்ளிவிட்ட கதைகளைப்பற்றியோ தங்களுக்குக்கல்வியைச்சொன்னால்நரகம் வருமென்று சொல்லும்சாஸ்திரஏற்பாட்டைப்பற்றியோஒன்றுமே தெரியாது. இவர்களுக்குக்கல்வி யறிவோ சமய ஒழுங்கோ சமூகச் சேர்க்கையோ வராமலிருப்பதற்கு அநேக நாட்களுக்கு முன்னரேயே எல்லா வழியையும் அடைத்தாய் விட்டது. அதுபோல பிரமஞானமும் விசேஷ வாழ்வும் சூத்திரனுக்கு இடையாதென்று முன்பே பிராமணன் விதிபோட்டு தனது ஸ்தானத்தை முன் ஜாக்கிரதையாலே கெட்டிப்படுத்திக் கொள்வதற்கு ஜனங்களின் அறிவை ஒடுக்கிவிட்டான். அறிவின் வேர்களை இவர்களிடமிருந்து பறிப்பதற்காக பலவிதயான நூல்கள்செய்து கடவுளால் கொடுக்கப்பட்டவையென்று பயப்படுத்தியும்வைத்தான் அதனால் சூத்திரனுடைய தலை பிராமணனுடைய பாத தூளியிலே சுடுபட்டிருப்பதை ஜாக்கிரதையாகக் காக்க வேறுசிரமம் வெண்டியதில்லையாயிற்று. சமஸ்கிருத சாஸ்திர வகுப்பில் இன்றைக்கும் உங்கள் பிள்ளைகளைச்சேர்த்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்களே அதற்குக்காரணமென்ன? 'தாசி மக்களாகவும ஒழுக்கம் கெட்டவர்களாகவும் ஆசாரம் கெட்டவர்களாகவும் இருக்கும் சூத்திரனை உங்களுக்குச்சாஸ்திரம் சொன்னால் சொல்லி வைக்கும் பாப்பானுக்கு நரகம் வந்துவிடும்' என்று அவர்கள் தரும சாஸ்திரம் சொல்லுவதால் சாஸ்திர வகுப்பில் உங்கள் பிள்ளைகளைச்சேர்த்துக்கொள்ளமாட்டேன் என்கிறார்களே தவிர வேறு காரணம் ஏதாவதுண்டா? இருந்தால்எங்களை நாஸ்திகப்பிரசாரகர்கள்என்றுசொல்லும் சமய வாதிகளோ பண்டிதர்களோ சொல்லட்டும். மானத்தையும் உள்ளமென்பதையும் அடிக்கடி அழித்தழித்து மழுங்கச்செய்யும் குணமும் விபரமாக விளக்கிக்காட்டாத இலக்கியப் பதமும் பட்டும் படாததுமான இங்கிலீஷ் தோரணைப் பிரசங்கங்களும் இனி நம்மைவிட்டு ஒழிய வேண்டும்.

சைவர்களில் தொண்ட மண்டலமென்றும் ஓதுவாரென்றும், அதியுயர்ந்த தேசிகர்கள் என்றும் ஆச்சார ஒழுக்கத்தில் உயர்ந்த தமிழர்களென்றும் சொல்லிக்கொள்ளும் உங்கள் பிள்ளைகளை சாஸ்திர வகுப்பில் சிதம்பரப்பள்ளியில்கூட சேர்ப்பதில்லை என்றால் உங்கள் ஆச்சாரங்களும் அனுஷ்டானங்களும் பாப்பான் பல்லவியைப் பாடவா இருக்கிறது. நீங்கள் சொல்லும் தமிழ் வேதத் தேவாரம் நம்முடைய சிவபெருமான் கோவில்களில் பூசைக்குப்பின்னும் படிக்கப்படாது, பிரசாதம் கொடுப்பதற்கு முன்னும் படிக்கப்படாது, வீட்டிற்குப் போகையிலேதான் படிக்கவேண்டுமென்று கோவில்களில் நடந்துவரும் ஏற்பாடும் அதற்கு சிறிது முரண்பட்டால் உங்களையும் நம்முடைய தேவாரத்தையும் ஓட்டிவிடுவதும் நீங்கள் பார்த்ததில்லையா? கேட்டதில்லையா? [illegible] வாரம் படிப்பதை தடுத்து விட்டதாக பத்திரிக்கையில் நீங்கள் படித்திருக்கலாம். நீங்கள் சூத்திரனென்பதும் தேவாரம் சூத்திரபாஷை என்பதும் தவிர இதற்குவேறு காரணமேதாவதிருந்தால் சைவப் பண்டிதர்களே சொல்லுங்கள். இதைக்கேட்க வருகிறவர்களை நாஸ்திகர்களென்று சில பண்டிதர்கள் சொல்லுவதும் உங்களில் சிலர் தலையசைப்பதுந்தானோ தன் மதிப்பைக் காப்பாற்றுவது? ஜஸ்டிஸ் கட்சியில் யார் இருந்தால் என்ன? யார்போனால் என்ன? அந்த கட்சியால் நன்மை யடைந்தவன் அதற்கு உதவி செய்யாமல் அவன் நாசமாகப் போனாலென்ன? தரும சாஸ்திரம் சொல்லுவதுபோல நீங்கள் தாசிமக்களான அடிமைகளா? இதிகாசம் சொல்லுவதுபோல் ஆசாரமில்லாமல் ஒழுக்கம் கெட்டு கண்டதைப் புசிப்பவர்களா? என்பதே இங்கு விசாரம்.

சூத்திரன் என்னும்இழிவுப்பேரைக்கற்பிக்கும் நீங்கள் பிறந்த தாய்வீட்டிலிருந்து வளர்ந்து பள்ளிக்குப்போய் படித்து பக்தியையடைந்து பாடைஏறி பரலோகத்திற்குப்போய் பாப்பானுக்குக்கொடுக்கும் தான தருமத்தால் அங்கிருந்து சந்திர மண்டலத்தின் வழியாக சூரிய மண்டலத்தைத்தாண்டி அங்கிருந்து பாப்பானின் தயவில் உங்கள் மகன் பாப்பானுக்குப் படைக்கும் பதார்த்தத்தால் பிர்மலோகம் போய்ச்சேர்ந்து பாப்பான் எழுதின ஏட்டை பாப்பானிடமே கேட்டுத் தெரியாமல் தானாகவே படித்த குற்றத்தால் பிர்மலோகத்தின் தூதர்கள் நாக்கை யறுத்து அடித்துத் துரத்தி அங்கிருந்து பூலோகத்தில் நீங்கள் வந்து பிராமணனுக்கும் வைசியப் பெண்ணுக்கும் பிறக்கிற வரையிலும் சூத்திரனுக்கும் பிராமணனுக்கும் அதாவது தமிழனுக்கும் பாப்பானுக்கும் சமய விதிகளும் தர்ம ஞாயங்களும் வெவ்வேறாகவே வேதத்தில் விதித்திருக்கிறது. இந்த வித்தியாசத்திற்குக் காரணமென்ன? கடவுள்சொன்ன வேதத்திலும் அவரால் அனுப்பப்பட்ட பெரியவர்களிடத்திலும் இந்த வித்தியாசம் எப்படி வந்தது? இந்த வித்தியாசமுடைய கடவுளும் கடவுளா? இப்படி வித்தியாசம் கற்பித்தவர்களும் பெரியவர்களா? என்று நாங்கள் கேட்டால் நாஸ்திகர்களா? பெரியவர்களைத் தூஷிக்கிறவர்களா? நல்ல அம்சங்கள் எத்தனையோ அதிலில்லையா குற்றத்தை நீக்கிக் குணத்தையல்லவோ கைக்கொள்ள வேண்டுமென்று சமாதானமும் சொல்லுகிறீர்கள். எல்லாவித லக்ஷணமும் நல்ல குணமுமுடைய பெண்ணிற்கு பெண் குறி இல்லாவிட்டால் குடும்ப விர்த்திக்கு, பெண்ணின் மற்ற விசேடங்களால் என்ன பிரயோஜனம்? அழகும் படிப்பும்பணமுமுடைய வாலிபனுக்கு ஆண்மையில்லாத அமைப்பிருந்தால் அவனை விவாகம் செய்யும் பெண்ணின் வாழ்க்கைக்கு அவனிடமிருக்கும் நல்ல குணத்தால் வரும் நன்மை எதற்கு? காதலன் காதலி இவர்களின் வாயினின்று வந்த வாசனைத் திரவியங்களும் அணிந்த கதம்ப கஸ்தூரிச் சந்தனக்குழம்புகளும், மைந்தர்கள் கடித்தெறிந்த பலகாரத்துண்டுகளும், கிலேப்பி சீராவும், கோவில் சுவாமி பிரசாதங்களும், வீட்டோரத்தில் பாய்ந்து போகும் சாக்கடையில் மிதந்து தான் போகிறது. அதை முகந்தாலும் முத்தமிட்டாலும் அதிலிருக்கும் இரத்தத்தை உறுஞ்சும் கொக்கிப் புழுக்களும், இருதயத்தைத் தின்னும் க்ஷயரோகப்பூச்சிகளும் தேகத்தைத் துளைக்கும் சுரக்கிருமிகளும் மனிதனை விடாது. அந்தச் சாக்கடைத் தண்ணீரை முனிசிபாலிட்டியார் வடிகட்டிப்புல்லுக்குப் பாய்ச்சிப் புல் வளர்த்து அந்தப் புல்லை அழகும் ஆரோக்கியமுமுடைய பட்டாளத்துக் குதிரைகளுக்குப் போட்டாலும் அந்தப் புல்லைத் தின்னும் குதிரைகளுக்கு [illegible] நீங்கள் கேட்டதில்லையோ.

நிகண்டோ தேவபாஷை. தரும சாஸ்திரமோ ரிஷிகள் சொன்னது. அதை நம்பாதவனோ நாஸ்திகன். இதிகாசங்களோ தெய்வங்களின் அவதாரம். அதன் ஆதாரத்தைக் கொண்டு அதன் கதைகளை தமிழ் வேதமாகப் பாடினவர்களோ கடவுள் அருட் பாலுண்ட ஆச்சாரிகள். இத்தனையும் சேர்ந்ததே நமது சமயங்கள். இவைகள் அத்தனை பெருமையுடையவைகளாக விருந்தாலும் அதிலும் நாமெல்லாம் சூத்திரர்கள் தான். நம்மைப்பய முறுத்திக் கொண்டிருக்கும் பழம் பூச்சாண்டியான செல்லரித்த ஏடுகளை, நம் செவியைப் பிடித்துக் கொண்டு கிழிக்கும் அதன் மூட நம்பிக்கைகளை விட்டுத்தொலைத்தாலே தன் மதிப்படையலாம். எல்லா தேசங்களிலும் சிலர் தமது சமூகத்தின் இயற்கைப் பிரதிநிதிகளாகப் பிறந்து சமூகங்களின் கஷ்டங்களைத் தாம்பொறுக்கிறார்கள். எதிர்ப்பை யெல்லாம் வெட்டிப் பாதை போட்டு, மற்றவர்கள், பின் வருவதைஎளிதாக்குகிறார்கள் உண்மை யென்ற கடை சத்தியத்தினிடையே கண்விழித்து உதயம் வருமென்று காத்திருக்கிறார்கள்.

இங்கிலீஷ் படித்து கலாசாலை முத்திரை வாங்கின கனவான்களே நாங்கள் சொல்லும் நியாயம் உங்கள் படிப்பிற்கு சிறிதேயானாலும் உங்கள் புத்திக்கு உண்மையல்லவா? ஐரோப்பாவிலும் முன்னொரு காலத்தில்எல்லா விவகாரங்களிலும் பாதிரிகளுடைய அதிகாரம் மூர்த்தண்யமாக நடந்தது எங்கும் வீசியிருந்த பாதிரி வலையை அறுத்த பிறகுதான் ஐரோப்பிய ஜனங்கள் ஸ்வராஜ்யப்பாதையிலே கால்வைக்க இடமுண்டாயிற்று என்று நீங்கள் படித்ததை எந்தச் சட்டைப் பையில்போட்டிருக்கிறீர்கள். ஸ்பெயின் தேசம் இங்கிலாந்தின் மீது சண்டை தொடுத்த காலத்தில் ஸ்பெயின் தேசத்து கப்பற் படை கோவில் விவகாரங்களுக்குக் கட்டுப்பட்டு ஜாதி மரபுப்படி அதிகாரம் வகித்து அசையாத மாமூலை இரும்புப் பிடியினின்

(இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(12-ம் கட்டுரை)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்)

இராமன் கங்கையின் தென்கரை யடைந்து நடந்து போவதை அவன் தலைமறையும் வரை குகன் சுமந்திரனோடு பார்த்திருந்து விட்டுச் சுமந்திரனையழைத்துக்கொண்டு தன் ஊரையடைந்தான். பின் அவன் தூதர்களை யனுப்பி இராமன் பரத்துவாசனோடிருந்ததையும் அவனிடம் வழி கேட்டுத் தெரிந்து கொண்டு சித்திரக்கூடம் வரையிற் போனதையும் அறிந்து கொண்டு சுமந்திரனிடம் கூறினன். அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு சுமந்திரன் மூன்றும் நாள் மாலையில் கவலையோடும் தேருடன் அயோத்தியை யடைந்தான். அவன் தசரதனை அணுகி இராமன் சொல்லியனுப்பியதைக் கூறினன். அதைக் கேட்ட தசரதன் மூச்சற்றுக் கீழே விழுந்தான். அவனை கோசலையும் சுமித்திரையும் வாரி யெடுத்துக் கட்டிலில் கிடத்தினர். கோசலை அவனை நோக்கி "அரசே! சுமந்திரனிடம் ஏன் பேசவில்லை? இந்த அநியாயத்தைச் செய்து விட்டு இப்போது ஏன் வெட்கப்படுகிறீர். என்னைத் திருப்தி செய்யத்தாங்களும் துக்கப்படுவதுபோல் காட்டிக்கொண்டால் எனது துக்கம் தணியுமா? ஆகையால் அந்தப்பாசாங்கு வேண்டாம். துக்கப்படாமலிருந்தால் யாராவது தீர்திப்பார்களே யென்று பயந்து உலகப்பழிப்புக்கஞ்சி வருந்துகிறீரோ? அது வேண்டாம். இங்கே கைகேயி இருக்கிறளென்று அஞ்சி இராமனைப்பற்றிய செய்தியைக் கேட்காமலிருக்கிறீரோ? அவள் இங்கே இல்லை. ஆதலின் தைரியமாகப் பேசும்" என்று கூறி மூச்சற்று வீழ்ந்தாள்.

மூச்சடைந்த மன்னன் சுமந்திரனை யழைத்து வினவினன். சுமந்திரன் "இராமன் என்னிடம் சொல்லியனுப்பியதைக் கூறுகிறேன். அரசனையும் கைகேசியையும் பரதனையும் மரியாதையாக நடத்தவேண்டுமென்று கோசலையிடம் சொல்லச் சொன்னன். பரதனிடத்தில் கோசலையை மரியாதையாக நடத்தும்படி சொல்லச் சொன்னன். இதைச் சொல்லும்போது இராமன் துக்கத்தால் கண்கள் சிவக்க மளமள வென்று கண்ணீர் வடித்தான். இலக்குவன் இராமனைப் போல் மனத்திலிருக்கும் எண்ணங்களை மறைக்க முடியாதவன். அவன் தசரதர் மிகவும் அநியாயம் செய்து தங்களைத் துன்பத்துக்காளாக்கி விட்டதாகவும் அநியாயக்காரராகிய தசரதரைத் தன் தந்தையாகத் தான் மதிக்கவில்லை யென்றும் விவேகமற்று நீதிதிறம்புவரைத் தள்ளவேண்டுமென்றும் இராமனைக் காட்டுக்கனுப்பி மறம் புரிந்த தசரதர் எவ்வாறு அரசாக இருக்க முடியுமென்றும் கோபத்தோடு கூறச்சொன்னன். சீதையோ மனத்தில் நிறைந்த கவலையால் பெருமூச்சு விட்டுக்கொண்டு பிசாசம் பிடித்தவளைப் போல ஒன்றும் தோன்றமல் திகைத்து நின்றாள். துக்க மிகுதியால் கண்ணீர் வடித்துக்கொண்டு ஒன்றும் பேசவில்லை. அழுது கொண்டு என்னையும் தேரையும் பார்த்துகொண்டே நின்றாள். நான் புறப்பட்டேன். ஆனல் இராமன மறுபடியும் என்னை அழைப்பானே என்று எண்ணி அவனுடைய நண்பனன குகனுடன் மூன்று நாளிருந்தேன்; ஊரில் எல்லோரும் இராமனை நினைத்து வருந்துகின்றார்கள்" என்று கூறினன். அதைக் கேட்ட தசரதன் "அநியாயமாய் மோசம போனேனே. அழகிற் சிறந்த இராமனுடைய முகமண்டலத்தை நான் பார்க்காவிட்டால் கட்டாயம் இறந்தே போவேன். என் அதிகாரம் செல்லுவது உண்மையானல் இப்போதே என்னைத் தேரிலேற்றி இராமனிடம் கொண்டுபோய் விடு" என்று அழுது கீழே வீழ்ந்தான். கோசலையும் தேரைத் திருப்பித் தன்னை இராமனிடம் சேர்க்கவேண்டினள். சுமந்திரன் அவளை நோக்கி "சீதையும் இராமனும் கவலையற்று வாழ்கின்றார்கள். கைகேசியைப்பற்றி சீதை ஒரு விரோதமான வார்த்தை சொன்னள்" என்றான். உடனே அவன் "என்ன காரியம் செய்தேன். சீதை கைகேசியைப்பற்றி வெகு கடுமையாகப் பேசிய சொற்களை இப்போது கூறினல் கோசலைக்குப் பிரியமாயிருக்குமென்று சொல்ல ஆரம்பித்து விட்டேனே. அதைக்கேட்டால் கிழவராகிய அரசரும் அவருடைய மனைவியும் உயிரை விட்டாலும் விடுவார்களே. இதை எப்படியாவது மறைக்க வேண்டுமென எண்ணி "அது எனக்கு நினைவுக்கு வரவில்லை. கவலைப்படவேண்டாம்" என்று தேற்றினன்.

கோசலை தசரதனைப் பார்த்து "நீர் மிகவும் அபகீர்த்தியை விளைவிக்கும் செயலைச் செய்து விட்டீர். இதுவரையில் புதுமையான அன்னங்களையும் மாமிசங்களையும் உண்ட சீதை காட்டில் யாது செய்வாள்? ஐயோ! இராமனைக் காண்பேனு? திரும்பி வந்த போது பரதனுணும் நாட்டை அவன் கொடுத்தாலும் இராமன் ஏற்கமாட்டான். தம்பி ஆண்டதை அண்ணன் ஆளுவானு? வீரனகிய இராமன் தந்தையாதலால் உம்மைக் கொல்லாது விடுத்தான். மீன் தன் குஞ்சுகளைத் தின்பது போல உமது மூத்த மகனைக்கொன்று விட்டீரே! என்ன அநியாயம்? பெண்களுக்குக் கதி கணவனே. அவனில்லாவிட்டால் மகன்; அவனுமில்லாவிடின் தந்தை முதலிய சுற்றத்தார். பெண்கள் பிறர்க்கு அடங்கியிராமல் ஒருக்காலும் தம்மனப்படி நடக்க முடியாதென்று விதியுளதன்றே? இப்போது நீரோ என் சக்களத்தி வசப்பட்டிருக்கிறீர். ஆகையால் உம்மை இழந்தது போலாயிற்று. என் மகனே துரத்தப்பட்டான். உறவினரோ அருகிலிலர். ஆகையால் எவ்விதத்திலும் என்னைக் கெடுத்து விட்டீர். இத்தீச் செயலைச் செய்து நீர் அடைந்த பயனென்ன? உமது ஆசை நாயகியான கைகேசியும் பரதனும் வாழ்ந்தால் போதுமா? பிறர் எப்படியானல் உமக்கென்ன!" என்று கொடிய சொற்களைக் கூறினள்.

இதைக்கேட்ட மனமுடைந்த தசரதன் மூச்சற்றான், தெளிந்தபின் கோசலை பக்கத்திலிருப்பதைப் பார்த்து மறுபடியும் மூச்சற்றான். அப்போது அவனுக்கு தான் முன் செய்த அறங்கொன்ற செயலொன்று நினைவுக்கு வந்தது. அதனல் அஞ்சி நடுங்கி வெட்கத்தால் தலை குனிந்து வணக்கமாகக் கைகூப்பி "நொடைந்த என் மனதை இன்னும் புண்ணுக்காதே. உன்னைப் பணிகிறேன். என்னை மன்னி" என்றான். கோசலை "இச்சொற்களைக் கூறி என்னை மறுபடியும் கொல்லவேண்டுமா? பிள்ளையைப் பிரிந்ததால் கடுமையாகப் பேசிவிட்டேன் மன்னியும். இது இராமனைப்பிரிந்த ஐந்தாவது இரவு" என்றனள். இரவு தொடங்கிற்று. தசரதன் தூங்கினன். பின் கொஞ்சநேரத்தில் விழித்துக்கொண்டான். அது இராமன் காடேகிய ஆறாவது நாள் இரவு. தசரதன் விழித்து "கோசலே! அநியாயமாக இராமனைக் காட்டிற்கனுப்பி விட்டேன். நான் இளவரசாக இருக்கும்போது ஒருநாள் வேட்டையாட ஆசைகொண்டு காட்டிற் சென்றேன். சரயு நதியின் கரையில் தண்ணீர் குடிக்க வரும் மிருகங்களைக் கொல்லலாமெனக் காத்திருந்தேன். யானை தண்ணீர் குடிப்பதைப் போலச் சத்தம் கேட்டது. உடனே அம்பெய்தேன். அது தண்ணீர் முகந்து கொண்டிருந்த ஓர் முனிவன் மேற்பட்டுக் கீழே விழுந்தான். உடனே அங்கே போய்ப் பார்க்க அம்முனி பூமியிற் கிடந்து புரண்டலறக்கண்டேன். அவன் நான் உனக்கென்ன கேடு செய்தேன். கிழவர்களாய் கண் தெரியாமலிருக்கும் என் தாய் தந்தையருக்குத் தண்ணீர் கொண்டு வர வந்த என்னைக்கொன்றயே. இதைப்போய் என் தந்தைக்குச் சொல். அவர் உன்னைச்சுட்டுச் சாம்பலாக்காதபடி அவரை வேண்டிக்கொள். எனக்குத் துன்பத்தை உண்டு பண்ணும் இந்த அம்பைப் பிடுங்கிவிடு" என்றான். மறுபடியும் 'என் தாய் சூத்திரப்பெண். என் தந்தை வைசியர். ஆதலின் பிரமஹத்தி வருமோ என்று வருந்தாதே! என்றான். நான் அம்பைப்பிடுங்க, என்னைப்பார்த்துப் பயந்து உடனே உயிரை விட்டான். நான் அவனுடைய தாய் தந்தையரிடம் போய் நடந்ததைக்கூறி மன்னிக்க வேண்டினேன். அவர்கள் 'நீ தெரிந்து செய்தால் உன் குலமே அழிந்து விடும். எங்களை என் மகனிடம் கொண்டு போய் விடு' என்றார்கள். நான் அவர்களை அவ்விடம் சேர்க்க அவர்கள் 'மகனே' நீ வேதத்தை அத்தியயனம் செய்வதை இனி நாங்கள் கேட்போமா?' என்று பலவாறு புலம்பி கிரியைகளைச் செய்தனர். அப்போது இறந்த முனிவன் ஒளியுருவை யடைந்தான். தேவேந்திரன் வந்து அவனை விமானத்திலேற்றிப் போனன். பின் தாய் தந்தையர் 'நீ அறியாத்தனத்தால் அவனைக்கொன்றதால் உன்னைச்சாம்பலாக எரிக்காமலிருக்கின்றோம் ஆகையால் நீயும் எங்களைப் போல புத்திர சோகத்தால் மரணமடைவாய்' என்று சபித்து எரியிற் புகுந்து விண்ணுலகடைந்தனர். அந்த மகானுடைய சொற்படி நான் இன்று புத்திரசோகத்தால் இறக்கப்போகிறேன். அநியாயமாக இராமனைத் துரத்தினேன். கோசலே! என்னைத் தொடு. இராமன் ஒரு தடவை என்னைத் தொட்டாலும் போதும்; ஒரு தடவை என் கண்ணில் பட்டாலும் போதும்; நான் பிழைத்திருப்பேன். அவனை நானிறக்கும் போது பார்க்க முடியவில்லையே. இராமனைப் பார்க்காததாலுண்டாகும் சோகம் என் உயிரைவற்றச் செய்கிறது. அவனுடைய பேரழகு வாய்ந்த மதுரமான வாசனை வீசும் முகத்தை அவன் திரும்பி வரும்போது பார்ப்பவர்கள் புண்ணியம் செய்தவர்கள்" என்றிப்படிக் கதறினன். பின் பாதி இரவு கழிந்தபின் துக்கந்தாங்காமல் உயிரை விட்டான். கோசலையும் சுமித்திரையும் அவன் பக்கத்திலே படுத்துத் துயின்றிருந்தனர். விடிந்தது மற்றைப் பெண்களெல்லாம் எழுந்து அரசன் செத்துக்கிடப்பதைப் பார்த்து அலறினர். அவர்கள் அலறுவதைக் கேட்டுக் கோசலையும் சுமித்திரையும் எழுந்து அரசனிறந்ததுணர்ந்து கதறினர். கைகேசி முதலிய பெண்களும் வந்து அரற்றினர். கோசலை தசரதனைக் கட்டிக்கொண்டு "அடி, கைகேசி! என் மகனை இருந்தாலும் இறந்தவனைப்போல் செய்து விட்டாய். கணவனையும் கொன்று விட்டாய். இனி நான் உயிர் வாழேன்: கணவரோடு உடன்கட்டை யேறுகிறேன்" என்றனள். மந்திரிகள் தசரதனுடைய பிணத்தை எண்ணெயிலிட்டுப் போற்றினர்; உறவினர் சிலர் கொளுத்தி விடுவோமென்று கூறினும் அவர்கள் பிள்ளைகள் வரும்வரை அச்செயலை நிறுத்திவைப்போமென்றனர். மறுநாள் காலையில் அமைச்சர், அந்தணர், குடிகளனைவரும் சபை கூடினர். அவர்கள் வசிட்டனை நோக்கி அரசனில்லாமையால் விளையும் கேடுகளைக் கூறி அரசனுடைய மகனில் யாராவது உடனே அரசனுக்குமாறு வேண்டினர். வசிட்டன் "மன்னன் அரசைப் பரதனுக்குக் கொடுத்துவிட்டான். ஆகையின் சித்தார்த்தன் முதலிய வீரர் உடனே பறப்

(இதன் தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

சென்னை பச்சையப்பன் ஹாலில்

## ஸ்ரீமதி ஜோதிர்மாயி கங்குலி அவர்களின் தலைமையில்

பிப்ரவரி 9, 10-ம் நாட்களில் நடைபெற்ற

## இரண்டாவது சென்னை மாகாண

# தீண்டாமை விலக்கு மகாநாடு.

விஜயம் செய்த பிரமுகர்கள்

சென்னை மாகாண இரண்டாவது தீண்டாமை விலக்கு மகாநாடு பிப்ரவரி 9உ மாலை பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் கல்கத்தாவைச் சேர்ந்த ஸ்ரீமதி ஜோதிர்மாயி கங்குலி அவர்கள் தலைமையில் கூடியது. மகாநாட்டுக்குத் திரளான பொது ஜனங்களும், அநேக மாதர்களும் வந்திருந்தனர். மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களுள் முக்கியமாக முதல் மந்திரி Dr. சுப்பராயன், அவரது மனைவியார், சர். ஏ. பி. பாத்ரோ, திவான்பகதூர்கள் பி. பாலக்குரசம் நாயுடு, டி. வரதராஜுலு நாயுடு, ராவ்பகதூர் ஆர். கிருஷ்ண ராவ் பான்ஸ்லே, ராவ்சாகிப்கள் பி. ரங்கநாதம் செட்டி, எம். ஸி. மதுரை பிள்ளை, ஸ்ரீமான்கள் டி. நல்லசிவம் பிள்ளை, ஏ. ராமசாமி முதலியார், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், வி. சக்கரை செட்டியார், கெத்தா ரங்கய்யா நாயுடு, ஆர். சீனிவாசன், ஜே. எஸ். கண்ணப்பர், என். ராமனுதன், ஸி. ஜெயராம் நாயுடு, பி. ராமனுதன், எம். தாமோதரம் நாயுடு, பசுதேவ், டி. சுந்தரராவ் நாயுடு, பி. எஸ். குருசாமி நாயுடு, ஜனார்த்தனம் நாயுடு, ஸ்ரீநாதன் நாயுடு, தண்டபாணி பிள்ளை, எர்னஸ்ட் கர்க், ரெவரெண்ட் பிட்மென், ராமச்சந்திரம் பிள்ளை, டி. ஏ. வி. நாதன், Dr. முத்துலட்சுமி ரெட்டி, ஸ்ரீமதி ஜீனராஜ தாஸ், ஸ்ரீமதி நாயகம் முதலானவர்களும் மற்றும் பலரும் வந்திருந்தனர். கூட்டம் மண்டபம் நிறையவும் வெளியிலும் நிறைந்திருந்தது.

மகாநாட்டு நடவடிக்கை.

திரு. ஏ. ராமசாமி முதலியார் பெருத்த கரகோஷத்தினிடையே மகாநாட்டுக்கொடியேற்று விழாவை ஆற்றினார்.

பின்னர் வரவேற்புக் கழகத் தலைவர் ராவ்பகதூர் ஆர். கிருஷ்ணராவ் பான்ஸ்லே கேட்டுக்கொண்டதற்கிணங்கி மகாநாட்டைத் திறந்து வைத்து சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் மிக ஊக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினர்.

ராவ் பகதூர் ஆர். கிருஷ்ணராவ் பான்ஸ்லே அவர்கள் பிறகு பெருத்த கரகோஷத்தினிடையே மகாநாட்டுப் பிரதிநிதிகளையும் மற்றையோரையும் வரவேற்று அரிய பேருரை செய்தனர்.

தலைவர் தேர்தல்.

பின்னர் வரவேற்புக் கழகத் தலைவர் சொல்லுக்கிணங்கி திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் அம்மகாநாட்டுக்கு கல்கத்தாவைச்சேர்ந்த ஸ்ரீமதி ஜோதிர்மாயி கங்குலி அம்மையாரைத் தலைமை வகிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதாகப் பிரேரேபித்தார்.

பின்னர் ஸ்ரீமதி நாயகம் அம்மையார், அப்பிரேரேபணையை ஆமோதித்துப் பேசியபின், ஸ்ரீமான்கள் பி. ராமனுதன், ரெவரெண்ட் பிட்மன், கிருஷ்ணமாச்சாரியார், ராமாஞ்சலு நாயுடு, கெத்தா ரெங்கய்யா நாயுடு, இரட்டைமலை சீனிவாசன், ஜே. எஸ். கண்ணப்பர், எஸ். ராமநாதன் முதலியவர்கள் ஆதரித்தார்கள்.

பின்னும் ஸ்ரீமான்கள் எஸ். எம். வ. சமத்சாயபுவும், எஸ். ராமநாதனும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியபின் தீர்மானம் பெருத்த கரகோஷத்தினிடையே ஏகமனதாக நிறைவேறியது, மகாநாட்டுத் தலைவி ஸ்ரீமதி ஜோதிர்மாயி கங்குலி மகாநாட்டுத் தலைமைப்பதவி வகித்தார்.

இந்நிலையில மகாநாட்டுத் தலைவிக்கும், வரவேற்புக் கழகத் தலைவர் திரு பான்ஸ்லேயுக்கும் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களுக்கும் நீண்ட கரகோஷத்தினிடையே அழகிய சரிகை மாலைகள் போடப்பட்டன.

தலைவர் சொற்பொழிவுச் சுருக்கம்.

நண்பர்களே!

உலகத்துப்பிறந்த மக்கள் அனைவரும் சகோதரர்களே என்று திண்மையாகக்கொண்ட இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தை எனக்கு அளித்ததற்கு உங்களுக்கு என் நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

மக்கள் அனைவரும் சகோதரர்களேயென்றும், சமூகத்திலும் சமயத்திலும் சட்டத்தின் முன்னரும் மக்கள் அனைவரும் சமமாகவே கருதப்படல் வேண்டுமென்றும் அறிவிக்க என்னை இங்கு அழைத்துள்ளீர்கள்.

சுயநலம் என்னும் பேயாகிய வர்ணாசிரம தர்மத்தை ஒழிக்கமுன்வந்த ராஜாராம் மோகன் என்னும் பெரியாருக்கும் உங்களுடன் சேரமுன் வர வழி பண்ணியசீர்திருத்தக்காரர்களுக்கும் பெரியார்களுக்கும் எனது நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

தீண்டாமை நோய்.

தீண்டாமை என்னும் பாரிசவாயு நோயானது தேசம் என்னும் உடலில் பாவி வருகிறதென்பதற்கு ஐயமில்லை. எனினும், அது அழிந்துகொண்டே வருகிறது என்பதிலும் சந்தேகமில்லை. தீண்டாமை, தேசிய வாழ்க்கையின் அடிப்படையையும் தேசப்பொருளாதார நிலையையும் சமூகத்தையும் அறநெறியையும் ஜீவ காருண்யத் தன்மையையும் அழித்துவருகிறது. தீண்டாமையை ஒழித்தாலன்றி இந்திய மக்கள் ஒற்றுமை யடைதல் முடியாதென்பதை அரசியல் வாதிகள் நன்குணர்ந்திருக்கின்றனர்.

பார்ப்பனரின் இறுமாப்பு.

நம்மைதீண்டாதவர், பறையர், சூத்திரர் என்றும் தம்மை உயர்ந்தவர் என்றும் பிராமணர் என்றும் கூறிக்கொள்ளும் எதிரிகளும் இத்தீண்டாமையை ஒழிப்பதைத் தடுக்கும் மற்றோரும் இன்னும் இருந்தே வருகின்றனர்.

இப்பார்ப்பனர்கள் சிறப்பான அடையாளத்துடனும் தீண்டாதவர்கள் சாதிக்குறியுடனும் உலகத்துப்பிறக்கவில்லையென்பதையும் அவர்கள் மறந்து விடுகின்றனர்.

ஒரே பெற்றோரிடத்திருந்தே அரசர்களும் மக்களைப் புசிக்கும் வகுப்பினரும் வந்தனரென்று சரித்திர வாயிலாக நாம அறிகின்றோம்.

சாதியின் உதயம்.

சமூகம் செம்மையாக நிலவும் பொருட்டு மக்கள் பலவிதமான தமக்குப்பிடித்த தொழில்களை மேற்கொள்வாராயினர். முதன் முதல் இந்நிகழ்ச்சியால் சாதியென்பது உண்டாயிற்று. பண்டை நாட்களில் சாதியென்பது பிறப்பால் கருதப்படவில்லை, ஒவ்வொருவருடைய தொழிலைப்பொருத்து நின்றது, அது ஒவ்வொருவருடைய மனப்பான்மையையும் பொருத்து நின்றது.

அதனால், மக்கள் தமக்கேற்ற தொழில்களை ஏற்றுக்கொள்வார்கள் ஆனார். அதினின்றும் சாதியென்பது ஒருவரைப் பொருத்தவரையில் நில்லாது அவருக்குப்பின் வருவோரும் அதனை ஏற்றுக்கொண்டனர். ஆகவே வெகு நாட்களாக கலப்பு விருந்தும் மணமும் நிகழ்ந்தே வந்தன. பட்டணிந்து அரசர் பக்கத்தே வீற்றிருக்கும் 'ஞானி'யையும் நெற்றி நீர் நிலத்துவிழ பாடுபடும் தொழிலாளியையும் சமமாக நம பண்டை இந்திய மக்கள் கருதி வந்தனர். ஒரு மனிதனது செயலே கருதத்தக்கதன்றி பிறப்பு அன்று. பரிசுத்தமான மனதையுடையாரான ஒருவரை அவர் கருப்பாகவோ அல்லது அழகாகவோ இருந்தாலும் அதனை கவனியாது அறிவுடையோரும் செல்வர்களும் வணங்கினர்.

பின்னர் அவர்கள் மரபில் வந்தவர்கள் அதிகாரத்தில் ஆசைகொண்டு தங்களுக்கு தம் முன்னோருக்களிக்கப்பட்ட கௌரவம் வேண்டுமென்று கண் மூடித்தனமாக அவர்களது அறிவில் நம்பிக்கை வைத்த மக்களது உரிமைகள் அனைத்தையும் பறித்துக்கொண்டனர்.

சிறிய தொழில் புரிந்து வந்த மக்கள் அறிவு விருத்தியடைந்து முன்னேற்றமடைய ஏற்ற கல்வியும் வசதி இல்லாததினால் இருள்மூண்டு அறிவான மக்களது தன்மையையே இழக்கநேர்ந்தது.

ஓ வர்ணாசிரம தர்மிகளே! உலகத்தில் உங்கள் இறுமாப்பில் மிலேச்சர், சண்டாளர், சூத்திரர் என்று கூறுவோர்களே நிறைந்திருக்கின்றனர்; நீங்கள் ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஒரு கைப்பிடியினர் ஆவீர்கள்.

கிணற்றுத் தவளைகளே! நீங்கள் வசிக்கும் சிறியகிராமத்தைப் பெரிய உலகமாக

நினைத்து, தீண்டாத மக்கள் உங்களிடத்து மரியாதை பெரிதும்கொண்டு கீழ்ப்படிந்து நடப்பதால், அவர்களுக்கு இதுவரையில்தான் போதல்வேண்டும், இதற்கு மேல்போதல் வேண்டாம் என்று உபதேசம்பண்ணுகின்றீர்கள். நீங்கள் அழுக்கிலும் அறியாமையிலும் ஆழ்த்தி வந்தவர்களும் ஏனையோரும் எதிர்காலத்தில் இன்பம் எய்துமிடத்தில் 'ஜாதியில் உயர்ந்தவர்களில்மிகப்பெரியவர்'களும் விலக்கப்படுவார்களென்பதை நீங்கள் மறந்தீர்கள் போலும்.

ஜனத்தொகையில் ஐந்திலொருபங்குதொகையுள்ள மக்களை அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் ஏழ்மையிலும் ஆழ்த்திவைத்திருப்பதால் இந்திய நாடானது மிக்க ஏழ்மையான நிலையை அடைந்துள்ளதென்பதைக் சிறிதேனும் சிந்தித்தீர்களா?

### சாதி தெய்வ ஆணை அன்று

'பஞ்சமர்'களைத் தெருவில் நடக்காவண்ணம் தடுக்க யார் பார்ப்பனர்களுக்கு தெய்வீகமான உரிமை அளித்தது? எல்லாமக்களுக்கும் தந்தையாய் விளங்கி சூரிய வெப்பத்தையும், காற்றின் இனிமையையும், நீரின் தன்மையையும் எல்லா மக்களுக்கும் பொதுவாக அளித்த இறைவனோ? அல்ல. அல்ல. இச்செயல் சுயநலத்தால் எழுந்த தன்றி கடவுளால் பணிக்கப்பட்டதன்று.

### "விழியுங்கள்! எழுந்து நலமடையுங்கள்"

வீதிகளிலும் குளங்களிலும் கிணறுகளிலும் தண்ணீர் குடிக்குமிடங்களிலும் குளிக்குமிடங்களிலும நாய், பன்றி, வெறுக்கத்தக்க பூச்சிகள் புழுக்கள் முதலியன போகலாம். அவைகளை நீங்கள் உங்களது சகோதரர்களைவிட பெரிதாக மதிக்கின்றீர்களா? மதம், சமூகம், அறவியல் முதலியவற்றின் பேரால் ஏன் நீங்கள் தடைகள் பிறப்பிக்கின்றீர்கள்?

தீண்டப்படாதவர்கள் என்று கூறப்படுவோர்களே! நீங்கள் ஏகலைவன் அளித்தப் படிப்பினை மறவாதீர்கள். உயர்ந்த வகுப்புத் துரோணாச்சாரிகள் அநேகர் இருந்து உங்களது முயற்சிகளை அழித்துகொண்டு வந்தபோதிலும், உங்களைக்காத்துக்கொள்ள வேண்டியது உங்களது கடமையாகும்.

குகன் என்னும் சண்டாளனை ராமச்சந்திரர் அணைத்துக்கொண்டு குகனும் சபரியும் அளித்த உணவை அவர் ஏற்றுக் கொள்ள வில்லையா? கலப்புவிருந்து நடைபெற்றுவர வில்லையா? கலப்பு விவாகம் நடைபெற்றுவர வில்லையா?

தீண்டாதவர்கள் என்று கூறப்படுவோர்களைப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும அனுமதிக்கப்படல் வேண்டும். அவர்களது விருப்பங்களையும் வளரச்செய்ய அவர்களுக்கு ஏற்ற வசதிகள் புரியவேண்டும். தீண்டாதவர்களுக்காகப் பிரத்தியேகமாக பாடசாலைகள் அமைக்கப்படல் வேண்டுமென்று கேட்பதில் பயனில்லை. பிரத்தியேக பாடசாலைகள் கேட்பது அறநெறிக்கு ஒவ்வாததோடு, தேசப்பொருளாதார நிலையும் அதனுல்குலையும்.

தீண்டாதவர்கள் என்று சொல்லப்படுவோர் தாங்களும் உங்களைப்போன்று மக்களே யென்றும் உங்களிடத்துள்ள தெய்வீகத்தன்மையும் அவர்களிடத்துண்டென்றும் அறிந்துள்ளார். அவர்கள் இனிமேல் தீண்டாத வகுப்பினர் அல்லர்.

### திரு நாயக்கர் சொற்பொழிவு.

பிறகு திரு ஈ. வே. ராமசாமி நாயக்கர் "மனித வாழ்க்கையின் நன்மைகளை உத்தேசித்தும் ஜீவகாருண்யத்தை முன்னிட்டும் தேச முன்னேற்றத்தை பொருத்தும் நம் நாட்டில் பெரும் பகுதியினர்மீதும் சுமத்தப்பட்டுள்ள தீண்டாமை என்னும் கொடிய தடையை உடனே விலக்கவேண்டுமென்று இம்மகாநாட்டார் அபிப்பிராயப்படுவதால் சமூதாய ஊழியர்களும் தேச பக்தர்களும் சங்கங்களை ஸ்தாபித்து தீண்டாமையை ஒழிக்கும் நோக்கத்தில் வெற்றி பெறும் பொருட்டு பொதுஜனங்களிடை இடைவிடாத பிரசாரம் செய்து அவர்களைக் கண்விழிக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றனர்" என்னும்தீர்மானத்தைப்பிரேரேபித்துப் பேசுகையில் கூறியதாவது:—

வெகுகாலமாகவே தீண்டாமை என்பது நியாயமானதல்ல என்பதை எடுத்துக்காட்டி அக்கிரமமானதென்பதையும் விளக்கிப் போராடி வந்திருக்கின்றோம். ஆயினும் இத்தொல்லை காரியத்தில் நீங்கியதாய்த் தெரியவில்லை. எங்கு நிர்ப்பந்தமிருக்கின்றதோ அங்கு கொஞ்சம் நீங்கியிருக்கின்றது. அதாவது உதை கொடுக்குமிடத்தில் தீண்டாமை நீங்குகிறது (நகைப்பு) மனிதத் தன்மையினுலும் ஜீவகாருண்யத்தை முன்னிட்டும் இத்தீமையை ஒழிக்கவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுமபோது இத்தீண்டாமை பலமாய் உட்கார்ந்துகொள்வதைக் காண்கிறோம். (நகைப்பு) இத்தகைய தீண்டாமை என்னும் தீமைக்கு யாதொரு ஆதாரமும் கிடையாது என்பதை எடுத்துக்காட்டுவதற்கு நாம ஒரு சிறிதும் யாரையும்விட இளைத்தவர்களல்ல.

நம நாட்டில் தீண்டாமைக்கு இடங்கொடுத்துக் கொண்டிருப்பது ஒரு வகையில் சாமியும் மதமுந்தான் என்று சொல்லவேண்டும். 'சொல்லுவதெல்லாம் நியாயந்தான், கடவுள் அல்லவா அப்படி படைத்துவிட்டார், அதற்கு என்ன செய்வது' என்று சிலர் கடவுள்மீது பழியைச் சுமத்துகின்றனர். மற்றும் சிலர் 'என்ன செய்வது, மதமஇதற்கு இடங்கொடுக்கவில்லையே' என்று மதத்தின்மீது பழிபோடுகின்றார்கள். ஆதலால் இத்தீண்டாமையைத் தைரியமான போராட்டத்தினுல்தான் ஒழிக்கக்கூடியதாயிருக்கின்றது. "கடவுள் எங்கும் நிறைந்த சர்வ சக்தியுள்ளவர், பட்சபாதமற்றவர்" என்று சொல்லிக்கொண்டு "கடவுள்தான் தீண்டாதவர்கள் என்ற கொடுமைக் குட்பட்ட மக்களுக்கு ஆதாரம்" என்பது எவ்வளவு கேவலமானது. அநேகமாக அவர்தான் இந்த தீண்டாமையைப்படைத்தவர் என்றும சொல்லப்படுகின்றது. அது உண்மையாயின் அத்தகைய கடவுளை எப்படியாவது ஒழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்கவேண்டும் (கரகோஷம்) இந்த அநியாயமான சங்கதி அவருக்குத்தெரியாதென்றல் அதற்காக அவரை இன்னும் சீக்கிரமாய் ஒழிக்கவேண்டும். (கரகோஷம்) அவரால் இத்தகைய அநீதியை விலக்கவோ அல்லது அக்கிரமம் செய்பவர்களை அடக்கவோ முடியாதென்றால் அவருக்கு எந்த உலகத்திலும் இருக்கவேண்டிய வேலையே இல்லை. ஒழிக்கவேண்டியதுதான் நியாயம். (நகைப்பு)

கடவுளை முட்டாளும் அயோக்கியனும்சக்தியற்றவனும என்றுகேவலப்படுத்துவதற்கு என்ன மாறுபாஷையோ அதுதான் கடவுள் படைப்பினுல் தீண்டாமையிருந்து வருகின்றதென்று சொல்லப்படுவதென்பதே எனது அபிப்பிராயம். கடவுள்பேரில் பழி போட்டுவிட்டு தப்ப முயலுபவர்களின் செய்கை மிகக் கேவலமானது. அவர்களையும் எவ்வளவு சீக்கிரத்தில் ஒழிக்கின்றோமோ அவ்வளவு நன்மையுண்டு. அதுபோலத்தான் மதத்தின்மீதும் பழி சுமத்துவதும். எந்த மதத்தை எந்தக் கடவுள் அல்லது யார் நேரில் வந்து சொல்லிவிட்டுப் போயிருந்தாலும் எந்த சமயாச்சாரி எவ்வளவு அற்புதங்கள் செய்திருந்தாலும் தீண்டாமை என்னும் கொடுமைக்கு இடங்கொடுத்துக்கொண்டுள்ள மதத்தை உடனே ஒழிக்கவேண்டும்.

கடவுளும் மதமும் இத்தீண்டாமை விலக்கப்படுவதற்கு இடங்கொடுக்கவில்லை என்று சொல்லப்படுவதற்கு எதாவது ஆதாரங்களிருந்தால் அவை யார் சொன்னதானுலும் எப்படிப்பட்டதானுலும் அவற்றை நெருப்பைப்போட்டு பொசுக்கவேண்டும். (கரகோஷம்) காரியத்தில் உறுதியாய் நிற்காமல் வாயளவில் தீண்டாமையை ஒழிப்பதாகப் பேசுவதான அயோக்கியத்தனத்தினுல் ஒரு போதும் நாடுமுன்னேற்றமடையமுடியாது. புண் கண்ணில்பட்டால் அதை உடனே தொலைக்க மருந்து முதலியன போட்டுச் சிகிச்சை செய்யவில்லையா? ஆனுல், அது வலிக்கக்கூடாது எரியக்கூடாதுஎன்று மூடிவைத்துக்கொண்டு வாய்ச்சமாதானம் சொல்வது புழுத்துச்சாவதற்கு வழிதான்.

தீண்டாமை விலக்கு என்பது பிறருக்காகச்செய்யப்படும் பரோபகாரமான செய்கை எனக்கருதுவது அறிவீனம. அது மனிதத்தன்மையை நிலைநாட்டச்சுயமரியாதையைக் காக்க நாட்டின் விடுதலைக்கு அவசியமானதென்று கருதவேண்டும். (கரகோஷம்) நம்மைப் பொருத்தமட்டில் நமக்குக் கீழாக கருதப்படும் மக்களை நாம் கொடுமைப்படுத்துகின்றோம். இதற்கு நாம் வெட்கப்படவேண்டும். நமக்கு மேலாகக் கருதப்படும் ஒரு இனத்தார் நம்மைக்கொடுமைப்படுத்துகின்றனர். பஞ்சமர்கள் எனப்படுவோர்களுக்கிருக்கும் பழியைவிட நம்மிடத்திலிருக்கும் பழியை முதலில் ஒழிகக முயலவேண்டும். அப்பொழுது அது தானுய் மறையும்.

பெண்களையும் ஒரு தீண்டாத சமூகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது (நகைப்பு) தீண்டாமைவிலக்கு என்பது நம்முடைய கடமையானகாரியம். நாம் அது நன்மையை உத்தேசித்த காரியம் என்பதை உணரவில்லை. குருட்டுத்தனமாக அவர்கள் சொன்னுர்கள், அதில் எழுதியிருக்கிறது என்பதை நம்பிக்கொண்டு, அறிவைப்பொருத்தமட்டில் தீண்டாமைக்கு ஏதாவது ஆதாரமுண்டாவென்று ஆராய்ந்து முடிவுசெய்யாமல் இன்னும் மூடப்பழக்கங்களை பின்பற்றுவதைவிட வே

வலச்செய்கை வேறு ஒன்றுமே இல்லை, தீண்டாமை என்பது அறிவைப் பொருத்தும் ஆதாரங்களைப் பொருத்து மிருக்கவில்லை. ஆனால், முட்டாள் தனத்தையும் ஆணவத்தையும் அயோக்கியத் தனத்தையும் பொருத்துத்தானிருக்கிறது. (கரகோஷம்) மலத்தைத் தொட்டால் கழுவினால் போதும், மனிதனைத் தொட்டால் குளிக்கவேண்டுமென்பது சுகாதாரத்தின் பெயரிலா? அல்லது ஆணவத்தை முன்னிட்டா வென்று நான் கேட்கிறேன், (பெருத்த கரகோஷம்) சுயநலத்தை உத்தேசித்தோ அல்லது முட்டாள்தனத்தை உத்தேசித்தோ இந்த அயோக்கியத்தனத்தை வைத்துக்கொண்டிருப்பது மிகக் கேவலமானது. அவர் அப்படிச்சொன்னார், இவர் இப்படிச்சொன்னார், அதற்கு ஆதாரங்களிருக்கின்றனவென்றால் இன்னமும் அவற்றிற்கு இடம் கொடுக்கலாமா வென்று நான் கேட்கிறேன்? நந்தனை நாயன்மார்களுள் ஒருவராக்கி, பாணனை திருப்பாணாழ்வாராக்கிய புராணத்தை நம்பினால் நந்தன் அண்ணன் தம்பி பேரப்பிள்ளை முதலானவர்களை ஏன் அவர்களைப்பார்க்க கோவிலில் போகவிட்டு கும்பிடுவதற்கு ஏன் அனுமதிக்காமல் கொடுமை செய்யவேண்டும்? அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் ஒருவரெனக் கருதப்படும் ஒருவர் தன் குலத்தவரை கோவிலிலும் வரக்கூடாதென்று தடுத்து 63 குளவிக் கற்களை வைத்து பொங்கலும் புளியோதரையும் சாப்பிடுவதற்கென்று நாயன்மார்கள் பெயரையும் நந்தன் பெயரையும் ஆழ்வார்கள் பெயரையும் சொல்லிக்கொண்டு திரிவது எவ்வளவு கேவலமானது. (கரகோஷம்) தவிர அவர்கள் அருகில் வந்தால் நாற்றமடிக்கின்றது என்பதற்கு யார் ஜவாப்தாரி? குளிக்க இடமில்லை, ரஸ்தாவில் வரக்கூடாது, பொதுக்கிணறு குளத்திற்கு வரக்கூடாது, வண்ணான் இல்லை, அம்பட்டனில்லை என்றால் இத்தகைய அநியாயங்களுடன் நாற்றமடிக்காமல் மற்றபடி மணக்குமா வென்று நான் கேட்கிறேன். "சங்கராச்சாரியை" 15 நாட்களுக்கு ஒரு ரூமில் போட்டு (நகைப்பு) மூடிவைத்து குளிக்காமலிருக்கச்செய்து பாருங்கள். பிறகு நாற்றமெடுக்கிறதா மணக்கிறதா வென்று தெரியும். (நகைப்பும் கரகோஷமும்) "சுவாமியையும்" பத்துநாள் தண்ணீர் கொட்டி அபிஷேகம் செய்து கழுவாதிருந்தால் அதுவும் தான் நாற்றமெடுத்துக்கொள்ளும் (நகைப்பு)

பின்னும், அவர்கள் சாராயம் கள் முதலியவற்றைக் குடிக்கின்றனர். மாம்சம் தின்னுகின்றனர், என்றும் சொல்லப்படுகின்றது. சாராயம் யார் குடிப்பதில்லை? மாம்சம் யார் தின்பதில்லை? உற்பத்தியாகும் சாராயம் கள் முதலிய எல்லாவற்றையும் அவர்கள்தானா குடித்துவிடுகிறார்கள்? (நகைப்பு) குடித்துவிட்டு தெருவில் உருளுபவர்கள் மூக்கில்கள் ஒழுக கோவிலுக்குப் போகலாம், பிற மதஸ்தரான கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் பாதி வழி போகலாம். ஆனால் இந்துக்கள் எனப்படும் அவர்கள்மட்டும் கோபுரத்துக்கு வெளியே நிற்கவேண்டும். இத்தகைய கொடுமையைவிட நமதுசமயத்தில் வேறு என்ன இருக்கிறது. விடிய விடிய தெருவில் பன்றியும் கோழியும் என்ன தின்கின்றதென்பதைப்பார்த்துக்கொண்டிருக்கிறோம். (நகைப்பு) அவற்றைத் தின்பவர்களுக்கு தீண்டாமையில்லை. (கரகோஷம்) ஆனால் பச்சைப்புல்லையும் பருத்திக்கொட்டையும் தின்னும் மாட்டைத் தின்பவர்களுக்குத்தான் தீண்டாமை. (நகைப்பும் கரகோஷமும்) நியாயத்திற்கும் அறிவுக்கும் பொருந்துவதாயிருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டுமேயன்றி முட்டாள்தனமான அர்த்தமற்ற விஷயங்கள் எவற்றையும் எதன் பெயராலும் ஒருபோதும் ஒப்புக்கொள்ளக் கூடாது. (கரகோஷம்) கேளுங்கள்! கடவுள் பெயராலோ மதத்தின் பெயராலோ பழி போட்டு செய்யப்படும் அக்கிரமங்களை மற்ற நாடுகளில் அலட்சியம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள், அதனால்தான் அவர்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றனர்கள். அறிவுக்கும் நியாயத்திற்கும் பொருத்தமற்ற தீண்டாமை என்னும் தீமையை அடியோடு ஒழிப்பதில் நீங்கள் எதற்கும் பின்வாங்க மாட்டீர்களென்று நம்புகிறேன். (கரகோஷம்)

# தீண்டாமை விலக்கு மகாநாட்டு தீர்மானங்கள்.

---

### அனுதாபத் தீர்மானம்.

சக்ரவர்த்தி சொஸ்தமடைய வேண்டுமென்று பிரார்த்திப்பதாயும், காலஞ்சென்ற சுவாமி சிரத்தானந்தர், லாலா லஜபதிராய், பனகால் ராஜா, சர் டி. சதாசிவஐயர், சேஷகிரி அய்யர், ஸ்ரீ நாராயணகுருசாமி, சுவாமி ஈஸ்வரானந்தர் முதலியவர்கள் மரணத்தாலேற்பட்ட நஷ்டத்திற்காக வருந்துவதாயும் இரு தீர்மானங்கள் மகாநாட்டுத்தலைவி ஸ்ரீமதி கங்குலி அம்மையாரால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

### தீண்டாமை விலக்கு தீர்மானம்.

பிறகு திரு ஈ. வெ ராமசாமி நாயக்கர் "மனித வாழ்க்கையின் நன்மையை உத்தேசித்தும் ஜீவகாருண்யத்தை முன்னிட்டும் தேச முன்னேற்றத்தைப் பொருத்தும் நம் நாட்டில் பெரும்பகுதியினர் மீது சுமத்தப்பட்டுள்ள தீண்டாமை என்னும் கொடிய தடையை உடனே விலக்க பொதுஜனங்களிடை இடைவிடாத பிரசாரம் செய்து அவர்களைக் கண்விழிக்கச் செய்யவேண்டும்" என்னும்தீர்மானத்தைப்பிரேரேபித்துப் பேச ஸ்ரீமான் கெத்தா ரெங்கய்யா நாயுடு தெலுங்கில் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினார். பிறகு ஏகமனதாய் நிறைவேறியது.

### சமத்துவமான நகரவாசி உரிமை.

அடுத்தபடியாக திரு. சுரேந்திரநாத் ஆரியா அவர்கள் "தீண்டாமை என்னும் காரணத்தால யாருக்கும் நகரவாசிகளின் பொதுவான உரிமைகள் மறுக்கப்படக்கூடாதென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுவதுடன், இந்நாட்டு மக்களுள் சகல வகுப்பாரும் ரஸ்தாக்கள், ஆபீஸ்கள், குளங்கள், கிணறுகள், ஆஸ்பத்திரிகள், சத்திரங்கள்முதலாவ பொது ஸ்தாபனங்களில் தாராளமாய் விடப்பட்டு உபயோகித்துக்கொள்ளும் உரிமையளிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானத்தைப் பிரேரேபிக்க ஸ்ரீமான் எர்னஸ்ட்கர்க் அவர்கள் அத்தீர்மானத்தின் கடைசியில் "செல்வச் சிக்கன விஷயங்களில் வயது, ஆண், பெண், என்ற வித்தியாசமின்றி சமானமான வேலைக்குச் சமானமா கூலி கொடுக்கப்படவேண்டும்" என்பதையும் சேர்க்கவேண்டுமெனத் திருத்தப் பிரேரேபணையொன்று கொண்டுவந்து திருத்தம் ஸ்ரீமான் ஆரியா அவர்களால ஒப்புக்கொள்ளப்பட்டு முடிவில் திருத்தப்பட்டபடியே ஏகமனதாக நிறைவேறியது.

### வந்தனத் தீர்மானம்

பிறகு "தாழ்த்தப்பட்டவகுப்பு மாணவர்களுக்கு கலாசாலை முதலியவற்றிலும் பரீட்சைகளிலும் சேர்த்துக்கொள்ளப்படுவதன் சம்பந்தமாக பல சாதகங்கள் செய்யப்பட்டிருப்பதன் சம்பந்தமாகச் சர்க்காருக்கு மகாநாடுதன் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது" என்ற தீர்மானம் ஸ்ரீமான் டி. ராமச்சந்திரன் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான் ராமாஞ்சலு நாயுடு அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

### ஆலயப்பிரவேச உரிமை.

பின்னர் ஸ்ரீமான் என். தண்டபாணிப்பிள்ளை "தீண்டப்படாதார் என்பவர்களும் இந்துக்களாதலால் எந்த இந்து ஆலயத்திற்குள்ளும் சென்று கடவுளை வழிபடுவதில் தடுக்கப்படக்கூடாதென்றும் இம்மகாநாடு வற்புறுத்துவதுடன், இந்து ஆலயங்களனைத்திலும் தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேச உரிமையளிக்கும் விஷயத்தில் உடனே தக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று மதஸ்தாபனங்களின் நிர்வாகிகளை இம்மகாநாடு வற்புறுத்துகின்றது" என்னும் தீர்மானத்தைப் பிரேரேபிக்க திரு ராஜகோபால், திரு வி. ஜி. வாசுதேவ பிள்ளை ஆகியவர்கள் தீர்மானத்தை ஆதரிக்க ஏகமனதாக நிறைவேறியது.

### ஆக்ஷேபிக்கத்தக்க விளம்பரங்கள்.

பின்னர் ஸ்ரீமான் கலப்பன் அவர்களால் "காப்பி ஹோட்டல்கள், க்ஷவரக் கடைகள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலியவற்றில் தீண்டாதாருக்கு இடமில்லையென்று கேவலப்படுத்தும் விளம்பரங்கள் போடப்படுவதைக் குறித்து இம்மகாநாடு வருந்துவதுடன், அத்தகைய விடங்களிளெல்லாம் அவர்களை தாராளமாக விடப்படவேண்டுமென்று வற்புறுத்துவதுடன், தீண்டாத வகுப்பினரின் நண்பர்களென்று சொல்லிக்கொள்பவர்கள் அத்தகைய ஆக்ஷேபிக்கத்தக்க விளம்பரங்களுள்ள விடங்களுக்குச் செல்லாமல் நின்றுவிடவேண்டு மென்றும் கேட்டுக்கொள்ளுகின்றது" என்ற தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு திரு குப்புசாமி பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

### கிறிஸ்தவ ஆலயத்திலும் தீண்டாமை.

அடுத்தபடியாக ரெவரெண்ட் பிட்மன் அவர்கள் "சில கிறிஸ்தவ (சர்ச்சுகள்) ஆலயங்களிலும் தீண்டாமை என்னும் வழக்கம் அனுசரிக்கப்பட்டு வருவதற்காகவும், தீண்டப்படாதார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்

இதன் தொடர்ச்சி 14-பக்கம் பார்க்க.

# இனிச் செய்ய வேண்டிய வேலை

"ரிவோல்ட்" தலையங்கத்தின் மொழி பெயர்ப்பு.

சுயமரியாதை இயக்கமானது, நெடுங்காலமாக இந்திய சமூகத்தை பாழ்படுத்தி அதன் இரத்தத்தைக் கொஞ்சங்கொஞ்சமாக உறிஞ்சி உயிரை வாங்கிக் கொண்டிருந்த மூட நம்பிக்கைகளையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் அடியோடு ஒழித்து விடுவான் வேண்டி தங்கள் உயிர் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்யக் கூடிய பலராத்தன்னிடம் சேர்த்துக்கொண்டிருக்கிறது. மக்களின் அறியாமையை அனுகூலப் படுத்திக்கொண்டு அவர்களைப்பல வழிகளில் அடிமைப்படுத்தலை ஒழித்து பகுத்தறிவை வளரச் செய்வதற்காகவே இவ்வியக்கம் பாடுபட்டு வருகிறது. அதன் பலன்களும் திருப்திகரமானவைகளாகவே யிருக்கின்றன. வெகுகாலமாக சுயநலவாதிகளால் அழுத்தப்பட்டு அறியாமையில் ஆழ்ந்திருந்த பாமரமக்கள் மனித உரிமையை உணர ஆரம்பித்துவிட்டார்கள். பரம்பரைவழக்கம் என்பதற்காகவோ "பெரியோர் வாக்கு" என்பதற்காகவோ விசேஷமதிப்புக்கொடுப்பதில்லை. சுயநலமிகள் கொஞ்சங்கொஞ்சமாக ஒழிந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியமக்கள் தமது நிலையை உணர்ந்துகொண்டார்கள். இனி அவர்களை ஏமாற்ற முடியாது. காலப்போக்கும் சீர்திருத்தக்காரர்களுக்கே ஆதரவாயிருக்கிறது. பகுத்தறிவுக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாயிருப்பவைகளெல்லாம் மடிந்துகொண்டே இருக்கின்றன.

யாவராலும் விரும்பப்படும் ஒரு பெரிய இலக்ஷியத்தைக்குறித்து இதுவரை தன்னலந்தனியாகவும் புகழை இச்சிக்காமலும் தமக்குத்தோன்றியமுறையில்போராடிவந்தவர்களெல்லாம் முதல்முதலாக செங்கல்பட்டில் கூடப்போகிறார்கள். ஆகவே செங்கல்பட்டு மகாநாடானது சமூகச்சீர்திருத்த இயக்கத்தில் மிகமுக்கியமானதாகும். இங்கு நம்முழு ஆற்றலையும் திரட்டி ஒருங்கே எதிர்க்க ஆயத்தமாகவேண்டும். இனிநாம் தனிப்பட்ட ஒருமனிதனின் முயற்சியிலாவது இல்லாவிட்டால் வெற்றிகளிலாவது திருப்தியடைந்துவிடக்கூடாது. இனிச்செய்யவேண்டிய காரியங்களை ஜாக்கிரதையாக ஓர்ந்து நமக்கிருக்கும் ஆள்வலி, தோள்வலி, பொருள்வலி ஆகியவைகளைச் சரியாகக் கணக்கெடுத்து எல்லா அம்சங்களையும் கொண்ட சரியான ஒரு திட்டம் தயாரிக்கவேண்டும். மகாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளை, முரட்டுத்தனமான பயனற்ற விவாதங்களில் பொழுது போக்கக்கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறோம். வாய் வேதாந்தமானதும் வார்த்தைகள் நிரம்பியதுமான தீர்மானங்கள் செய்வதில் பயனில்லை. வாய் வேதாந்தங்களினாலும் இனிய வசனங்களினாலும் ஏமாந்து மோசம்போனவர்களைப்பார்த்து நாம் பயனடைவோம். நம் தீர்மானங்கள் எல்லாவித இயற்கை உணர்ச்சிகட்கும் தத்துவங்கட்கும் ஏற்ற முறையில் குறிப்பாகவும் துரிதமாகவும் நடைபெறக்கூடியவாறு வகுக்கப்பட்டு இருக்கவேண்டும். இக்காலத்தில் நம் நாட்டில் சிறப்பாகத் தமிழ் நாட்டில் இவ்வுணர்ச்சி தலைசிறந்து விளங்குகிறது. எனவே இவ்வுணர்ச்சியை முறையாகவும் சீராகவும் தொடர்ச்சியாகவும் நடைமுறைக்குக்கொண்டுவர வேண்டிய வழிகளைக் கவனிப்போம்.

நம் லட்சியம் இன்னது என்பது வெள்ளிடைமலை. எனவே நாம் அதைப்பற்றி விவாதிக்கவேண்டியதில்லை. நடைமுறையின் முற்போக்கு நடத்துவிப்பவருக்கு தக்கபடியும் கால தேசவர்த்தமானங்களுக்கு ஏற்றபடியும் இருக்கும். எனினும் முன்னேற்றத்தின் போக்கு ஸ்திரமானதே. அதாவது ஜாதி பேதம், பிறவியினால் உயர்வுதாழ்வு, சமஸ்காரம், மறுபிறவி, அவதாரம், சிலை வணக்கம், அதன் அண்ணனை புரோகிதம், மதச்சின்னம், சடங்குகளாகியவைகளை நாம் சீர்திருத்தமாகிய புதுக்கட்டடத்தைக் கட்டுமுன்னரே இடித்துத்தள்ளிவிடவேண்டும். பிறவியினால் உயர்வு உண்டு என்னும் எண்ணம் மக்கள் மனத்தினின்று நீங்கினாலொழிய தீண்டாமையை யொழித்தலும் பெண் மக்கள் முன்னேற்றமும் முடியாதவை. பிறவியினால் உயர்வு [illegible] என்னும் பொய்க் கொள்கையே ஜாதிப் பாகுபாட்டிற்கு இடங்கொடுத்தது. ஆண், பெண்ணினும் மேம்பட்டவன் என்னும் அகம்பாவமானது பெண்களைக் கோஷாக்களாகவும் சொத்துரிமையற்றவர்களாகவும் ஆண்களுடைய சொத்துக்களாகவும் ஆக்கியிருக்கிறது. சம்ஸ்காரங்கள் கலியாணத்தைக் கேலிக்கூத்தாக்கி இளமையின் சிறப்பை நாசமாக்கி விட்டது. மறுபிறவி, அவதாரங்கள் என்னும் கொள்கைகள் மக்களை நிரந்தரமான சோம்பேறிகளாக ஆக்கிவிட்டன. எனவே நம் மக்களுக்குள் மனித உணர்ச்சியை எழுப்பவேண்டுமானால் நாம் குருட்டு நம்பிக்கைகளின் மூலகாரணங்களை வேரோடு களையவேண்டும். நம் மக்கள் பழைய சின்னங்களையும் சடங்குகளையும் மந்திரங்களையும்பின்பற்றி நம்பிக்கொண்டிருக்கும் வரை எந்த இந்தியனும் பிறநாட்டாருடன் சம உரிமைக்குப் போராடமுடியாது. இந்த அறிவு ததும்பும் காலத்திலுங்கூட அறிவாளிகள் என்பவர்களும் சர்வகலாசாலைப் பட்டதாரிகள் என்பவர்களுங்கூட வெட்கமின்றித் தம் நெற்றிகளில் மதச்சின்ன மணிவதைப் பார்க்க விந்தையாயிருக்கின்றது. உயர்வைக் குறிப்பதாகச் சொல்லப்படும், தோள்களில் தொங்கும் பூணூலானது அணிந்திருப்பவனில் மனிதத்தன்மை அற்றதன்மையைத் தெளிவாய்க்குறிக்கிறது. ஓமம், திவசம், பிறப்பு இறப்பு முதலிய காலங்களில் சொல்லப்படும் மந்திரங்களும் மனக் கண்ணைக்கெடுத்து மனிதனை அஞ்ஞான இருளில் ஆழ்த்துகிறது. நாகரிக முற்ற சமூகமென்றால் சடங்குகளுக்குத் தண்டனை விதித்தாகவேண்டும். இக்கமாதிரிக் கொடியமோசஞ் செய்பவர்களைத் திமிவிட்டுக் கொழுந்துவிடும் தக்க தண்டனையாகாது. நம் உற்சவ காலங்களில் நடக்கும் குடிகாரச்சலகங்களும், அடிச்சண்டைகளும், ஆபாசங்களும் எந்தக்காலத்திலும் வேறு எந்த நாட்டிலும் இருந்ததில்லை. திருவிழாக்கள் தொலைந்து உடல் நலத்திற்கும் மனோநலத்திற்கும் வேண்டியவசதிகள் ஏற்படவேண்டும்.

சிலைவணக்கந்தான் எல்லாத் தீமைகளுக்கும் பிறப்பிடமாயிருப்பது. நாட்டின் மதிப்பைக் காப்பாற்ற எண்ணமுடைய ஒவ்வொருவனும் கற்சிலைகளைத் தகர்த்து சிலைகளையுருக்கி அவ்வுலோகத்தைக் கொண்டு ஆயுதங்களும் இயந்திரங்களும் செய்விக்க வேண்டும். மத சம்பந்தமாக விடப்பட்ட சொத்துக்களெல்லாம் நாட்டின் நலத்திற்கு உபயோகப்படுத்தப்படவேண்டும். மடங்களைப்பள்ளிக்கூடங்களாகவும் கல்லூரிகளாகவும் மாற்றவேண்டும். கோவில்கள் ஆஸ்பத்திரிகளாக வேண்டும். புரோகிதரை நீக்கவேண்டும். 'நரகத்திற்கு' அஞ்சக்கூடாது. சோதிடர், குறிகாரர், மந்திரவாதி முதலியவர்களைத் தண்டிக்கவேண்டும். சமஸ்கிருதத்தையொழித்து வேதங்களையும் புராணங்களையும்படிப்பதைத்தடுக்கவேண்டும். இப்போதுநடைமுறையிலுள்ள மொழிகளை விருத்தி செய்து விஞ்ஞான அறிவையும் தொழில் ஞானத்தையும் பெருக்கவேண்டும். சோம்பேறிப் பார்ப்பானுக்குச் சோறு போடுவதைத் தடுத்து, வேலையற்றவருக்கு வேலை கொடுத்து, கிழவர்களுக்கு ஜீவனோபாயம் அளித்துக்காப்பாற்றவேண்டும். ஒருவனே உழைப்பது என்பதை நீக்கி நாட்டின் வருவாயை நீதியாக அனைவருக்கும் பங்கிடவேண்டும். ஏகபோக உரிமைகளையொழித்து தன்னாட்சி முறையில் கைத்தொழில்கள் தாராளமாக விருத்தியாக ஏற்ற சாதனம் ஏற்படும்படியான பொருளாதார நிலையை யொட்டியே ஒரு திட்டம் நிறுவவேண்டும்.

இதில் குறிப்பிட்டுள்ளவை மட்டும் போதுமானதென்று நான் சொல்லவில்லை. ஆனால் நம் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உள்ள முக்கியமான அம்சங்களை மட்டும் இங்கு குறிப்பிட்டிருக்கிறோம். நம் முன்னேற்றத்திற்கு எத்தனை இடையூறுகள் வந்தாலும் அனைத்தையும் தடுத்து ஓட்டக் கூடிய தைரியமும் உறுதியுமுள்ள ஒரு அமைப்பை உண்டு பண்ணுவோமானால் தான் இச்செங்கற்பட்டு மகாநாட்டின்நோக்கம் பயன்பெற்றதாகும்.


முந்துங்கள்! முந்துங்கள்!!

குறைந்த விலை

## சுயமரியாதைப் பாடல்கள்

திரு. கே. குமாரவேல் அவர்களால் பாடப்பட்ட சுயமரியாதைப் பாடல்கள் வெளிவந்துவிட்டன. இதில் சுயமரியாதைத் தத்துவங்களை விளக்கியும், தலைவர்களைப்பற்றியும் நல்ல வர்ண மெட்டுகளில் பாடப்பட்ட பாட்டுகள் நிறைய உண்டு.

சுயமரியாதைத்
தலைவர்களின் படங்களுடன்
விலை அணா 0—2—0.

விற்குமிடம்:— ஈரோடுப் பந்தலிலும், பௌண்ட்ரோட் 'திராவிடன்' ஆபிசிலும் கிடைக்கும். தபாலில் வேண்டியவர்கள் இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

# இந்தியாவுக்கு ஓர் சீர்திருத்தத் திட்டம்.

தென்னாப்பிரிக்கா
"வனசஞ்சாரி" எழுதுவது

26—11—28-ல் தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு கூடி தலைவர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களை சபாநாயகராக்கொண்டு முடிவு செய்திருக்கும் தீர்மானங்களையும் தலைவரும் மற்ற கனவான்களும் செய்திருக்கும் பிரசங்கங்களையும் வெகு கவனத்தோடு வாசித்துப் பார்த்து பெருஞ் சந்தோஷமடைந்தோமென்றாலும் இத்தப்பரிகாரமெல்லாம் பலனைத் தராதென்றே சொல்லுவேன். பின் எந்தப்பரிகாரம் பலனைத் தருமென்று கேட்கலாம். அதற்கு நமது சிற்றறிவுக்கும் அனுபோகத்திற்கும் தெரிந்த ஓர் திட்டத்தை கீழ்வரைகிறேன்.

முதலாவது நமது இந்திய தேசத்திலுள்ள கோவில்கள்; மடங்கள், சத்திரங்கள் இவைகளிலுள்ள பிரயோஜனமற்ற சாமான்களையும் மனிதர்களையும் வெளித்தள்ளி சுத்தம் செய்து அவ்விடங்களை எல்லா இந்திய மக்களுக்கும் பிரயோஜனப்படும்படியான கல்விச்சாலையாகவும் கைத்தொழிற் சாலையாகவும் மாற்றவேண்டும். அக்கோவில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை மேற்படி மக்களுக்கு சாப்பாடு, துணி மணி, புத்தகம் முதலிய செலவுகளுக்கு உபயோகிக்கச் செய்யவேண்டும். (இங்கே மூடபக்தி பரிசுத்தமாகிவிடும்.)

இரண்டாவதாக தற்போது ஷை கோயில் மடம் முதலிய இடங்களிலிருந்து கொண்டு சொத்துக்களை அனுபவித்துவரும் ஜனங்களையும் "இந்துமதத்தைஉணர்ந்த மேதாவிகள், சன்னதிகள், பண்டாரங்கள், மகந்துகள், சந்நியாசிகள், ஆச்சாரி சுவாமிகள், பிராமணோத்தம பக்தியாளர்"களாகிய இந்த சோம்பேறி ஜனங்களைத் திரட்டி பர்மா, அல்லது நமது இந்தியா தேசத்தில் தரிசாகக் கிடக்கும் நாடுகளில் சர்க்கார் பண்ணை வைத்து, தேயிலை, பட்டு, கரும்பு, பருத்தி, காப்பி இவைகளை பயிர் செய்ய உபயோகிக்கவேண்டியது. இன்னும் ஜனம் ஜாஸ்தி தேவையானால் தொழில் செய்யாது திரியும் நமது வாலிபர்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

மூன்றாவதாக இந்தியாவிலுள்ளவர்களின் பெயர்களின் கடைசியில் தொடர்பாகவரும் முதலியார், நாயக்கர், பிள்ளை, செட்டியார், நாயுடு, ரெட்டி, சாஸ்திரி, ஐயர், ஐயங்கார், ராவ், கவுண்டர் இன்னும் இதைப்போன்ற வகுப்பைக் காண்பிக்கும் எந்த அறிகுறியும் வைத்துக்கொள்ளக்கூடாது. பேசும் போதும் எழுதும்போதும் ஷை வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது. சர்க்காரிலும் உபயோகிக்கக்கூடாது.

மேற்கண்ட மூன்று திட்டங்களையும் மகாநாட்டின் தீர்மானங்களோடு சேர்த்து இந்திய சாக்கடையோ அல்லது ஜனங்களோ இதை அமுலுக்குக்கொண்டுவந்து நிறைவேற்றவேண்டிய அதிகாரத்தை பிரான்ஸ் முதலியவைகளிலுள்ள பிரசிடெண்டைப் போலாவது இந்தியாவுக்கு நமது திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களையாவது அல்லது இவரைப் போன்ற புண்ணியவான் யாரையாவது அதிகாரியாக நியமித்து ராஜ்யத்தை நடத்தினால் 60 நாளையில் இந்தியாமுழுதும் சீர்திருந்தியிருக்கப் பார்க்கலாம். வேறு எந்த வழி செய்தாலும் ஒரு லக்ஷ வருஷம் முடிந்தாலும் இப்போதைய நிலை தான் அப்போதும் இருக்கும். ஆகவே சீர்திருத்த ஏற்பட்ட புண்ணிய புருஷர்காள்! அதிகாரம் பலவந்தம் இவைகளின் பலத்தால் இந்தியாவில் ஒரு காரியம் முடியுமேயன்றி நல்வசனம், சயபுத்தி, அனுபோகம், பிரசங்கம், பத்திரிகை, புத்தகம் இவைகளால் சீர்திருத்துவதென்றால் கடலலை நின்று ஸ்நானம் செய்வதென்றெண்ணியவன் கதையாகவேமுடியும். மேற்கண்ட திட்டப்படி செய்து விட்டால் எல்லா ஜனங்களுக்கும் எல்லா கட்சிக்காரருக்கும் கொள்கைக்காரருக்கும் சவுகரியமாகிவிடும். அதாவது வருணாசிரம தர்மகர்த்தாக்களுக்கும் வேதாந்திகளுக்கும் மதபக்தர்களுக்கும் வனவாழ்வு அல்லது தனி வாழ்வு அல்லது உலகத்தை வெறுத்த வாழ்வுக்காரர்களுக்கும் பொருந்தியதாகவும் இருக்கும். ஆனால் இவர்களோடு பெண்கள் வசிக்கும்படி அனுமதிக்கக்கூடாது. இவர்களுடைய சாஸ்திரத்திலும் அப்படிச் சொல்லவில்லை. இவர்களுடைய சந்ததி விருத்தியானாலும் நமக்கும் கஷ்டம்.

இரண்டாவது நாட்டிலுள்ள முட்டாள்களாகிய நமக்கு துன்பமில்லை, கஷ்டமில்லை, கவலையில்லை, நஷ்டமில்லை, வேலை நடக்கும் தொழில் நடக்கும், கல்வி விருத்தியாகும், தேசம் நல்நிலைமையிலிருக்கும், மற்ற தேசமும் நம்மைக்கண்டஞ்சும், மதிக்கும். இவ்வளவு நன்மை மேற்கண்ட மூன்று சட்டத்திலுமடங்கியிருக்கிறது.

இதைக் கண்ணுற்ற சிலர் "பலவந்தத்தால் ஆப்கான் அரசர், அமானுல்லாகான், டர்க்கி கமால் பாட்சா இவர்கள் கெதி என்னாயிற்று" என்று வாதம் பேசலாம். அவர்கள் விஷயம் இன்னும் முடிவாகவில்லை. இருந்தாலும் முடிவில் அவர்கள் கருத்துத்தான் நிறைவேறும். சாக்ஷி தேவை என்றால், பூர்வீக ஐரோப்பிய சரித்திரத்தையும் தற்போதைய ஜப்பான் சரித்திரத்தையும் வாசித்துப் பார்த்துக்கொள்ளட்டும். அதிகாரபலத்தால் சீர்திருத்தக்கூடாது என்பவர்கள் நம்மு பாரதம், ராமாயணம், மனுதர்ம சாஸ்திரம் எழுதின சோம்பேறிக் கூட்டம், திருட்டுக் கூட்டம், வஞ்சகக்கூட்டம், பேராசைக் கூட்டம். பிழைக்கவகையறியாமல் இந்தியாவிற்கு பிழைக்கவந்த நாடோடிக் கூட்டம், நயவஞ்சகக் கூட்டம். ஒருவருக்கொருவர் பகை யுண்டாக்கி நடுவில் தாங்கள் கடவுளாகயிருந்து எல்லோருக்கும் மோட்ச சீட்டு தருவதாக பொய்க்கதைகளை யெழுதி வைத்திருப்பவர்களைப் போன்றவர்களை ஒழிய மக்களை சீர்திருத்த வேண்டும் என்ற நோக்கங் கொண்டவர்களல்ல.

ஆகையால் பலவந்த சீர்திருத்தம் செய்ய எல்லோரும் கூடி முதலில் ஒருவழியை கண்டு பிடித்து நடத்தினால் முடிவு அடையலாமே தவிர வேறு வழிகளால் முடியாது.

## பிணங்கு பண்டிதை ஜானகியம்மாள் சுயமரியாதை திருமணம்

மணமேடை மீது ஸ்ரீ நாயக்கரின் திருவுருவப்படம் மலர் மாலையால் அலங்கரிக்கப்பட்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் பாவனையாய் மணமேடைமீது தொங்கவிடப்பட்டிருந்தது. மணமக்கள் சுதேச உடையுடன் துலங்கினர். மணப்பந்தல் நிறைய எண்ணிறந்த கனவான்கள் அமர்ந்திருந்தனர். அருத்தமற்ற சடங்குகளெல்லாம் ஒழிக்கப்பட்டு ஈபோ பேரா இந்து மகாசன சங்க காரியதரிசி திரு. அய்யாரு அவர்களால் திரு கலியபெருமாள் புதல்வி ஸ்ரீமதி ஜானகியம்மாளுக்கும் கனம் கே. அப்பாவு பண்டிதருக்கும் திருமணம் நிறைவேற்றப்பட்டது. 12 வயதுள்ள மகாலிங்கம் என்னும் சிறுவன் இனிய சாரீரத்துடன்,

வாழ்க வைக்கம் வீரன் வாழ்க வாழ்க வாழ்கவே!
வீழ்கவைதீகம் வீழ்க வீழ்க வீழ்கவே!
எட்டுத்திக்கும தன்மதிப்புப்பற்றி எழுகவே!
ஏழைமக்களைக் கெடுக்கும் வேதம் ஒழிகவே!
நாட்டுப் பெண்கள் பட்டதுன்பம் ஓட
மெழுகவே!
நயவஞ்சகக் காரப்பார்ப்பான் லங்குசாகவே!


என்னும் வாழ்த்துப்பாட்டு பாடிமுடித்த பின் டாக்டர் என். கே. மேனன் அவர்கள் தலைமையில் திரு. அய்யாரு அவர்களும் கோலாப்பிறை திரு ராஜகோபால் நாயுடு அவர்களும் மூடபழக்க வழக்கங்களைப்பற்றியும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும் சுமார் 2 மணி நேரம் வரையிலும் மூடவைதீகப்பித்தம் கலங்கி ஓடப்பேசினார்கள். பல விடங்களிலிருந்து சுயமரியாதையைக் குறிப்பிட்டு வாழ்த்துக் கடிதங்களும் தந்திகளும் வந்துகுவிந்தன. வந்திருந்தவர்களெல்லாம் இந்த சுயமரியாதைத் திருமணத்தைப் போல் நடத்தவேண்டுமென உறுதிகொண்டனர்.

'மருத்துவனுக்கு' ரூ. 5ம், 'குடி அரசு'க்கு ரூ. 3ம், 'திராவிடனு'க்கு ரூ 3ம் நன்கொடை அளிக்கப்பட்டன.

எ. கே. துரைசாமி,

## செவ்வாய்ப்பேட்டை இரும்புவர்த்தகர் சங்கம்

சேலம் டவுன் இரும்பு வர்த்தகம் ஸ்ரீ கெ. வெ. நாராயண செட்டியார் முயற்சியால் எல்லா இரும்பு வர்த்தகர்களும் 1929 வருஷம் பிப்ரவரி மாதம் 8 ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திரு. சி. பங்காருசெட்டியார் அண்டு சன்ஸ் கடையில் சபைகூட்டி பிரதி அமாவாசையிலும், மார்தம் ஒருதடவை எல்லா இரும்பு வர்த்தகர்களும் கடைகளை மூடிவிட வேண்டிய தென்றும் நாளது தேதிமுதல்கொண்டு ஒவ்வொரு இரும்புக்கடைக்காரரிடமிருந்தும் கடை ஒன்றுக்கு ஒரு அணா தர்மம் மேற்படி சங்கத்தார் தினப்படி வசூல்செய்துவருஷ முடிவில் அத்தொகையை தர்மகாரியங்களுக்கு உபயோகம் செய்யவேண்டியதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு விபவ-௵ மாசி-௴ 6-௳.

## சுயமரியாதை மகாநாடு.

சுயமரியாதை மாகாண மகாநாடு செங்கல்பட்டில் இந்தவாரம் இன்றைய தினம் நடைபெறுகின்றது. அதைப்பற்றிப் பலவாறாக பழிப்புரைகளும் விஷமக் கருத்துகளும் வெளியிடப்பட்டு வருகின்றன. அதாவது அரசாங்கத்தார் ஆதரவில் இம்மகாநாடு நடத்தப்படுவதாகவும் பார்ப்பன துவேஷத்தின் மீது நடத்தப்படுவதாகவும், மற்றும் போல்ஷ்விசம் பரப்ப அவர்கள் உதவிகொண்டு நடத்தப்படுவதாகவும், இதைப்பற்றி அரசாங்கத்திற்குச் சிலர் தெரிவித்ததாகவும் சொல்லப்படுவதுடன் சிலர் கவர்னரிடம் தூது சென்றதாகவும் தெரிகின்றது.

அரசாங்கத்தாரும் இவற்றிற்கு காது கொடுத்து சற்று தடிக்கின்றதாகவும் தெரியவருகின்றது. எப்படியிருந்தாலும் நமக்கு அதைப்பற்றி கவலையில்லை. நமக்குவேண்டியது சுயமரியாதை என்பதுதான். உலகத்திலே உயிரைக்கூட கொடுத்துப் பெறவேண்டியதாக அவ்வளவு மதிப்பும் விலையும் பெறுமானமுள்ளது சுயமரியாதையே ஆகும். ஒன்றுமில்லை சிலர் தங்களுக்கு அவ்வார்த்தையே பிடிக்கவில்லை என்றும், சிலர் ஜஸ்டிஸ் கக்ஷி இருக்கும்போது சுயமரியாதை இயக்கம் ஒன்று தனியாக எதற்கென்றும் மதத்திலும் மனிதனுடைய நம்பிக்கை உணர்ச்சியிலும் தலையிடுவது தங்களுக்கு பிடிக்கவில்லை என்றும், சுயமரியாதை இயக்கத்தால் நாஸ்திகம் பரவுவதாகவும், [illegible] கெட்டுப் போவதாகவும், தேசியம் தடைப்படுவதாகவும் இன்னும் பல மாதிரியாகவும் பேசிக்கொள்ளப்படுகிறது.

இவற்றிற்கு நமக்குத் தோன்றிய பதில் சொல்ல ஆசைப்படுகின்றோம். ஒரு இயக்கத்திற்கு ஒரு பெயரை எதற்காக இடுவது என்றால் அது காரணப்பெயராகவிருப்பதற்கா அல்லது இயக்கத்தின் தத்துவத்தையோ கொள்கைகளையோ உணர்த்துவதற்காகவா என்று கேட்கின்றோம். 'சுயமரியாதை இயக்கம் என்றால், சுயமரியாதை இல்லாதவர்களின் இயக்கம் என்று பிறர்கருதமாட்டார்களா' என்கின்றார்கள். அப்படியானால் நாம் அவர்களை "சன்மார்க்க இயக்கம் என்றால் அது துன்மார்க்கர்களுடைய இயக்கமாகிவிடுமா? ஜீவகாருண்ய இயக்கம் என்றால் அது ஜீவகாருண்யமில்லாத 'காப்புக் கடைக்காரர்கள்' இயக்கமென்றாகிவிடுமா? சைவசித்தாந்த இயக்கம் என்பது 'அசைவர்கள்' கூட்டமாகி விடுமா? அதுபோலவே ஜஸ்டிஸ் இயக்கம் என்பது இன்ஜஸ்டிஸ் காரர்கள் இயக்கம் என்றாகிவிடுமா?" என்று கேட்கின்றோம். ஒரு சமயம் அப்படியே அர்த்தமாகிவிடும் என்று சொல்வதானாலும்கூட சுயமரியாதை இயக்கம் என்பதற்கு பொருள் சுயமரியாதை இல்லாதவர்கள் அதை அடையஏற்படுத்திக்கொண்ட இயக்கம் என்பதில் நமக்கு ஆக்ஷேபனை இல்லை என்றே சொல்லுவோம். இதற்கு உதாரணம், முதலாவது சுயமரியாதை இயக்கம் என்கின்ற பெயர்கள் பிடிக்கவில்லை என்று சொல்லுகின்றவர்கள் தங்களையே அதாவது தங்கள் உருவத்தை கண்ணாடியில் பார்த்து 'உனக்கு சுயமரியாதை இருக்கின்றதா' என்பதாக ஒரு கேள்வி கேட்டுக் கொண்டு, தனது உருவம், நடை, உடை, குறி, கொள்கை இவைகளை வெளிப்பார்வையிலும் தனது எண்ணம், நம்பிக்கை, தான் நடந்துகொண்ட முறை, நடந்துகொள்ள இருக்கின்ற கருத்து ஆகியவைகளை உள்ளுக்குள்ளாகவும் தான் கட்டுப்பட்டிருக்கும் ஆக்ஷி, தான் பின்பற்றி வரும் மதம், மதஉணர்ச்சி, மதச்சடங்கு, மதக் கொள்கை ஆகியவைகளை அனுபோகத்தைக் கொண்டும் மற்றும் தங்களைப்பற்றி மற்றவர்கள் என்ன பேசிக் கொள்ளுகின்றார்கள் என்பதையும் சற்று யோசித்துப் பார்த்தால் எவ்வளவோ மோசமானவர்களாகவும் எவ்வளவோ சுயநலக்காரர்களாகவும் இருப்பவர்களுக்குக்கூட தங்களின் சுயமரியாதையற்ற தன்மை சூரிய வெளிச்சம் போல் விளங்காமல் போகாது என்றே நினைக்கின்றோம்.

மற்றும் 'ஜஸ்டிஸ் கட்சி இருக்கும் போது இது எதற்கு' என்பவர்கள், ஜஸ்டிஸ் கட்சியின் மூலம் 10 வருஷ காலமாய் விளைந்து வந்த உணர்ச்சிகளையும் சுயமரியாதைக் கிளர்ச்சியில் இந்த இரண்டு வருஷத்தில் விளைந்த உணர்ச்சியையும் கவனித்துப்பார்க்க வேண்டுகின்றோம். சமீபகாலம்வரை ஜஸ்டிஸ்கக்ஷி ஆட்சியில் மாத்திரம் பிரதிநிதித்துவம் [illegible] என்கின்ற முறையில் மிதவாதிகளின் கொள்கைகள் என்பனவற்றை பின்பற்றிக் கொண்டு பார்ப்பனரிடமிருந்து உத்தியோகங்களைப் பிடுங்கி எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும் வேலையில் மாத்திரம் ஒருவாறு வெற்றி பெற்று வந்ததே ஒழிய மற்றவைகளில் தாராளமாய் முன்னேற முடியாமல் தடைப்படுத்தப்பட்டே வந்திருந்தது. சுருக்கமாகச் சொல்வோமானால் பார்ப்பனரல்லாதார் என்கின்ற ஒரு குறிப்பிடத்தகுந்த சமூகம் தமிழ்நாட்டில் இருக்கும் சங்கதியே வெளிமாகாணத்தாருக்குத் தெரியமுடியாமல் இருந்தது என்பதும், [illegible] தெரிந்தாலும் அது 'தேசத்துரோகிகள், [illegible] காட்டுமிராண்டிகள்' என்று பிறர் கருதும்படியாகச் செய்து வந்த எதிரிகளை சமாளிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததும் யாரும் மறுக்கமுடியாது. அன்றியும் அரசாங்கத்தாராலும் இது ஒரு தனி வகுப்புவாதக்கட்சி யென்று மாத்திரம் மதிக்கப்பட்டு அவர்களால் தங்கள் சுயநலத்திற்காக இது உபயோகப்படுத்தப்பட்டு வருவதாகவேகருதியும் வந்திருந்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் இதே ஜஸ்டிஸ் கட்சியை மதித்திருக்கின்றார்கள் என்பதற்கும், அதற்கு எவ்வளவு கட்டுப்பட்டு இருக்கின்றார்கள் என்பதற்கும் இது வெளி மாகாணங்களில் எவ்வளவு மதிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கும் இந்த வருஷத்திய அதாவது 27-28 ஆம் வருஷத்திய இந்தியா கவர்மெண்ட் ரிபோர்ட்டைப் பார்த்தால் விளங்காமல் போகாது. சமூகவிஷயத்திலும் மக்களின் உணர்ச்சி எவ்வளவு முற்போக்கடைந்திருக்கின்றது என்பதற்கும் மதுரை மகாநாடு முதல் இதுவரை நடந்து வந்த பார்ப்பனரல்லாதார் மகாநாட்டு நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் கவனிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. அரசியலில் ஜஸ்டிஸ் கட்சியை சர்க்கார்தாசர்கள் என்று நமது எதிரிகள் சொல்லிவந்ததை கோயமுத்தூர் தீர்மானத்தின் மூலமாகவும் அதற்குப்பின் அரசாங்கத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்குள்ள மதிப்பின் மூலமாகவும்தான் பொது ஜனங்களுக்கு பொய்ப்பித்துக்காட்ட முடிந்தது. ஆகவே சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சிக்கு எவ்வளவு ஆதாரவத்தந்திருக்கின்றது என்பதைக் கவனித்தால் எந்த வகையிலும் அது அவசியமில்லாதது என்று சொல்ல முடியவே முடியாது என்று சொல்லுவோம்.

மத விஷயத்தில் பிரவேசிப்பதாய் சொல்லுவது:—

மதம் என்பது மனிதனின் வாழ்க்கை நலக் கட்டுறவுக்கும் ஒழுக்கத்திற்கும் தேவையானதே ஒழிய மதத்திற்கு மனிதன் தேவையில்லை என்றே சொல்லுவோம். ஆதலால் இப்போது வாழ்க்கைநலக் கட்டுறவுக்கும் ஒழுக்கத்திற்கும் ஆதாரமான எந்த மதத்தில் அது பிரவேசித்து என்ன கெடுதியைச் செய்தது அல்லது அதனால் என்ன விளைந்தது என்று யாராவது எடுத்துக்காட்ட முடியுமா என்று கேட்கின்றோம். அன்றியும் கட்டுறவு நலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் சமரச உணர்ச்சிக்கும் விரோதமாக எது இருந்தாலும் அதை அழிக்க வேண்டுமா வேண்டாமா என்றும் நாம் அவர்களைக் கேட்கின்றோம்.

மனிதனுடைய நம்பிக்கை உணர்ச்சியை கெடுக்கின்றது என்று சொல்லப்படுவது:—

எந்த விஷயத்தையும் மனிதன் தன் அறிவைப் பொருத்து ஒரு விஷயத்தை நம்ப வேண்டுமா அல்லது குருட்டு நம்பிக்கையால் ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று கேட்கின்றோம். அதுபோலவே நாஸ்திகம் என்பதும் அர்த்தமற்றவார்த்தையேயாகும் என்பதே நமது அபிப்பிராயம். கடவுள் உண்டா இல்லையா என்பதைப்பற்றி வாதம் செய்து முடிவு கட்டுவது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை அல்லவே அல்லவென்பதையும் அதற்காக அனாவசியமாய் நேரம் - செலவு

ழிக்காது என்பதையும் பொது ஜனங்கள் உணரவேண்டுகின்றோம். ஆனால் நமது இயக்கக்கொள்கைகளை நடைபெறவொட்டாமல் தடுப்பதற்காக கடவுள் என்பதைக் கொண்டு வந்து தடையாகவோ முட்டுக்கட்டையாகவோ போடச்சூழ்ச்சிசெய்தால் அதற்குச் சற்றும் இடம் கொடுக்க முடியாது என்பதுதான் சுயமரியாதை இயக்கத்தின் உறுதியான கொள்கையாகும். அறிவையும் தன்னம்பிக்கையையும் தன் முயற்சியையும் அன்பையும் ஒழுக்கத்தையும் தன்னகத்தில் கொண்ட எந்த சமயத்தினுடையவும் ஒத்துழைப்பை சுயமரியாதை இயக்கம் வலிய வரவேற்கும் என்றும் உறுதி கூறுகின்றோம்.

பின்னும் அரசியல், தேசியம் ஆகியவற்றிற்கு சுயமரியாதை இயக்கம் தடையாயிருக்கின்றது என்பது:—

மக்களின் சுயமரியாதைக்காகத்தான், மக்கள் மானத்தோடு வாழ்வதற்காகத்தான் அரசாங்கமும் தேசியமும் வேண்டுமே ஒழிய மற்றபடி கேவலம் இவைகள் மனிதன் வயிறுவளர்க்க மாத்திரம் வேண்டியது என்றால் அதற்காக எந்த அரசாங்கமும் அரசியலும் தேசியமும் கண்டிப்பாய் வேண்டியதில்லை என்றே சொல்லுவோம். இதுவரை நமது நாட்டில் ஏற்பட்டிருந்த-ஏற்பட்டிருக்கின்ற, எந்த அரசியல் இயக்கமாவது தேசியஉணர்ச்சியாவது மக்கள் சுயமரியாதைக்கேற்றதான திட்டங்களுடன் அமைக்கப்பட்டிருந்ததா என்று அரசியல் வாதிகளையும் தேசிய வாதிகளையும் கேட்கின்றோம்.

எனவே, உண்மையான சுயமரியாதை உணர்ச்சி மக்களுக்குத் தோன்றிவிட்டால் அதுவே அரசியலையும் தேசியத்தையும் மற்றும் மத இயலையும் தானாகவே சரிப்படுத்திக்கொள்ளும். அப்போது சுயமரியாதை வேறு, அரசியல் வேறு, தேசியம் வேறு, மத இயல் வேறு, ஒழுக்க இயல் வேறு, அன்பு இயல் வேறு என்கின்ற பாகுபாடுகளும் பிரிவுகளும் கண்டிப்பாய் மறைந்தோடிவிடும்.

உதாரணமாக, நமக்கு மேலானதும் கீழானதுமான ஒரு வகுப்பு இருக்கக்கூடாது என்று சொன்னால் அந்த வார்த்தையிலேயே நமக்கு மேலானதாக ஒரு அரசாங்கமும் ஆட்சியும் இருக்கக்கூடாது என்பது தானாய் உதயமாகிவிடும். அதுபோலவே நமக்கு மேலாகவோ கீழாகவோ ஒரு நாடு இருக்கக்கூடாது என்பதும் தோன்றிவிடும். பொதுவாக சுயமரியாதை என்கின்ற ஒரு இஞ்சினை பலப்படுத்தி சரியாக ஓடத்தகுந்த சக்தியை உண்டாக்கி வைத்து விட்டால் பிறகு அதில் எந்த யந்திரத்தை (மிஷினை) கொண்டுவந்து அத்தோடு இணைத்துத் தோல் பட்டையை மாட்டிவிட்டாலும் அது தானாகவே ஓடும். அது இன்ன விதமான இயந்திரமாகத்தான் இருக்கவேண்டும் என்கின்ற கவலை யாருக்கும் வேண்டியதில்லை என்றே சொல்லுகின்றோம். மற்றபடி எல்லா உணர்ச்சிகளையும்விட சுயமரியாதை உணர்ச்சியே மேலானதும் மதிக்கத் தகுந்ததுமாகும் என்பதின் தத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு இந்த இயக்கத்தில் உண்மையான சந்தேகமே தோன்ற இடமிருக்காது. அது இன்றையதினம் வேண்டுமானால் ஏதோ ஒரு சிறு வகுப்பாருடன் போராடத் தோன்றியதாகத் தோன்றலாம். இதுவே அல்ல அதன் லட்சியம். ஒரு இயந்திரத்தை சுழற்றும் போது முதலில் சுற்றும் சிறுவேகம் போல் இன்று ஒரு சிறுவகுப்பார் உணர்ச்சியோடு போராடுவதாகக் காணப்படுவது மற்றபடி பின்னால் அது உலகத்தையே ஒன்றுபடுத்த, உலகமக்களையே ஒரு குடும்ப சகோதரர்களாக்கச் செய்யும் முயற்சியின் போது தான் அதன் உண்மைச் சக்தியும் பெருமையும் வெளியாகும்.

அன்றியும் இது கிளம்பிவிட்டால் யாராலும் இதை அழிக்கவோ அல்லது சற்றாவது அடக்கிவைக்கவோ கண்டிப்பாய்முடியாதென்பதுடன் அடிக்க அடிக்க எழும்பும் பந்துபோல் எதிர்க்க எதிர்க்க வளர்ந்துகொண்டே போகும் சக்தி உடையது என்பதே நமது உறுதி. அன்றியும் எந்தவிதத்திலும் எல்லோரும் எவ்வித அபிப்பிராயமுடையவர்களும் இதில் இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்காவது சேர்ந்துதான் ஆகவேண்டும் என்பதுவும் நமது பலமான உறுதியாகும். அன்றியும் இவ்வியக்கம் ஒவ்வொன்றையும் பெரிதாய் வேண்டாம் என்று சொல்லும் விரக்தியைப்பற்றி இருக்கின்றதே ஒழிய வேண்டும் என்று சொல்லும்படியான ஆசையைப் பற்றவில்லை. ஆதலால் இதில் யாரும் ஏமாற்றமடைவதற்கு இடமேயில்லை. அன்றியும் இதற்குள் போட்டிகளுக்கும் இடமில்லை.

மற்றபடி இதைப்பற்றி சர்க்கார் எப்படி நினைத்துக்கொண்டாலும் நமக்கு அதைப் பற்றிச்சற்றும் கவலையில்லை. உலக வாழ்க்கையில் இறங்கி ஆசையில் ஈடுபட்டு உழலும் சம்சாரிகளிடமிருந்து நமக்கு யாதொரு உதவியும் ஒத்துழைப்பும் தேவையில்லையானாலும், பெரிதும் பரிசுத்தமானதும் சுயநலமற்றதும் எதற்றும் எவ்விதத்தியாகத்திற்கும் தயாராயிருக்கும் இளைஞர்களிடத்திலும் இளங் கன்னிகைகளிடத்திலும் திக்கற்றவர்களிடத்திலும் நமது இயக்கத்திற்கு பெரிதும் உதவி எதிர்பார்க்கின்றபடியாலும் அவர்களும் தாராளமாய் உதவி அளிக்க தயாராய் மேல்விழுந்து வருவதாலும் நாமும் இதன் முடிவைப்பற்றி சற்றும் கவலைகொள்ளாமல் கடமையையே பின்பற்றிக்கொண்டிருப்பதாலும் இவ்வியக்கத்தின் மூலம் எவ்வித கஷ்டமாவது நஷ்டமாவது அடையவேண்டி வருமோ என்கின்ற எண்ணமே சிறிதும் கொள்ளாமலிருக்கின்றோம்.

---

## தென்னிந்திய செங்குந்த வாலிபர் அபிவிருத்தி சங்கம், ஈரோடு.

11-2-29ஆம் தேதி இரவு இச்சங்கம் திறந்துவைக்கப்பட்டு பின்னர் சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவாளர்கள், தலைவர், மா. லக்ஷ்மண முதலியார் ரூ. 10ம், உபதலைவர் ரூ. 7ம், பொக்கிஷதார நா. மு. கிருஷ்ண முதலியார் ரூ. 10ம், உபகாரியதரிசி மு. கணபதி முதலியார் ரூ. 5ம், அங்கத்தினர் நா. சின்னப்ப முதலியார் ரூ. 5ம் சங்கத்திற்கு நன்கொடையளித்தனர்.

காரியதரிசி

## ஒரு வேண்டுகோள்.

சென்னை மவுண்டு ரோட்டிலுள்ள தியாகராயஞாபகச் சின்ன கட்டிடம் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் தலைமைக்காரியாலயமாக இருந்து வருவது யாவரும் அறிந்த விஷயமே. நமது மதிப்பிற்குரிய காலஞ்சென்ற நமது தலைவர் பனகால் அரசரின் விடாமுயற்சியினாலும், மிகுந்த ஆர்வத்தினாலுமே அக்கட்டடம் அங்கு வாங்கப்பட்டது. அது சம்மந்தமாக இன்னும் அதிகமான பணம் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. இத்துடன் காலஞ்சென்ற நமது தலைவர் நமது கட்சிப்பத்திரிகைகளை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கொண்டிருந்த கவலையும் அறிந்த விஷயமே. நமது தலைவரின் விருப்பத்தை நிறைவேற்றிவைப்பதே நமது கடமையென உணர்கின்றேன். ஆகையால் பணவசூல் செய்யும்போது ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் பெரிதும் உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பி. டி. ராஜன்,
தலைவர் தெ. இ. ந. உ. சங்க
நிர்வாகக்கமிட்டி.

## கல்விக்காக ஒரு வேண்டுகோள்

இம்மலாய் நாட்டில் வசிக்கும் எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகட்கு எனது வணக்கம் உரித்தாகுக.

ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அந்நாட்டிலுள்ள மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். அவ்வொற்றுமைக்கு அடிப்படையானது அறிவு வளர்ச்சி. அவ்வறிவு வளர்ச்சியைத் தூண்டக்கூடியது கல்வி. அதிலும் அவரவர்கட்கு அவரவர்களுடைய தாய்மொழியே பிரதானம். தாய்மொழிப்பற்றே தேசப்பற்றிற்கு ஆதாரம்.

அத்தகைய தாய்ப்பாஷையாகிய நம் தமிழ்ப்பாஷையை வளர்க்க சென்ற மூன்று வருடங்களாக இம்மலாய் நாட்டில் பட்டர்வொர்த் நகரத்தில் ஒரு தமிழ்ப்பாடசாலையை நடத்தி வருகிறது எல்லோருக்குந் தெரிந்த விஷயமே. கட்டிடம் உள்பட இதுவரை செலவானது 3454. 59 காசு. தற்பொழுது இரண்டு ஆசிரியர்களும் ஒரு ஆசிரியையும் வேலை செய்து வருகிறார்கள். மாணவ மாணவிகளின் எண்ணிக்கை எழுபதுக்கு மேல் இருக்கிறது. இத்துடன் ஆங்கில கலாசாலையில் வாசிக்கும் மாணவர்கட்கு இராப்பள்ளிக்கூடம் வைத்துத் தமிழ்ப்போதிக்க உத்தேசம்.

இப்பாடசாலையானது தழைத்தோங்கும்படி செய்ய ஓர் க்ஷேமநிதி ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கென நம் பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் திரு. செ. ராஜகோபாலன் அவர்கள் மலேயாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறார். அன்னவர் கோரிவருங் காரியங்களுக்கு அன்பர்கள் தாராளமாய பொருள் உதவி செய்து, சிறந்த தர்மமாகிய கல்வி தர்மத்தைப் பங்கிட்டுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கா. நமசிவாயன், பரிபாலகன்.

## பார்ப்பனீயம் ஒழிந்த சுயமரியாதைச் சுபாசுபங்கள்.

ஸ்ரீ தை 29-ந்தேதி தெம்மாப்பட்டு திரு க. சின்னைய்யா சேர்வையவர்கள் இல்லத்தில் திருச்செல்வன் சி. அ ஆறுமுகஞ்சேர்வை யவர்கட்குப் பார்ப்பனரை நீக்கி வெகு விமரிசையாக சுயமரியாதைத்திருமணம் நடைபெற்றது. அதன் சார்பாக 'வைக்கம் வீரர்' வாசகசாலைக்கு ரூபாய் ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது என்று வைக்கம் வீரர் வாசகசாலைக் காரியதரிசி எழுதுகிறார்.

ஃ ஃ ஃ

தஞ்சை ஜில்லா மன்னார்குடி தாலூக்கா மணக்கரையில் வசிக்கும் மேற்படியூர் பஞ்சாயத்து போர்டு மெம்பரும் வடவேற்குடி ஐக்கிய நாணய சங்க காரியதரிசியுமான திரு கோபாலசாமி பிள்ளையவர்கள் தமது தகப்பனார் இறந்த முதலாண்டு பூர்த்தி தினமாகிய ஸ்ரீ விபவ வருஷம் தைத்திங்கள் 29 ம் நாளில் வருஷாப்தீகம் என்னும் பெயரால் பார்ப்பனர்கட்கு அரிசி உப்பு புளி கறி காய் முதலியவைகளை மூட்டை கட்டிக் கொடுக்கும் பழக்கத்தை விடுத்து பத்து ஏழைகளுக்கு அன்னமளித்து மேற்படி விசேஷத்தை சிக்கனமாகவும் சுயமரியாதை முறையிலும் செய்து முடித்தார்.

ஃ ஃ ஃ

வெல்லூர் திருவாளர் வி. முருகேச முதலியார் L. M. F. L. M. S. அவர்கள் 5-2-29-ல் காலஞ்சென்ற தமது மனைவியார் மீனாம்பாள் அவர்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிச்சடங்கை 14-2-29-ல் வைதீக புரோகிதமுமின்றிச் செய்து முடித்தார்.

தவிர, தமது மனைவியாரின் ஞாபகார்த்தமாக ஜஸ்டிஸ் பத்திரிகைக்கு ரூபாய் 5 ம், திராவிடன் பத்திரிகைக்கு ரூபாய் 10 ம், வேலூர் பார்ப்பனரல்லா மாணவர் விடுதிக்கு ரூபாய் 20 ம் நன்கொடையளித்துள்ளார்.

ஃ ஃ ஃ

சிதம்பரம் மார்க்கட் தெருவு திரு. சு. தில்லைக்கண்ணு பண்டிதர் தமது தகப்பனாரின் தலைத் திதியை பார்ப்பனீயத்தை அறவே ஒழித்து சுமார் 200 ஏழைகளுக்கும் 50 ஆதித்திராவிட சகோதரர்களுக்கும் சாப்பாடு போட்டு சுமார் 25 ஆதித்திராவிடக் குழந்தைகளுக்கு [illegible] குழந்தைகளுக்கும் [illegible] [illegible] இலவசமாய கொடுத்து [illegible] திதியை [illegible] [illegible] [illegible] சிறப்பாக நடத்தி வைத்தார்.

## நோட்டீஸ்.

[illegible] [illegible] கோட்டு [illegible] [illegible] ஷை [illegible] 1929 [illegible] 25-2-1929-ல் [illegible] மணிக்கு முனிசிபல் ஆபீசில் [illegible] படும்.

முனிசிபல் ஆபீஸ் பொள்ளாச்சி 12—2—1929. } S சந்தானகிருஷ்ணன், வைஸ்-சேர்மன்

## ஓர் புதிய கோயில்,

மேட்டூரில் ஓர் புதுக்கோவில் கட்டி, அங்கு பிள்ளையாரையும் ஆஞ்சனேயரையும் பிரதிஷ்டை செய்யும் நோக்கத்தோடு 11-2-29 காலை 10 மணிக்கு அஸ்திவாரம் நாட்டினார்கள். இக் கோஷ்டிக்குத் தலைவர் திரு மகாதேவய்யரவர்கள் பி. ஏ. பி. இ. எக்ஸிக்யூடிவ் இஞ்சினீர். ஆராய்ச்சித்திறமுள்ள இஞ்சினீர்களுக்கு கோவில்களைப் பெருக்கக் கருதியதின் அர்த்தமென்ன? ஏழைக்கூலிகளுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் உபயோகப்படும் இராப்பள்ளிக்கூடம் வைக்க ஏற்பாடு செய்யக்கூடாதா? கோவில் கட்டுவது பார்ப்பனரல்லாத ஏழைப் பாமர மக்களைப் பிரித்து வைத்து ஏமாற்றித் தம்மினத்தவர்கள் பார்ப்பனரல்லாதார் செலவில் உண்டு கொழுப்பதற்கல்லவா?

## பார்ப்பனரில்லாமல் கும்பாபிஷேகம்.

திருமங்கலம் தாலூகா சாட்டூர் ஜமீன் நாடார்பட்டியில் திரு மாசி. கி. மு. N. S ஆறுமுக நாடாரவர்களால் புதிதாக கட்டப்பட்ட பழனியாண்டவர் கோவில் கும்பாபிஷேகம் சென்ற தை-மீ 27ல் பார்ப்பனர்களின்றியில் திருவாளர்கள் நாட்டாண்மை சங்கர குமார் நாடார், சு. அய்யாகுட்டி நாடார், கு. சீனி நாடார், வெ. இ. பழனிச்சாமி நாடார், சி. ம. காளிங்க நாடார், வி. செ. வடுக்குமாரு நாடார் ஆகியவர்களால் நடைபெற்று ஷையூர் கர்ணம் திரு முத்துச்சாமி பிள்ளை திருவாளர்கள் N. S. ஆறுமுக நாடார், ச. மா முத்தப்ப நாடார் அவர்களால் அன்னதானம் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டது.

## கோயமுத்தூர் ஜில்லா மூன்றாவது கம்மவார் கான்பரன்ஸ்

ஷை மகாநாடு 1929 வருஷம் மார்ச்சு மாதம 2, 3, தேதி சனி, ஞாயிறு உடுமலைப் பேட்டையில் கூடும். சித்தூர் ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீமான் ராவ்பகதூர் பி. முனுசாமி நாயுடு பி. ஏ. பி. எல். அவர்கள் எம். எல். சி. தலைமை வகிப்பார். கோவை முனிசிபல் சேர்மன் ஸ்ரீமான் ராவ்பகதூர் சி. எஸ். ரத்னசபாபதி முதலியார் எம். எல். சி. விவசாய கண்காட்சி திறந்து வைப்பார்.

கான்பரன்ஸ் தீர்மானங்கள் கொண்டுவருபவர்கள் தீர்மானங்களை 2 நாளைக்கு முன் அனுப்புவது நலம். கான்பரன்ஸில் உபசரணை டிக்கட் வாங்கியவர்கள் தவிர கான்பரன்ஸ் பந்தலில் சாப்பிட விரும்பும் மற்றவர்கள் 2 ரூபாய் டிக்கட்டுகள் வாங்கிக் கொள்ள வேண்டியது.

செக்ரடெரி ஏ. ஆர். குருமூர்த்தி நாயுடு, பி. ஏ. பி. எல். வக்கீல், உடுமலைப்பேட்டை.

## துடுப்பதி செங்குந்த வாலிப சன்மார்க்க சங்க திறப்பு விழா.

ஷை சங்கத்தின் திறப்பு விழா 8—2—29-ல் செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் திரு. கே. கிருஷ்ண முதலியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மிக விமரிசையாய் நடந்தேறியது.

அவ்வமயம் கோவை ஜில்லா போர்டு வைஸ்பிரசிடெண்டு திரு. எஸ். என். பொன்னையகவுண்டர் அவர்கள் அப்பிச்சிமார் மடம் அதிபதி திரு. எம். ஏ. ஆண்டமுத்து கவுண்டர் அவர்கள் திரு. எப். ஏ. தெய்வசிகாமணி கவுண்டர் அவர்கள் பி. ஏ. பி. எல். முதலான பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர்.

பின்பு தலைவர் தமது முன்னுரையில் செங்குந்தரிடையுள்ள சில துர்ப்பழக்கத்தை ஒழித்தாலொழிய செங்குந்தர் முன்னேற முடியாது என்பதாக சுமார் 1 மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பின்பு வாலிபரியக்கம் என்னும் விஷயத்தைப்பற்றி கோவை திரு. என். லட்சுமண முதலியார் அவர்களும் பின்பு 'யார் செங்குந்தர்' என்னும் விஷயத்தைப்பற்றி திரு. எஸ். எ. கணேச முதலியார் அவர்களும் நமது சமூகம் என்னும் விஷயத்தைப்பற்றி கோவை திரு. சி. கி இராமசாமி முதலியார் அவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பின்பு தலைவர் பின்னுரைக்குப் பின் சிற்றுண்டி வழங்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டு விழா இனிது முடிவு பெற்றது.

காரியதரிசி.


## மலையாளம் மல்லிகை விதை.

இந்த மலையாளம் மல்லிகைப் புஷ்பங்கள் ஒவ்வொருவரின் மனத்தையும் கண்களையும் கவர்ந்து கொள்ளத்தக்க வாசனையும் அழகும் பொருந்தியது. இதன் செடி 6 அடி உயரம் வளரும். ஒரு செடியில் சுமார் 500 புஷ்பங்கள் வரை ஒரே தடவையில் புஷ்பித்து அலங்காரமாய் நிற்பதைக்காண யாவரும் ஆச்சரியமடைவார்கள். ஒவ்வொரு புஷ்பமும் 8 அங்குல சுற்றளவுடையதாயும் மஞ்சள் வர்ணமுள்ளதாகவுமிருக்கின்றன. பங்களாக்களையும் பூந்தோட்டங்களையும் அலங்கரிப்பதற்கு இதற்கு ஒப்பான புஷ்பச்செடி வேறு கிடைக்காதென்பதை நீங்களே தெரிந்துகொள்வீர்கள். இந்த மலையாள மல்லிகை தமிழ் நாட்டிற்கே புதியதாகும். இதில் இன்னுமோர் விசேஷம் யாதெனில், இந்தப்புஷ்பச் செடிகள் உள்ள இடங்களில் பாம்பு முதலிய விஷ ஜெந்துக்கள் நெருங்கமாட்டா. ஆதலால் ஒவ்வொருவரும் இந்தப் புஷ்பச் செடிகளை அவர்கள் தோட்டங்களிலும் வீடுகளிலும் பயிர்செய்ய வேண்டியது அவசியமாகும். பாக்கெட் 1 க்கு விலை ரூ. 0-4-0. 1 டஜன் பாக்கெட்டுகளுக்கு விலை ரூ. 2-8-0.

ஒரு பாக்கெட் மாத்திரம் தனியாக தேவையுள்ளவர்கள் 5 அணா ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம். ஏராளமான நற்சாட்சிப்பத்திரங்களும் ஆர்டர்களும் வந்து குவிகிறபடியால் சீக்கிரம் முந்துங்கள்.

எஸ். சி. நாதன், எலப்புள்ளி P. O. பாலக்காடு.

# ஆராய்ச்சி முரசு.

## மேல் நாடும், கீழ் நாடும்.

### "தமிழ் மகன்" எழுதுவது.

மேல் நாடு நாடோறும் மேல் நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது, கீழ்நாடு வரவர கீழ் நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. மேல் நாடு அறிவில் அபிவிருத்தியுற்று வருகிறது. கீழ் நாடு இன்னும் அறியாமையி னின்று நீங்காது பல இன்னல்கட்கு ஆளாகி வருகிறது. மேல் நாடு மக்கள் அனைவரும் ஓரினம் என்பதை உணர்ந்து உணர்ந்தவாறு நடந்தும் வருகிறது, கீழ்நாடு மக்கள் அனைவரும் ஒன்று என்பதை உணரப்பெறாது பலவேறு வேற்றுமை கற்பித்துக் கொண்டு இடர்ப்பட்டுவருகிறது. மேல்நாடு மூடப்பழக்க வழக்கங்களை அழித்து வருகிறது, கீழ்நாடு அவற்றை வளர்த்து வருகிறது. மேல் நாடு பெண்ணினத்தைச் சமமாக எண்ணி நடத்தி வருகிறது. கீழ் நாடு அவ்வினத்தைத் தூற்றி அடிமைச் சங்கிலி கொண்டு பிணித்துப்பூட்டி வருகிறது. மேல்நாடு இன்ப வாழ்வுகண்டு இன்புற்று வருகிறது, கீழ்நாடு துன்பவாழ்வு கண்டு துன்புற்று வருகிறது. மேல்நாடு இல்லறம் எனும் இயற்கை அறத்தை ஒம்பி வருகிறது. மேல் நாடு துறவறம் எனும் மறவறத்தை தன் நாட்டினின்று விரட்டிவிட்டது. கீழ்நாடு அம்மறவறத்தைப்போற்றி வளர்த்து உயிர்களின் துன்பத்திற்கு ஆளாகி வருகிறது. மேல் நாடு முன்னோர் சென்ற வழி செல்லாது சுய அறிவு கொண்டு வாழ்ந்துவருகிறது. கீழ்நாடு சுய அறிவுக்கு மதிப்புக் கொடாமல் முன்னோர் சென்ற வழி சென்று இன்னல் அடைந்து வருகிறது.

மேல்நாடு புரோகிதத்தை விருப்பாது வெறுத்துத் தள்ளி விட்டது, கீழ்நாடு அதை வளர்த்துச் சுயநலத்திருடர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் பெருத இடம் தந்து வருகிறது. மேல் நாடு பூமியைச் சூரியன் சுற்றவில்லை, சூரியனைப் பூமி சுற்றுகிறது என ஆராய்ந்து ருசிக்கிறது, கீழ்நாடு சூரியனைப் பாம்பு கடிப்பதால் தான் கிரகணம் என்று கூறப்படுவது உண்டாகிறது என்று குருட்டுத்தனமாக நம்புகிறது. மேல்நாடு விஞ்ஞானத்தால் (சைன்ஸ்) பல அரிய உண்மைகள் கண்டு வருகிறது, கீழ்நாடு அஞ்ஞானத்தால்-அறியாமையால்-பல துன்பங்கள் பெற்று வருகின்றது. மேல்நாடு பரந்த நோக்கில் முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது, கீழ்நாடு குறுகிய நோக்கால் கிணற்றுத் தவளையாய் இருக்கிறது. மேல்நாடு பத்தினி

கை ஓம்புவதில் தலைசிறந்து வருகிறது, கீழ்நாடு பார்ப்பனீயம் ஓம்புவதில் தலைமை ஸ்தானம்வகிக்கிறது. மேல்நாடு கடவுள் என்று கூறப்படுவதைப் பற்றிக்கவலை செலுத்தாமலும் அஞ்சாமலும் இருந்து வருகிறது. கீழ் நாடு கடவுள் என்று கூறப்படுவதை என்றும் வணங்கிக்கொண்டிருத்தலே மனித ஜன்மம் எடுத்ததின் தலையாய கடமை என்று கட்டளையிட்டு மக்களை விரைவில் இறப்பதற்குத் துணை செய்து வருகிறது. மேல்நாடு 'சமயம் மதம்' என்று கூறப்படுவது மக்களை அடிமை

ஈரோட்டைச்சார்ந்த எழுமாத்தூரில் 31—1—29ல் நடைபெற்ற சுயமரியாதை காதல் திருமணம்.



மணமக்களாகிய

திருமதி M. [illegible]ம்மாள், திருவாளர் M. [illegible]

நிலைக்கும்வேற்றுமைக்கும் [illegible] சேர்ப்பதால் அதை [illegible] [illegible] வேண்டாம், அதை அழித்து [illegible] [illegible] என்று கூறுகிறது, கீழ் [illegible] சமயத்தின் [illegible] மக்கள் மக்களை [illegible] வாழ்வில் [illegible] வருகிறது! மேல்நாடு சூரியனுக்கும் பூமிக்கும் எவ்வளவு தூரம், [illegible] [illegible] மான பொருள் [illegible] பற்றி [illegible] கூறி வருகிறது, கீழ்நாடு 'சூரியனுக்கு [illegible] [illegible] [illegible]

பூட்டப்பட்டிருக்கின்றன"! என்ற விவாதத்தில் உழன்று வருகின்றது. மேல்நாடு நீரில் செல்வதற்கும், தரையில் செல்வதற்கும் விதவிதமான விமானங்களைக் கண்டு உலகுக்கு நலஞ் செய்து வருகிறது; கீழ்நாடு 'மாட்டு வண்டியே கதி' என்றும் அவைகளை வதைப்பதே சிறந்தது என்றும் கூறி வருகிறது. மேல் நாடு தினம் ஒரு புதுமை கண்டு மக்களுக்கு இதஞ் செய்து வருகிறது, கீழ் நாடு தினம் ஒரு சாதி கண்டுபிடித்து மக்களை வேறு படுத்தி அதஞ் செய்து வருகிறது. மேல் நாடு ஆகாயத்தந்தி, தபால், ஒலி பெருக்கும் கருவி, பேசும் படம், [illegible], இறந்தவருடன் பேசுதல் முதலிய அரிய பெரிய நூதனங்கள் கண்டு வருகிறது; கீழ்நாடு பாலியவிவாகம், தீண்டாமை, நோக்காமைமுதலியவற்றைவளர்த்து இடர்ப்பட்டு வருகிறது. மேல் நாடு உயிருடன் வாழும் அறிஞரைப் போற்றி ஊக்கிவருகிறது. கீழ்நாடு இருக்கும் அறிஞரைச் சிறிதும் மதியாது, இறந்துபோன 'அறிஞர்'களைப் போற்றி வருகிறது. மேல்நாடு எவர் என்ன கூறினும் கொள்வன கொண்டு, தள்ளுவன தள்ளி வருகிறது. கீழ்நாடு கருத்து வேற்றுமையுள்ள மக்களை வெறுத்தும் தூற்றியும் வருகிறது. மேல்நாடு இளைஞராலேயே எக்காரியத்தையும் இனிது நடத்தி வைக்க இயலும் என்பதை நன்குணர்ந்து, இளைஞரிடம்மதிப்பும், விசுவாசமும் கொண்டு நடத்தி வருகிறது. கீழ்நாடு 'இளைஞர்களால் எதுவும் செய்ய முடியாது முதியோர்களால்தான் எக்காரியத்தையும் செய்ய முடியும்' எனக் கூறிக் கொண்டு முன்னவரைச் சிறிதும் மதியாமலும் பின்னவரை மிகவாகப் போற்றியும் வருகிறது!

மேல்நாடு [illegible]களை அழித்து வருகிறது, கீழ்நாடு அவைகளைப் பின்பற்றி மதித்து அடிமை வாழ்வில் இருந்து வருகிறது. மேல் நாடு வீரத்தில் தலைசிறந்து நிற்கிறது. கீழ்நாடு [illegible]த்தனத்தில் தலை சிறந்து நிற்கிறது. மேல் நாடு [illegible] [illegible] செய்து பெண்ணினத்தைக் [illegible]த்து வருகிறது! கீழ்நாடு விதவைமணத்தைத் தூற்றி பெண்ணினத்தாரில ஒரு சாராரைக் கெடுத்து வருகிறது. மேல்நாடு கடவுள் பிரார்த்தனை என்று [illegible] கொண்டு உயிர் [illegible] செய்வது பெரும் பாவம் எனக்கூறுகிறது, கீழ்நாடு [illegible] பெயரைச் சொல்லிப் பல சாதுவான உயிர்களைக் கொன்று வருகிறது. மேல்நாடு [illegible] செய்கையில் நடத்திக் காட்டுவதில் முன்னணியில் நிற்கிறது கீழ்நாடு வானளவவாய்ப் பந்தல் போடுவதிலும் எழுதுவதிலும் தலைசிறந்து நிற்கிறது! மேல் நாடு [illegible]கள், மது முதலியன அருந்துவதால்

உண்டாகும் கெடுதிகளைப் பற்றி ஆராய்ச்சி மூலம் நிச்சயப்படுத்தி வருகிறது; கீழ்நாடு எதையும் காரணம் கூறாமல் அப்படிச் செய்தால் நரகம் கிடைக்கும்; இப்படிச் செய்தால் சொர்க்கம் கிடைக்கும்' என அதிகாரஞ் செய்து வருகிறது!

மேல்நாடு இறந்தவரைப் பிழைக்கவைக்க வழிகண்டு வருகிறது, கீழ்நாடு இருக்கிறவர்களை யோகம், நிஷ்டை, பக்தி, மந்திரம், துறவு, என்பவைகளின் மூலம் இறக்கத்துணை செய்து வருகிறது. மேல்நாடு சுயராஜ்யத்தில் தலைசிறந்து நிற்கிறது, கீழ்நாடு அடிமைத்தனத்தில் தலைசிறந்து நிற்கிறது. மேல்நாடு பெண் சமூகத்தைக் கல்விசொரூபமாக ஆக்கிவருகிறது, கீழ்நாடு அச்சமூகத்தை அடிமைத்தோற்றமாக ஆக்கி வருகிறது. மேல்நாடு உலகிலுள்ள தேசங்களையெல்லாம் பிடித்தாள முயன்று வருகிறது, கீழ்நாடு சொந்த நாட்டையும் பறிகொடுப்பதில் தலைசிறந்து நிற்கிறது. மேல்நாடு, பூமியதிர்ச்சி, எரிமலை முதலியன எந்தநேரத்தில்—எந்த இடத்தில் உண்டாகப்போகிறது என்பதை முன்னமேயே அறிந்து எச்சரிப்புடன் நடந்து வருகிறது. கீழ்நாடு பிராமணன் என்று கூறப்படுபவன் உயர்ந்தவனா? வேளாளன் என்று கூறப்படுபவன் உயரியவனா? என்ற 'அரிய' ஆராய்ச்சியில் இருந்து இன்னும் விடுபடாமலிருந்து வருகிறது. மேல்நாடு திருவிழாக்கள் என்று கூறப்படுபவை மக்களுக்கு வறுமையையும் மூட நம்பிக்கையையும் வேறுபல இன்னல்களையும் ஈபவை என்பதை உணர்ந்து அவற்றை அழித்து வருகிறது, கீழ்நாடு அவற்றை வளர்த்து வருவதையில் தனக்கு நிகர் எவருமில்லை என்பதை நிதரிசனமாகக் காட்டிவருகிறது. மேல்நாடு மக்கள் நீண்டகாலம் உயிருடன் வாழ்ப்பல உபாயங்கள் கண்டுவருகிறது, கீழ்நாடு உதவாககரையான உண்மையை கண்டுபிடித்து அதனால் எப்பொருளைப் புசித்தாலும் உயிர்க்கொலையாகும் என்பதாகக்கூறி, இருக்கும் மக்களையும் விரைவில் இறக்கத்துணைசெய்து வருகிறது. மேல்நாடு உலகம் எவ்விதமாய் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து வருகிறது; கீழ்நாடு, உலகத்தை ஆதிசேஷன் என்ற ஒரு பாம்பு தாங்கிக்கொண்டு இருப்பதாக நம்பி வருகிறது. மேல்நாடு இருந்த இடத்தில் இருந்துகொண்டே உலகிலும் ஆகாயத்திலும் நிகழும் காட்சிகளையும் பிறவற்றையும் அறிந்துகொள்வதற்குப் பலவித கருவிகள் கண்டுவருகிறது, கீழ்நாடு தனது நாடுதான் உலகம் என்ற 'அரிய' தீர்மானத்தில் இருந்துவருகிறது. மேல்நாடு கடவுள் என்று கூறப்படுவதை உருவஞ்செய்து வணங்காது இருந்துவருகிறது, கீழ்நாடு கல்லையும் மண்ணையும் செம்பையும் பொன்னையும் மரத்தையும் கடவுளாக வணங்கி தனது அரிய காலத்தை வீணாக்கி வருகிறது. மேல்நாடு முன்னோர் நூல்களை அழித்து வருகிறது, கீழ்நாடு முன்னோர் நூல்களை வைத்துப்போற்றி தன்னிடத்தில் சுய அறிவு இல்லையென்பதைக் காட்டிவருகிறது.........

என்றுதான் மேல்நாடு போலக் கீழ்நாடும் ஆகப்போகிறதோ! என்றைக்கு உண்மையை உணர்ந்து கிறிஸ்துவ மதத்தை தழுவியிருக்கும் அவர்கள் மேல்நாட்டைக் கீழ்நாடு பின்பற்றப்போகிறதோ! என்றைக்கு மேல்நாடு அறிவு ஆராய்ச்சிகளிற் சிறந்திருப்பதைப்போன்று கீழ்நாடும் ஆகப்போகிறதோ! எப்போது சாமி—சமய—மூடவழக்கங்களின்று விடுபடப் போகிறதோ அன்றே மேல்நாடுபோல் கீழ்நாடும் இன்பவாழ்வை எய்தமுடியும்; அன்றே மேல்நாடு அறிவு ஆராய்ச்சிகளில் முன்னிலையில் இருப்பதைப்போல் கீழ்நாடும் ஆகமுடியும். அன்றே மேல்நாட்டில் வதியும் மக்களைப்போல் கீழ்நாட்டு மக்களும் மக்களாக முடியும் அன்றே மேல்நாடு பெருமை கொள்ளுவதுபோல் கீழ்நாடு பெருமையுற முடியும். அன்றே மேல்நாடும் கீழ்நாடும் ஒன்றாகவுமாயும் டப்! டப்!! டப்!!

"இன்பவாழ்வு உனக்குள்ளே!"

"யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!"

(7-ம் பக்கத்தொடர்ச்சி.)

களை ஆலயங்களில் மற்றவர்களுடன் சமமாக அனுமதிக்காது தனிப்படுத்தி வைப்பதுடன் ஆலயச்சடங்குகள் செலவிற்கு பேதாபேதங் காட்டி வருவதற்காகவும் இம்மகாநாடு வருந்துவதுடன், இத்தகைய வித்தியாசங்களையும் தடைகளையும் ஒழித்துவிடும்படி ஆலய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகின்றது" என்னும் தீர்மானத்தை பிரேரேபிக்க ஸ்ரீமான் எஸ். எம். ஏ. சமத் தீர்மானத்தை ஆமோதித்துப்பேச தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## மோட்டார் பஸ் தடைகள்.

பின்னர் "சில பஸ் சொந்தக்காரர்கள் திண்டாதாரை மோட்டார்களில் ஏற்றிக்கொள்ள மறுத்து வண்டிச்சட்ட விதிக்கு விரோதமாய் நடந்துகொள்வதைக்குறித்து இம்மகாநாடு அதிகாரிகளுக்கு கவனமூட்டுவதுடன், அவ்வாறு மீறி நடப்பவர்களைக் கடுமையாகத் தண்டித்து அத்தொல்லையை ஒழிக்கும்படி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது" என்னும் தீர்மானம் முடிவில் ஸ்ரீமான் வேங்கடேச முதலியாரால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான் பாலகுரு சிவத்தால் ஆமோதிக்கப் பேசப்பட்டபின் ஏகமனதாக நிறைவேறியது.

மகாநாடு இப்படி நடந்து பெற்று இனிது முடிந்ததற்கு காரணமாகிய திருவாளர்கள் சுரேந்திரநாத் ஆரியா, ராமநுஜலு முதலியவர்களின் முயற்சியும் தொண்டும் பாராட்டத்தக்கன.

விருதுநகர் ரா. க. ரத்தினசாமி நாடார் வாசகசாலை.

நிகழும் விபவ ஆண்டு மாசித்திங்கள் 12, 13 ம் நாட்களில் ஷை புத்தகவாசகசாலையின் 11-வது ஆண்டு நிறைவுவிழா நவசக்தி ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் வாசகசாலையின் முன் அமைத்துள்ள கொட்டகையில் நடைபெறும். காரியதரிசி.

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.

## இதுதானா கடவுள் வணக்கம்?

மலாயா நாட்டில் ஈப்போ நகரில் வசிக்கும் நமது தமிழ் மக்களாகியவர்களில் சிலர் ஆணும் பெண்ணுமாய் சேர்ந்து கல்லுமலை "சுப்பிரமணியர் கோவிலுக்கு" கடவுள் வணக்கமென்று சொல்லி வேலாயுதமென்றும் சூலாயுதமென்றும் இரும்பினாலும் செம்பினாலும் பித்தளையினாலும் வெள்ளியினாலும் கூர்மையாக அம்புபோல் செய்து கொண்டு தமது அவயவங்களில் அதாவது நாக்கிலும் மூக்கிலும் கையிலும் காலிலும் குத்திக்கொண்டும் மருள் அடிக்கொண்டும் உடுக்கு அடித்துக்கொண்டும் சுமார் ஒரு மைல் தூரம் தம்முடைய சரீரத்தை வதை செய்துகொண்டு போகிறார்கள். என தன்பான சகோதரர்களே! நமது மூடக்கொள்கையை அறிந்த பின்மேயோ நம்மை ஏளனம் செய்வது போதாதென்று இந்த மலாயா நாட்டில் வசிக்கும் பிரஞ்சுக்காரரும் சீனதேசத்தாரும் ஜப்பான்காரரும் நம்மை ஏளனம் செய்யவா இந்த மூடச் செய்கையைச் செய்கிறீர்கள். ஈப்போவில் சுயமரியாதைக்காரரும் இந்து சபாவின் தலைவருமாய் இருப்பவர்கள் இந்த மூடக்கொள்கையை நிறுத்தினால் சாமியின் வணக்கம் நின்றுவிடுமா என்றுதான் கேட்கிறோம். நமது தமிழ் மக்களாகிய சகோதர சகோதரிகளே! நீங்கள் ஆகாரமென்று ஆடுவதும் சரீரத்தை குத்தி வதை செய்வதும் மருள் வந்த தென்று மயங்கி விழுவதும் கடவுள் வணக்கம் ஆகுமா என்று வணக்கமாய்க் கேட்கிறேன்.

சுயமரியாதையை நாடுங்கள்! சமத்துவமாய் கூடுங்கள்!! மூடக்கொள்கையை ஒழியுங்கள்!!! எஸ். இராயப்பனார்,

ஈப்போ, எப். எம். எஸ்.

# நோட்டீஸ்.

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1928-வருஷ O. S. நெ. 1068

கஸ்பா ஈரோடு ஒக்கிலியர் வீதியிலிருக்கும் செங்கோடவண்ணான் பெண்ஜாதி ராம வண்ணாத்தி—வாதி.

கஸ்பா ஈரோடு ஒக்கிலியர் [illegible] வார்டு பழய முனிசிபல் நெ 30 புதிய நெ 20-T S 1114 வீட்டிலிருக்கும் சின்னவண்ணான் மகன் பழனிவண்ணான்—பிரதிவாதி.

ஷை நெம்பரில் வாதிக்கு பிரதிவாதி பழனிவண்ணான் 4—11—13ந்தேதியில் ரூபாய் 100—க்கு எழுதிக்கொடுத்திருக்கும் அடமானப் பத்திரப்படிக்கு செல்லானது போக பாக்கி அசலவட்டி சகிதம் ரூபாய் 135—6—0 ம் பின் வட்டியும் கோர்ட்டு செலவும் பிரதிவாதியால் கிடைக்கவேணுமாய் வாதி தாவாசெய்து ஷை நெம்பர் வாய்தா 20—2—29உக்கு ஏற்பட்டிருக்கிறது. அன்று பிரதிவாதி கோர்ட்டில் ஆஜராகாவிட்டால் ஷை நெம்பர் ஒரு கக்ஷியாக தீர்ப்புச்செய்யப்படும்.

12-2-29 ஈரோடு } கே. சுந்தரம் ஐயர் வாதி வக்கீல்.

# கீதையின் தத்துவம்.

பட்டுக்கோட்டை
திரு. ப. சு. தண்டபாணிசெட்டியார் எழுதுவது.

(கட்டுரை 3)

நூல்வரலாறு—முன்தொடர்ச்சி

கீதையின் வரலாற்றுக்கு முதல்காரணமாகிய மகாபாரதம் வடமொழியிலுள்ள இதிகாசமாகும். அது தமிழில், பெருந்தேவனார், வில்லிபுத்தூராழ்வார், நல்லாப்பிள்ளை முதலியவர்களால் கவிரூபமாகப் பாடப் பெற்றிருக்கிறது. வடமொழியிலும் தென்மொழியிலும் உள்ள இந்த பாரதக்கதையில் கீதையின் பிரஸ்தாபம் கொஞ்சமே காணப்படுகின்றது. போர்முனையில் மலைத்துநின்ற அருச்சுனனுக்கு கிருஷ்ணன் உபதேச பூர்வமாக சில விஷயங்களைக்கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த உபதேசங்கள் வடமொழி பாரதத்தில் சில சுலோகங்களிலும் தென்மொழி பாரதத்தில் சில கவிகளிலும் கூறப்பட்டிருக்கின்றதேதவிர, நாம் இன்றுபார்க்கும் தனிநூலாகிய பகவத்கீதையில் உள்ளவாறு விரிவானதாகக் கூறப்பட்டிருக்கவில்லை. கீதையென்னும் தனி நூலும் விரிவாக வடமொழியிலும் தென்மொழியிலுமிருக்கிறது. எனினும் பாரதத்தில் கூறப்பட்டபடியான சுருக்க அளவில் அதிலில்லை. பாரதத்தில் கிருஷ்ணன் செய்ததாகக் கூறப்பட்ட உபதேசம் கடமையின் அவசியத்தையும் முக்கியத்தையும் பற்றியதாகும்.

யுத்த சன்னத்தனாகாண களத்திற்குவந்த அருச்சுனன் எதிரிகள் யாவரும் தம் உறவினர்களாக இருக்கின்றார்களே என்று நினைத்து மனச்சோர்வடைகின்றான்! இவர்களையெல்லாம் கொன்று நாம் நாடடைவது என்று கலங்குகின்றான். அந்தநிலையில் போர்வீரனாகவந்த அவன் தனது கடமையைச்செய்தலே முறையென்றும், அக்கடமையைச் செய்வதில் உத்தேசமெதுவும் அவசியமாகக் கொள்ளப்பட வேண்டுவதில்லை எனவும் கூறி கிருஷ்ணன் அருச்சுனனுக்குக் கடமையாகிய தர்மத்தின் தன்மைகளை உபதேசிக்கிறான். இவைதான் பாரதம் கூறுவதின் சுருக்கமான கருத்து ஆனால் தனியா[illegible]னும் நூலில் இது வெகுவாக வளர்க்கப்பட்டு விரிவாகவும் பல சேர்க்கைகளுடனும் கூறப்பட்டிருக்கிறது.

இதை நோக்குமிடத்து கீதாசாரம்முழுவதும் வியாசர்மூலம்உற்பத்தியானது என்றும் எண்ணிவிட ஏதுவில்லை. பாரதத்தை முதல் நூலாகவும் இந்த கீதையை வழிநூலாகவும் கொள்ளுவதே தகுதியாகும். பாரதத்தில் வியாசரால் அடிப்படை போடப்பட்ட ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டு விரிவான தனிநூலாக கீதை எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று கொள்வதே சரியான முடிவு. எனவே கீதைக்கு கர்த்தாவும் பொறுப்பாளியும் வியாசர் என்று கருதி விடுதலும் பொருந்தாது. பின் அது யாரால் விரிவாக எழுதப்பட்டது என்று கவனிக்கும்பொழுது அதற்கானதக்க முடிவுக்கு வருதற்கு போதிய ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

கிருஷ்ணனால்கீதை கூறப்பட்டதாக சுருதிகூறுகின்றது. உலக நம்பிக்கையும் இதுவரை அவ்வாறே கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால் உண்மையில் கிருஷ்ணனால் கீதை கூறப்பட்டதுமல்ல. மக்கள் அவ்வாறு நம்புமாறு கிருஷ்ணன் என்றபெயர் மீதேற்றிக் கூறப்பட்டிருக்கின்றதெனவே நாம் எண்ணுகின்றோம். பாரதத்தில் கூறப்பட்ட கிருஷ்ணன் உபதேசத்திற்கும் கீதையில்வரும் விரிவான செய்திகளுக்கும் உள்ள வேறுபாட்டினால் அது முழுதும் வியாஸர் வேலையல்லவென்றும் கூறினோம். எனவே பிற்காலத்துத் தோன்றியவர் ஒருவரால் கீதையென்னும் நூல் பாரதத்தில் வரும் உபதேசத்தை யாதாரமாகக்கொண்டு விரிவாகப்பல சேர்க்கைகளுடன் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்றே நினைக்கவேண்டியிருக்கின்றது.

மகாபாரதத்தின் மூலம் கிருஷ்ணனுக்கு வியாசர் தெய்வீகம கற்பித்துப்போய்விட்டார். அதனால் ஜனசமூகம் கிருஷ்ணனைக்கடவுளாக நம்பி வழிபட ஆரம்பித்துவிட்டது. அதைக்கொண்டு இந்தப்பெயர் வெளியிடாத ஆசிரியர் பாரதத்தில்வரும் கிருஷ்ணன் உபதேசத்தை விரிவான நூலாக்கி தமது சரக்குகள் பலவற்றையும் அதில் சேர்த்துப் பரவச்செய்து விட்டதுடன் அந்நூல் முழுதும் கிருஷ்ணன்கூறியதாகவே மக்கள் நம்புமாறு அதற்கு ஆசிரியரும் கிருஷ்ணன் என்பதாக எழுதிவைத்துப்போய்விட்டார். அந்நூலில் தமதுடைய கருத்துகள் பலவற்றைச் சேர்த்திருப்பதாலும், அதை கிருஷ்ணன்மீதேற்றிக் கூறுவதால்கடவுள் வாக்கென யாரும் நம்ப இடமிருந்தாலும அந்த ஆசிரியர் யாவற்றையும் கிருஷ்ணன் மீதேற்றிக் கூறிவிட்டார் என்பதில் சந்தேகமில்லை.

வியாசரின் கற்பனையினால் கிருஷ்ணன்என்ற பெயரால் பாரதத்தில் வரும் ஒரு கதாநாயகனைக் கடவுளென்று மாக்கள் கொண்டு வழிபட்டு வந்தமையினால், அக்கடவுளால் கூறப்பட்டதாக இந்த கீதையையும் நம்பிப் போற்றவேண்டியதாயிற்று. முற்காலத்து முதநூலின் தன்மையையோ அல்லது பிற்காலத்துவழி நூலின் இடைச்செருகலையோ கவனிக்க இயலாத ஜனக்கூட்டம் இந்த கீதையை உள்ளது உள்ளவாறு நம்பி ஒப்புக்கொள்ள நேர்ந்தது. பாரதத்தில் வரும் கிருஷ்ணன் உபதேசத்தையும், கீதையாகிய தனிநூலில்வரும் உபதேசங்களையும் ஒப்பிட்டுப்பார்த்து பின்சொல்லியதில் காணப்படும் அதிகப்படியான நூதன விஷயங்களை ஆராய்ந்துணர்ந்தால் நாம் கூறும் இந்த முடிவு சரியானதென்று நண்பர்களுக்குப் புலனாகும்.

ஆகவே கீதையின் ஆசிரியர் அதில் கூறப்பட்டவாறு இருக்க முடியாதென்பதும் பிற்காலத்துத்தோன்றிய ஒருவரே அதை இப்போதுள்ளவாறு அமைத்திருக்கவேண்டும என்பதும் வெளிப்படை. இவ்வாறு தோன்றிய அந்த கீதையில் சநாதன தர்மப்பிரசாரமும் பிராமணீயத்தின் உயர்ச்சியுமே வலியுறுத்தப்படுவதால் அது சாதிக்கர்வமிருந்த ஒரு ஆரியப்பார்ப்பனரால் வரையப்பட்டிருக்கவேண்டுமேயல்லாமல் சாதாரணமாக நினைக்கப்படுகின்றபடி கிருஷ்ணன் வாக்கியமாகவோ அல்லது கடவுள் என்பவரின் கருத்ததாகவோ இருக்க ஒருசிறிதும் நியாயமில்லை.

அது அவ்வாறாக கீதை எக்காலத்துத் தோன்றியிருக்கவேண்டும் என்பதும் கவனிக்கற்பாலது. துவாபரயுகத்தின் ஈற்றில் மகாபாரதம் நடந்ததாககூறப்பட்டிருக்கின்றது அக்கால அளவின் உண்மை சரித்திர ஆராய்ச்சிக்கு ஒத்து வராது. இந்துமதப் புராணங்களிலெல்லாம் அடிப்படையாகவுள்ள முதற் பிசகு காலத்தைப்பற்றி கணக்கில்லாமல் அதிகப்படுத்திக் கூறுவதேயாகும். ஆரியநூலார் எல்லையில்லாமல் கற்பனை செய்து கூறும் மோசமான பழக்கமே அதற்குக்காரணமாகும். மகா பாரதத்தைப்பற்றிய சரித்திர உண்மை இங்கு ஆராயப்படத்தக்கதல்ல. அதன் இரகசியம் எவ்வாறிருந்தாலும் கூட அதைக்கொண்டே நாம் கீதையின் காலவரையறையும் திட்டப்படுத்த வேண்டியிருக்கின்றது. மகா பாரதத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள் யாவும் அவ்வாறே நடந்ததா, அவற்றின் உண்மைகள் என்ன என்பவை தனியாக ஆராய்ந்தறியவேண்டிய விஷயமாகும். அதன் சரித்திரப் பொருத்தமான உண்மை எப்படியிருந்தாலும் அந்த பாரதக் கதை எழுதப்பட்ட காலமாவது யாது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

பாரதம்எழுதப்பட்ட காலத்தைத் திட்டமாகநாம்அறிந்து கொண்டால்அதன்வழிநூல்கீதை அதற்குப் பிற்காலத்தில்ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது தானாக விளங்கிவிடும். தென்மொழி என்று கூறப்பட்ட தமிழில் உள்ள பாரத நூல்களில் இல்லாத ஒரு புதுமை வடமொழிப்பாரதத்தில் காணக்கிடக்கின்றது. வடமொழியிலுள்ள பாரதத்தில் திருஞான சம்பந்தரின் கதை பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. தென்னாட்டில் ஞான சம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றச் செய்த சம்பவம் அதில் விளக்கப்பட்டிருக்கின்றது. இதனால் பாரதம் துவாபர யுக ஈற்றில் நடந்ததெனக் கூறப்படும் காலக்கணக்குப் பாதிக்கப்படக்கூடும்! ஏனெனில் ஞான சம்பந்தர் கலியுகத்தின் மிகப் பிந்திய காலத்திலிருந்ததாக யாவராலும் நம்பப்படுகின்றது! அவரைப் பற்றிய சம்பவம் வடமொழிப் பாரதமாகிய ஆதி நூலில் வருவதால் அவர் காலத்திற்குப் பின்னரே தான் பாரதம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது.

திருஞான சம்பந்தரிருந்த காலத்தைசரித்திர ஆராய்ச்சி செய்த தமிழறிஞர்கள் திட்டமாய் நிர்ணயம் செய்துள்ளார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு முன் இரண்டாவது நூற்றாண்டில் அவரிருந்திருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிபு. அதாவது இற்றைக்குச் சுமார் 2100 வருஷங்களுக்கு முன்பு அவர் இருந்திருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. எனவே அவர் கதையும் பாரதத்தில் பிரஸ்தாபிக்கப்படுவதால் அவரிருந்த காலத்திற்குப் பின்னரே அதாவது இற்றைக்கு 2100 வருஷங்களுக்குப் பின்

பாகத்தான் பாரதம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதில் யாதும் ஐயமிருக்க முடியாது. இதனால் பாரதத்தின் தோற்றம் துவாபரயுகம என்று கூறப்படும் கணக்கற்ற காலவரையின் பாற்படாதென்றும், இற்றைக்கு சுமார் 2100 வருஷங்களுக்கு பின்னர் தான் அது எழுதப் பட்டிருக்க வேண்டுமென்றும் வாசகர்களுக்குத் தெரியக்கூடும்.

மேலும் பெருந்தேவனார் என்பவரே முதலில் பாரதத்தைத் தமிழில் பாடியவர். அவர் கடைச் சங்க காலத்துப் புலவர்களுள் ஒருவர். அக்காலத்திருந்த வள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்கு அவரும் ஓர் சாற்றுக்கவியளித்துள்ளார். அப்பெருந்தேவனாரிருந்த கடைச் சங்ககாலம் இற்றைக்கு 1800 வருஷங்களுக்கு முன்பு என்பதாக சரித்திர நூல் வல்லவர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். எனவே பாரதத்தை அவர் தமிழில் பாடினாரெனில் அவர் காலத்திற்கு முன்னால் வடமொழியில் பாரதம் உண்டாகப் பட்டிருக்க வேண்டும் என்பதற்கு ஆக்ஷேபனையிருக்க முடியாது. இவ்வாறு பார்க்கும் பொழுது இற்றைக்கு முன் 1800 வருஷங்களுக்கு மேல் 2100 வருஷங்களுக்குள் வடமொழி பாரதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். அநேகமாக இற்றைக்கு 2000 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டிருக்கலா மென்பது ஒருவாறு பொருந்தும். அப்படியானால் அந்த பாரதத்திற்கு வழி நூலான கீதை இன்னும் பிற்காலத்தே தோன்றியிருக்க வேண்டுமல்லவா? இவற்றை நேயர்கள் யோசித்துப் பார்த்தால் கீதையின் தோற்றம் இற்றைக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பிற்பட்டே ஏற்பட்டிருக்க வேண்டும என்பதும், எப்படிப்பார்த்தாலும் அதற்கு மேற்பட்டதாகக் கூற ஆதாரமில்லை என்பதும் தெரியாமல் போகாது.

ஆதலால் பலர் நினைக்கின்றபடி கீதை கடவுளால கூறப்பட்டதல்லவென்றும் வாசகர்களுக்கு இனிது விளங்கக்கூடியதாக யிருப்பதுடன் அது மிகச் சமீபகாலத்தில் அதாவது இற்றைக்கு முன் சுமார் 2000 வருஷங்களுக்கும் வெகு காலம் பிற்பட்டு ஏற்பட்ட நூல்தான் என்றும் தெரிந்து கொள்ளக் கூடியதாகவுமிருக்கின்றது. இந்த கீதையில் ஆரிய தர்மமே வெகுவாகச் சிலாகிக்கப்பட்டிருக்கிறது. தென்னாட்டுப் பூர்வீகப் பழக்கங்களுக்கு ஆரியரின் வேறு படுத்தக்கூடிய தர்ம முறைகள் புறம்பானவையாகும். ஆதலின் ஆரியர் தென்னாடு வந்து தங்கள் நாகரீகத்தைப் பரவச் செய்யத் தலைப்பட்டது முதலாகவே அதற்கு சமத்துவாதிகளாகிய தமிழர்களால் எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. இதற்கு அநேக ஆதாரங்களிருக்கின்றன. திருவள்ளுவர் குறளை எழுதிய காலத்தில் ஆரியக் கொள்கைகள் பரவியிருந்தாலும் கூட அவர் தமது நூலில் சமத்துவத்தை வெகுவாக வற்புறுத்திக் கூறிப் போயுள்ளார். அது போலவே வட நாட்டிலும் கூட சநாதன தர்ம மதத்தின் முக்கியக் கோட்பாடாகிய வருணாசிரம முறையை எதிர்த்து புத்தர்கள் போராடியிருக்கின்றார்கள். தென்னாட்டிலும் அக்காலத்தே புத்தசமயிகளிருந்தார்களாதலின் அவர்களும் ஆரிய ஆதிக்கத்திற்கு விரோதமாக யிருந்தனர்.

இவ்வளவு எதிர்ப்புகள் இருந்தமையினால் தங்கள் நிலையை உயர்வாக வைத்துக் கொள்ள ஆரியர்கள் பலஸ்மிருதிகளும், இதர நூல்களும் இயற்ற வேண்டியதாயிற்று. அதன்பயனாகவே இராமாயணம், மனுஸ்மிருதி, பாரதம், கீதை போன்ற ஆரிய நூல்கள் தோன்றின. இவையெல்லாம் ஆரியரல்லாதாரை அடிமைப்படுத்தி தங்களுக்கு ஆதிக்கம் தேடிக் கொள்வதற்கேயாகும். இந்த நூல்களிலும், குறிப்பாகக்கீதையிலும் பார்ப்பனீயப்பிரசாரம்பலமாகயிருப்பதால், ஆரியர்களின் குரு என்பதாகக் கொள்ளப்பட்ட பிராமணரே தங்கள் நலத்திற்காக இவ்வாறு எல்லாம் செய்திருக்கிறார்கள் என்றே எண்ண வேண்டியதிருக்கின்றது. அவ்வாறு எண்ணுவதிலும் தவறில்லை. ஆரியப் பார்ப்பனர்கள் தங்கள் உயர்வை உத்தேசித்தும் அக்காலத்து நேர்ந்த எதிர்ப்புகளைச் சமாளிக்கக் கருதியுமே இந்த கீதை போன்ற நூல்களில் பலவிடங்களில் அதற்கான சேர்க்கைகளை அதிகமாகக் கூறியிருக்கின்றனர். அந்த முறையிலே தான் இற்றைக்கு முன் சுமார் 1800 வருஷங்களுக்கு முன் 2000 வருஷங்களுக்குள்ளாக, இந்த கீதை எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று நாம் அபிப்பிராயப்படுகின்றோம்.

இந்த கீதையில் பிராமணீய பிரசாரம் அதிகமாகக் காணப்படுவதால் நமது நாட்டில் பார்ப்னீய ஆதிக்கம் நிலைப்பதற்காக ஒரு ஆதாரமாக இது எழுதப்பட்டதென்றும் நினைக்க வேண்டியதாயிருக்கின்றது. பிராமணர்களின் ஆதிக்கம் வலுப்பதற்கு அது தக்க கருவியாக உபயோகப்பட்டது, இன்னும் உபயோகப்பட்டு வருகின்றது என்று கூறுவதிலும் குற்றமில்லை. அது மட்டுமல்லாமல் பொதுவாக ஆரிய தர்மத்தின் கோட்பாடுகளையும அதிகமாகப் பரவச் செய்ய வேண்டு மென்பது கீதையின் தோற்றத்திற்கான காரணங்களிலொன்றாகும். அவ்வாறெல்லாமிருப்பதையறியாத தமிழ் மக்கள், தங்களின் பண்டைய நாகரிகத்திற்குப் புறம்பான கொள்கைகளைப் பாட்டும் அந்நூலை உயர்ந்த தத்துவ நூல் என்றும் கடவுள் வாக்கு என்றும் கருதி மயங்குகின்றார்கள். ஆன்மார்த்த விஷயங்கள் நிரம்பியதாகச் சொல்லப்படும் அந்த கீதையில் இலௌகிக ஆசைகளின் சூழ்ச்சிகளும், தனியாக ஒரு வகுப்புக்கு உயர்வு கொடுக்கும் தன்மையும் நிறைந்திருப்பதுவே அதன் நேர்மையற்ற நீதிக்கு ஒரு எடுத்துக்காட்டாக யிருக்கின்றது! இவற்றின் உண்மைகளும் இன்னும் இவை போன்று கீதையிலுள்ள பல்வேறு விஷயங்களும் நாம் அந்நூலை இனி அத்தியாயம் அத்தியாயமாக எடுத்துக் கொண்டு ஆராயும் பொழுது வாசகர்களுக்கு விபரமாக விளக்கிக் காட்டப்படும். அதிலிருந்தேனும் கீதையின் பால் தவறாகக் கொள்ளப்பட்ட உணர்ச்சி நீங்கி மக்களுக்குள் சமத்துவ எண்ணம் மலிய வேண்டுமென்று நாம் பெரிதும் விரும்புகின்றோம்.

(தொடரும்.)

# பேரூர் கும்பாபிஷேகத்தால் பலனடைந்தவர்கள் யார்

மேலைச் சிதம்பரம் என்னும் பேரூரில் சென்ற 1—2—29ல் கும்பாபிஷேகம் காளீஸ்வரர் மில்ஸ் கல்லாவி மில்ஸ் சொந்தக்காரர் திவான்பகதூர் சோமசுந்திரம் செட்டியார் அவர்களால் சிறப்பாக நடைபெற்றது. ஷை கும்பாபிஷேகத்திற்கும் கோயில் கட்டுவதற்கும் மொத்தம் மூன்று லக்ஷம் ரூபாய் செலவிருக்குமென்று சொல்லப்படுகிறது. அங்கு கூடியிருந்த மக்கள் சுமார் 20, 30 ஆயிரம் இருக்குமென்றே சொல்லவேண்டும். அங்கு செட்டியாரால் போஜன விடுதிகள் பிராமணர்களுக்கென்றும் சைவர்களுக்கென்றும் நாட்டுக்கோட்டை செட்டிமார்களுக்கென்றும் பல விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. போஜன விடுதியில் டிக்கட் காண்பிக்காவிடில் போஜனம் கிடைக்காது. ஷை டிக்கட்டுகள் குறிப்பிட்டவர்களுக்கு கிடைக்குமேயன்றி ஏழை பொது ஜனங்களுக்கு கிடைப்பது சாத்தியமன்று. கும்பாபிஷேகத்துக்கு வந்திருந்தவர்களில் அநேகர் உணவு கிடைக்காமல் திரும்பிச்சென்றனர். இவ்விதம் எண்ணிறந்த நம் ஏழை மக்கள் உணவு கிடைக்காமல் திரும்பிச் செல்லுங்கால் நமது செட்டியார் அவர்களுக்கு கும்பாபிஷேகத்தில் என்ன பலன் கிடைக்கப்போகிறது. இக்கும்பாபிஷேகத்தில்பார்ப்பனர்களுக்கேயன்றி பார்ப்பனரல்லாதார்க்கு எள்ளளவும் நன்மையில்லை என்றே சொல்லவேண்டும். இத்தகையகும்பாபிஷேகம் ஒவ்வொரு கிராமத்திலும் பரவிவிட்டது. அமாவாசை, முதலியன வந்தாலும் பார்ப்பனர்கள் வயிறு கொழுக்கத்தின்பார்களேயன்றி நம் பிராமணரல்லாத மக்களுக்கு கொஞ்சமேனும் நன்மையுண்டா?

நம் செட்டியாரவர்கள் மூன்று லக்ஷம் ரூபாய் செலவிட்டல்லவோ கும்பாபிஷேகம் செய்திருக்கின்றார். இம் மூன்று லக்ஷம் ரூபாய்க்கு ஓர் பண்டு சேர்த்து அதன் வருவாயைக்கொண்டு கணக்கற்ற ஏழைகளுக்கு அன்னமிடலாம், கல்வியளிக்கலாம். அதனால் பல ஏழை மக்கள் பிழைப்பது மன்றி நம் செட்டியாரவர்களை வாழ்த்தியும் செல்வர். வித்யாதானத்தை விடவா கும்பாபிஷேகம் செய்வதிலும் கோயில் கட்டுவதிலும் சிறந்த நன்மைகள் உண்டாய்விடும்? நம் செட்டியார் அவர்கள் இனிமேலாவது இவ்வித அநாவசியச் செலவு செய்யாமல் ஏழை மக்களுக்கு அன்னமளித்து கல்வியளித்து உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மு. நா.

# பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

பெரிய கருப்பத்தேவர் என்பவர் தமது தகப்பனருக்கு 10 வருஷ காலமாக புரோகிதரை வைத்து திதி நடத்தியதை 25-1-29ல் புரோகிதரை வேண்டாம் என்று சொல்லி தன்னுடன் இன்னும் இரண்டு பேர்களை வைத்து திதி நடத்தி 6, 7 பேர்களுக்கு சாப்பாடு போட்டார்கள்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுச் சென்று பரதனைக்கண்டு நான் அவசரமாக அழைத்ததாகப் பரதனை அழைத்துவாருங்கள். இராமன் காட்டடைந்ததையும் தசரதன் மாண்டதையும் அவனிடம் கூறவேண்டாம்'' என்றனன். சித்தார்த்தன் முதலியோர் புறப்பட்டுப்போய் பரதனையடைந்தனர். இவ்வாலாற்றை ஆராய்வோம்.

இராமன் சொல்லியனுப்பியதைக் கேட்டவுடன் மூச்சற்று விழுந்த தசரதனைப்பார்த்துக் கோசலை அநியாயக்காரனென்றும், பாசங்குக்காரனென்றும் வஞ்சகனென்றும் கூறுவதைக் கவனித்தால், அவள் பெண்களுக்கொரு வழி காட்டிகாக இருக்கிறாளென்பது திண்ணம். அவளைப்போலும் பெண்களைக் கொண்டவனுக்குக் கூற்றுவனும் வேறு வேண்டுமோ? பின்னரும் அவள் தன்னையும் தன் மகனையும் தசரதன் கெடுத்து விட்டதாகப் பலவாறு அவதூறாகப் பேசுகிறாள். அவள் அப்போது பேசிய பேச்சுக்கள் மிகவும் கொடியவை. அதைக்கேட்டவுடன் தசரதன் நடுங்கிமனமுடைந்து மூச்சற்றான். பின் தெளிந்த உடனேயும் பக்கத்தில் நின்ற கோசலையைப் பார்த்து நடுங்கி மறுபடியும் மூச்சற்றான். பின் அவளை நோக்கிக் கைகுவித்து வேண்டுகிறான் இவ்வளவு தூரம் தனது கணவனையே நடு நடுங்கச்செய்த கோசலைடைப் பெண்ணென்பதோ பேயென்பதோ? பேய் கூட இவ்வளவு கொடுமையாக நடந்துகொள்ளாதே. கோசலை 'சுவை யிருந்த மாமிசங்களை உண்டவளான சீதை காட்டில் என்ன செய்வாள்' என்று புலம்புகிறாள். சீதை காட்டில் மூழுப் பன்றிகளையும் மான்களையும் தின்பது இவளுக்குத்தெரியாது. இதனால் சீதை முதலியோர் நாடோறும் புலாலுண்போரென்பது உறுதியாகின்றது.

கோசலை 'கணவன்' மகன் அல்லது தந்தைஇவர்களுடைய ஆளுகையிலேயே பெண்கள் இருக்கவேண்டியவர், பெண்கள் பிறருக்கு அடங்கியிராமல் ஒருகாலும் தம் மனப்படி நடக்கமுடியாதென்று விதியுள்ளதன்றோ?' என்று கூறுகிறாள். இதனால் ஆரியர் தம் பெண் மக்களை மிகவும் தாழ்த்தியே வந்தனரெனத் தெரிய வருகிறது. தற்காலத்திலும் ஆரியர் பெண்கள் ?முத்தியடையாரென நம்புகின்றனர். நூல்களெழுதுகின்றனர், நடையிலும் அவ்வாறே செல்கின்றனர். ஆரியப் பெண்களில் திருநீறு அணியும் குடும்பதைச்சேர்ந்தோர் தமது கணவரைப் போல திருநீறணிவதில்லை, நாமமணியும் குடும்பத்தினர் தமது கணவரைப்போல நாமமணிவதுமில்லை. திருநீறணியும் குடும்பத்தினர் கணவனைப்பறி கொடுத்த விதவைகளுக்கு தம்மைப்போல் திருநீறணிய உரிமை தருகின்றனர். இதனால் அவர்கள் விதவைகளைத்தமக்குச்சரியான நிலையுடையரெனக்கருதுகின்றனரென்பது விளங்குகிறது. பெண் மக்களை உரிமையற்றவர்களாக ஆக்கிக்கல்வியறிவற்றராகப் போகும்படி செய்த இவ்வாரியர் வழக்கமே தமிழ் மக்களிடையும் பரவுவதாயிற்று. பண்டைத் தமிழ் மக்கள் ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் வேறுபாடு காட்டாத நிலையினர்.

தசரதன் சாகும்போது கோசலையும் சுமித்திரையும் அவன் பக்கத்திலேயே படுத்துத் தூங்கியிருந்தனர். மற்றைய பெண்கள் எழுந்து மிகவும் கூச்சலிட்டுப்புலம்பிய போது தான் விழிக்கின்றனர். சாகும் நிலைமையில் அவனிடம் அவர்கள் நடந்துகொண்ட முறையினால் அவனிடம் அவர்களுக்கிருந்த அன்பின் அளவு விளங்குகிறது. கணவன் செத்துக்கொண்டிருக்கும்போது மனைவியருக்கு உறக்கமும் வருமா! கணவனிறந்ததையுணர்ந்த கோசலை கைகேசியையே திட்டுகிறாள். பின் உடன் கட்டையேறுவதாகக் கூறுகிறாள். ஆனால் கடைசியில் அப்பேச்சு வெறும் பேச்சாகவே போகிறது.

சுமந்திரன் மிகவும் தீயவனென்பதும் ஏமாற்றுக்காரனென்பதும் தீயவனாகிய தசரதனுடைய சூழ்ச்சிகளுக்கு உடந்தையாயிருக்கிறானென்பதும் முன் கட்டுரைகளிற் கண்டோம். அது இக்கட்டுரையிலும் வலியுறுகிறது. அவனிடம் இராமன் மட்டுமே செய்தி சொல்லியனுப்பியிருக்க அவன் இலக்குவன் கூறியதாகவும் சில கொடிய பொய் மொழிகளைக்கூறுகிறான். முன் ஒன்பதாம் கட்டுரையில் இராமன் மட்டுமே செய்தி கூறியனுப்புகிறான் என்று தெளிவாக கண்டோம். இதனால் அவன் மிகவும் பொய்யன் என்பதும் விளங்குகிறது. இராமனால் பொய்புகலத் தூண்டப்பட்டபோது அதைக்கண்டிக்காமல் இணங்கியிருந்தவன் தானே. இவ்விடத்து மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் ஓர் குறிப்பு எழுதியிருக்கிறார் அது கவனிக்கத்தகுந்தது. அது வருமாறு (பக்கம் 244) சுமந்திரனிடத்தில் இராமன் லட்சுமணன் சீதை என்ன சமாசாரம் சொல்லியனுப்பினார்களென்று முதலில் வால்மீகி வர்ணித்ததற்கும பிறகு அவர் அதை அரசனிடத்தில் தெரிவிப்பதற்கும் சில பேதங்கள் காணப்படுகின்றன. லட்சுமணனுடைய வார்த்தைகள் முதலில் காணப்படவில்லையென்பதைக் கவனிக்கவும்' இக்குறிப்பைக் கவனித்தால் ஒன்று வால்மீகி முனிவர் முன்னுக்குப்பின் முரணாக எழுதி அதனால் திறமையற்றவன் என்ற பெயரடையவேண்டும், அல்லது சுமந்திரன் உண்மையில் கொடிய பொய்யனாக வேண்டும். இவ்விரண்டில் வால்மீகியிடத்தில் அறியாமையைக் கற்பிப்பதிலும் சுமந்திரனிடம்பொய்மையும் வஞ்சகமும் உண்டு எனும் உண்மையறிவதே முறை. ஏனெனில் அவன் அத்தகையன் என்பது முன்னரே நிலைநாட்டப்பெற்றது.

இராமனும் சீதையும் மகிழ்ச்சியோடும் படகேறிச் சென்றிருக்க சுமந்திரன் அவர்கள் அழுது கொண்டு சென்றார்களென்று கூறுகிறான். பின் சீதை கைகேசியைப் பற்றி ஓர் விநோதமான வார்த்தை கூறினாளெனக் கூறுகிறான். இது அபாண்டமான புளுகே. பின் அதைகூறினால் கோசலைக்குப்பிரியமாயிருந்தாலும் அரசனும் கைகேசியும் உயிரை விட்டாலும் விடுவார்கள் என்று சிந்தித்து அதை மறைக்கிறான். இதனால் இப்பேச்சு கைகேசியினுடைய துர்நடத்தையைப் பற்றியே இருக்குமென நினைக்க வேண்டியதிருக்கிறது. இப்பேச்சு சீதை கூறாத பொய் மொழியே இதைச் சுமந்திரன் வேண்டுமென்று கட்டிக்கூற தொடங்குகிறான் இவ்வளவு தீமையாளனாகிய சுமந்திரனை மந்திரியாகக்கொண்டிருந்த தசரதன் தன்மை மிக அழகிதே! நல்ல வேளையாக அவ்வித அபாண்டப் புளுகைக்கூறாது நிறுத்தினானே சுமந்திரன்! அதுவே மிகப்பெருமையுடைத்து.

தனது மனமுருகுமாறுபேசியசுமந்திரனுடைய பொய்மொழியைக்கேட்டதசரதன் 'அழகிற்சிறந்த இராமனுடைய முகமண்டலத்தை நான் பார்க்காவிட்டால் கட்டாயம் இறந்தேபோவேன். என்னை இராமனிடம் கொண்டுபோய் விடு' என்று கதறி பின் தான் முனி மகனைக்கொன்ற கதையைக்கூறி 'கோசலே! என்னைத்தொடு இராமன் ஒரு தடவை என்னைத் தொட்டாலும் போதும் ஒரு தடவை என் கண்ணிற் பட்டாலும் போதும் நான் பிழைத்திருப்பேன். அவனை நான் இறக்கும் போது பார்க்க முடியவில்லையே. இராமனைப் பார்க்காததாலுண்டாகும் சோகம் என் உயிரை வற்றச் செய்கிறது. அவனுடைய [illegible] வாய்ந்த மதுரமான வாசனை வீசும் முகத்தை அவன் திரும்ப வரும்போது பார்ப்பவர்களே புண்ணியவான்கள்' என்று கதறுகிறான். பின் உயிர் விடுகிறான். இதனால் நாம் முன் கட்டுரைகளில் விவரித்தபடி தசரதன் இராமனிடம் கொண்டிருந்த ஆண் காதல் மிகத் தெளிவாகிறது. அவன் இராமனைத் தேடுவதினாலும் அவனைமுத்துகிறதாலும் ஓர் வித இன்பத்தைத் தன்னுடைய பரதன் இலக்குவன் சத்துருக்கன் ஆகிய பிள்ளைகளிடத்தில் காணாத ஓர் விதப்புது இன்பத்தை அவன் இராமனிடைக் கண்டனுபவித்தவனாவான். இவ்வித இன்பத்தை இழந்து அதை நினைத்து நினைந்து ஏங்கி மனமுடைந்து உயிரையும் தசரதன் விடுகிறான்.

## நாடார் மகாஜனங்களுக்கோர் வேண்டுகோள்.

ஆயிரக்கணக்கான ஏழை மாணவர்களின் முற்போக்குக்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நமது சங்க ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் 2-வது லாட்டரி பிரசாரத்திற்கு நமது பிரசாரகர்கள் ஒவ்வொரு கிராமங்களுக்கும் விஜயம் செய்கிறபடியால் குலாபிமானிகளுக்கு பிரபுக்களும் தங்களாலியன்றவாறு ஒத்தாசை செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம். ஷை ஸ்காலர் ஷிப் லாட்டரிச் சீட்டுகள் விற்க உதவியுரிவார்களாயின் ஸ்காலர்ஷிப் பண்டுக்கு ஒரு லக்ஷம் ரூபாய் நிதிசேருவதுடன் அடுத்த வருடத்தில் ஏராளமான ஏழை மாணவர் மாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க அனுகூலமாயிருக்கும். சீட்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய்வீதம் 22 சீட்டுகள் அடங்கிய புஸ்தகம் ரூ. 20 தான். இரண்டுபுஸ்கம் விற்றுக்கொடுப்பவர்களுக்கு ஸ்பெஷல் பிரைசும் கொடுக்கிறோம். 1929-ஹூ ஆகஸ்டு-மீ 20 தேதி மதுரையில் பிரைஸ் எடுக்கப்பெறும்.

காரியதரிசிகள்

## சிராவயல் காந்தி நிலயம் மூன்றாம் ஆண்டு விழா.

ஷை நிலயத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவுவிழா திருமிகு மு. லெ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில், விபவ வருஷம் மாசித்திங்கள் 3ம் நாள் வியாழனன்று நடைபெறும். என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## திருமணம்

ஈரோடு முனிசிபல் பெண் பாடசாலை தலைமை உபாத்யாயினி ஸ்ரீமதி தேவரத்னம் அம்மாளுக்கும் மதுரை போஸ்டாபீஸ் ஆடிட் ஆபீசர் திருவாளர் மதுரநாயகம் அவர்களுக்கும் 11-2-29-ல் ஈரோடு தெ. இ. ஐ. கி. கோயிலில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. மறுநாள் நடுப்பகலில் ஓர் சமபந்தி விருந்து நடைபெற்றது.


## விலாசம் தேவை,

வாழ்க்கையின்பம், காதற் பெருக்கு, பரவச முதிர்ச்சி, புது ஊக்கம், தேகாரோக்கியம் என்னும் பாக்கியங்களை அடைய விரும்புவோர் விலாசத்தை தெரிவித்தால், 'ரகசிய ரத்னம்' என்ற புத்தகத்தை இனாமாயும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்.

**சுகானந்தஔஷதாலயம்**

தபாற் பெட்டி 222,
மதராஸ்.

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

று விவகாரத்தினால் தோற்றுப் போனதென்று நீங்கள் கேட்டதில்லையா? ஐரோப்பாவில் கோவில் கட்டுக்குக்குருட்டுத்தனமாகக் கீழ்ப்பட்டிருந்த தலையை வெட்டி தன் மதிப்பைக் காக்கக் கற்ற ஜாதியாரே தலை தூக்குவது இயல்பாயிற்று என்பதின் சரித்திரங்கள் நீங்கள் படித்ததுதானே. நாங்கள் சமயத்தைக் குற்றம் சொல்லுகிறோம் என்று நீங்கள் கூடவா நினைக்க வேண்டும். சமயம் வேறு; குருக்கள் கட்டுப்பாடு வேறு என்பதை நீங்கள் இனியுமா தெரியவில்லை? மதாச்சாரிகள், வீரர்கள், வர்த்தகர்கள், கலாசாலை முத்திரைதாரிகள், இவர்களைப் போல தாழ்ந்த சமூகமென்னப்பட்டவர்கள் நமக்குத் தேவையானவர்களல்லவோ? இவர்கள் மேல் ஜாதியான் வசிக்கும் வீதி வழி போகக்கூடாதாம். உங்கள் ஜாதிப்பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் கீழ் ஜாதியைச் சேர்ந்தவர்கள் படிக்கப்படாதாம். எளியவர்களும் தாழ்ந்தவர்களும் எப்போதும் ஜன சமூகத்திற்கு அஸ்திவாரமல்லவா? கீழேயுள்ள ஜன சமூகம் வளர்ச்சி பெறாதபடி தடுத்து நிற்கும் கர்வமிக்க சமூகம், எளியவர்களுக்குக் கல்வியை மறைத்து நிற்கும் சமூகம், தங்கள் கால்களையே வெட்டி வீழ்த்திய சமூகமாகும் என்பது உங்கள் அநுபவத்தில் இனியுமா தெரியவில்லை. சன சமூகத்தின் ஒரு பகுதியை மிதித்துக் கசக்கி வறியோராக்கி இழிவடையச் செய்து பட்டினிபோட்டு வாடி வதங்கிக்கிடக்கும்படியானவர்களைப் பற்றி கவலையில்லாதிருப்பதுதானா ஆஸ்திகம்? கடவுள் விதியும் உங்கள் பெரியவர்கள் போட்ட கட்டளையும் இதுதானா? அழுகிப் போய் உதவா [illegible] வான நின்று கொழுத்திருக்கும் சோம்பேறிகளுக்கும் கடவுளின் அன்னசாலையிலே வசிப்பவருக்கும் தானதருமங்கள் கொடுப்பதினால் தானா உங்கள் கவுடளை நீங்கள் பார்க்க வேண்டும். உங்கள் கடவுளை சுவார்த்த புத்தியால் தலை கிழாக்கப் பட்டிருக்கிறது. சமயக் கொள்கைகளும் நெறிகளும் வீணாக்கப்பட்டு அதன் பலன்கள் பாழாக்கப்பட்டு மேல் பூச்சுகளுடன் கல்லாக்கப்பட்டு விட்டது. கடவுள் பெயரைச்சொல்லி ஏமாற்றும் ஆஸ்திகர்களைப்போல தொலை தூரத்தில் கடவுளைக்காணாமல் பிரகிருதியில் கடவுளைக் காணுங்கள். பிரகிருதியே கடவுள் மயமென்று நோக்குங்கள். பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிச்சாலையிலும் அந்தக் கலைஞர்களது அறைகளிலும் கடவுளைத் தரிசனம் செய்யுங்கள். தெய்வத்தன்மை பொருந்தியதாக ரசாயன மேடை கருதப்படட்டும். பிரகிருதியைப் பற்றிப் படிப்பது கடவுளது எண்ணங்களையே மறுபடி எண்ணுவதற்குச் சமமல்லவா என்று அகாஸிஸ் என்னும் தத்துவ சாஸ்திரி சொன்னதை நீங்கள் படித்திருப்பீர்களே.

என் அருமைத் தோழர்களே! இங்கே சற்று கவனியுங்கள். இமயகிரியில் செழித்தோங்கி வளருகின்ற மரங்களுக்கு எனது உஷ்ணத்தையும் ஒளியையும் கொடுத்துவிட்டேன், அதைக்கொண்டே நீங்களும் திருப்தியடைந்து வளரவேண்டும். உங்களுக்குமறுபடியும் இவ்விதம் மேன்மையையும் சக்தியையும் கொடுக்கமாட்டேன், என் முதற் பிள்ளைகளுக்கே எல்லாம கொடுத்துவிட்டேன், அதனிடமே நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும், இல்லையேல் அழுகிப் போவீர்கள் என்று செங்கல்பட்டிலிருக்கும் தென்னை மரங்களிடம் சூரிய பகவான் கூறினால் இந்த தென்னமரங்கள் செழித்தோங்கி விர்த்தியாகுமா? தோட்டத்திலுள்ள ஆரஞ்சி ஆப்பிள் பழங்களின் மேல் வீசும் சூரிய உஷ்ணத்தைக் கொண்டு தடாகத்திலிருக்கும் அல்லி தாமரைமலர்கள் புஷ்பித்து விடுமா? [illegible] உடைய ரிஷிகள் புத்த பகவான் ஏசு கிறிஸ்து கப் [illegible] முதலியவர்களிடம் தோன்றிய ஞானத்தைக் கொண்டு ஷேக்ஸ்பியர் நியூடன், ஸ்பென்ஸர். அடிசன் முதலியவர்கள் வசிக்க முடியுமா? என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

மனு வசித்த காலம் எப்போதோ போய் விட்டது. பூமியானது பலவித மாறுதல்களை யடைந்து விட்டது. நதிகள் தம் சொந்த மார்க்கங்களை நீத்தன சிங்கம் புலி கரடி என்ற கொடிய மிருகங்கள் வாழும் மலைகளெல்லாம் நாகரிகமிருந்த ஆணும் பெண்ணும் ஆடிப்பாடும் அரண்மனைகளாய் விட்டன. அடர்ந்த காடுகள் வெட்டிக் கொளுத்தப்பட்டுப் போயின புஷ்ப ஜாதிகளும் மிருக ஜாதிகளுமே மாறி விட்டன. தேச மக்களும் தேசத்தை விட்டோடு விட்டது. இந்துக்களின் வழக்க பழக்கங்கள் எல்லாம் பழையமாதிரியில்லை. பன்றிக்கறியைத் தின்னவே பாப்பான் படிக்கும் படிப்பெல்லாம் பாடுபடுகிறது. இப்படி இருந்தும் ஆத்ம வழியென்பதே அறியாதவர்கள் பிராமணர்களென்று சொல்லிக் கொண்டு நம் நாட்டில் இன்னம் அப்படியே மனுவால் அவர் காலத்தவருக்கு எழுதப்பட்ட விதிகளுக்கும் கருமங்களுக்கும் ஜாதியின் ஒழுங்கிற்கு தாரானமாக அடிமைத்தனம் வேண்டுமாம். வழக்கத்திலில்லாத பாஷையின் மூலமாகக்கிடைப்பதெல்லாம் தெய்வீகமானதாம். உங்களை அடிமை கொள்ளவும் தாசிமக்களாக்கவுமான சூத்திரகர்மங்களுக்குத் தான் அதன் தெய்வீகம் பலிக்குமாம். பாப்பானின் கர்மங்களையெல்லாம் விட்டு பலகர்மங்கள் செய்தாலும் அந்த தெய்வத்தன்மை அவர்களை விட்டுப்போகாதாம். இதுவென்ன ஞாயம்? என்னமோசம்!

## கல்லிடைக்குரிச்சி

## விஸ்வகர்ம வித்யானந்த மகாஜன சபா.

மேற்படி சபையானது சற்றேறக்குறைய 20 வருஷங்களாக சுயமரியாதை இயக்கத்தைக்கையாண்டு வந்திருந்த போதிலும் பிரஸ்தாபத்தில் வராமல் போய்விட்டதற்கு காரணம் 'குடி அரசு' போன்றபத்திரிகை இதுவரை இல்லாததேயாகும்.

ஷை சங்கத்தின் 1104 வருஷம் 5 வது கூட்டம் நிகழும் தை மாதம் 19 தேதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு கற்பகவிநாயகர் ஆலயத்திற்குக் கீழ்புரம் கமலவிலாசத்தில் கூட்டப்பெற்றது.

அவ்வமயம் இவ்வூர் நமது குலதிலகம் பிரம்மஸ்ரீ பா. மாணிக்கம் ஆச்சாரி அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். நாகர் கோயிலை சேர்ந்தவடசேரி சுவாமி பாரதநேசன் அவர்கள் ராயல் கமிஷன் ஆதரிப்பு, செங்கற்பட்டு மகாநாடு, நமது சமூகம் சுயமரியாதையின் தத்துவம் என்பன பற்றி சுமார் 2, 3 மணி நேரம் வரையில் சொற்பொழிவு செய்தார்கள்.

பின்னர் ஷை யூர் ஷை சபை காரியதரிசி திரு. தெ. ந. சிவசுப்பையா ஆச்சாரியவர்களால் சபையின் சார்பாக இந்திய கவர்மெண்டு சட்டசபை முதல் யூனியன்போர்டு வரையிலும் உள்ள எல்லாஸ்தலஸ்தாபனத்திலும் நமது சமூகத்தினர்களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்க வேணுமாய் சபையின் சார்பாகத்தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

கமிட்டிமெம்பர் திரு. அ. சிவனுச்சாரி அவர்களால் நமது சமூகமானது பொருளாதார விஷய [illegible] கல்வி ஸ்தாபனங்களிலும் நமதுகுல மாணவர்களுக்குப் பாதிச் சம்பளத்திலும் இலவசமாகவும்கட்டாயக்கல்வி போதிக்கப்படவேண்டுமென்றும் ஷை கமிஷனர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள வேணுமென்ற தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

சபை மெம்பர் திரு. மா. சிதம்பர கிருஷ்ணாச்சாரி அவர்களால் நமது சமூக முன்னேற்றத்திற்கு வேண்டிய நடவடிக்கைகளை நமது குலசங்கஸ்தாபனங்களும் சென்னை சென்றல் கமிட்டியார்களும் எடுத்துகொள்ளுவார்களென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

சபை மெம்பர் திரு. ம. சிவராம கிருஷ்ணாச்சாரி அவர்களால் நமது சமூகமானது சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டுமென்ற தீர்மானம் இச்சபையின் சார்பாக கொண்டுவரப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

அக்ராசனாதிபதி அவர்களால் கொண்டுவரப்பெற்ற சுயமரியாதை இயக்கத்தை ஆதரிப்பதின் மூலம் நமது சபையின் சார்பாக ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து செங்கற்பட்டு மகாநாட்டிற்கு அனுப்பவேண்டுமென்ற பிரேரபனை கரகோஷத்தினிடையே நிறைவேறியது.

## பார்ப்பனீயமில்லா தண்ணீர்ப்பந்தல் திறப்புவிழா.

பொ. த. கப்பழாங்கரையி லிருக்கும் எம். வானவராயக்கவுண்டர் சென்ற பத்து வருஷங்களாக நடத்தி வரும் தண்ணீர்ப் பந்தல் திறப்புவிழா தினத்தில் பார்ப்பனீயச் சடங்குகளை நீக்கி நமமவரைக் கொண்டுஷை தண்ணீர்ப்பந்தல் திறப்புவிழா செய்து அங்கு வந்திருந்த ஏழைக்கு சிறிது தர்மமும் பந்துமித்திரர்களுக்கு சந்தன தாம்பூலாதிகளும் வழங்கி இனிது முடித்தார்.

## சுயமரியாதை செந்தமிழ் வாசகசாலை.

## தாராவி பம்பாய்.

ஷை வாசகசாலை கடந்த மூவாண்டுகளாக 'ஸ்ரீ செல்வ விநாயக செந்தமிழ் வாசகசாலை' யென அழைக்கப்பட்டு வந்ததை மாற்றி இம்மாதம் முதல் 'சுயமரியாதை செந்தமிழ் வாசகசாலை' யென திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது.

கௌரவ காரியதரிசி.


# விளம்பரம்

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1929 ௵ S. C. No. 47.

ராம. மு. ராம. ராமசாமி செட்டியார்—வாதி

குப்பண கவுண்டன் 1. } பிரதிவாதிகள்.
பழனிக் கவுண்டன் 2. }

ஷை வாதி என்பவர் பிரதிவாதிகள் பேரில் பிராம்சரிபடி ரூ. 84—10—6க்கு கொண்டுவந்திருக்கும் தாவா 25—2—29ம் தேதிக்கு விசாரணைக்குப் போடப்பட்டிருக்கிறது. ஷை தினம் ஷை பிரதிவாதிகள் மேல்கண்ட கோர்ட்டில் ஆஜராகி தங்கள் எதிர்வாதங்களை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. இல்லாத பக்ஷத்தில் அன்று ஷை தாவா ஒரு கட்சியாகத் தீர்ப்பு செய்யப்படும்.

ஈரோடு } M பெருவுஞ்ஞி நாயர்,
12-2-29. } வாதி வக்கீல்.

## தேவராயப் பேட்டை இலவச வாசகசாலை.

29—1—29 ல் நின்டித்தாலூகா, கன்னி நகமைச்சார்ந்த, தேவரப்பன் பட்டியில், 'சவுடாம்பிகை விலாசவாசகசாலை' எனப் பெயரிட்டு ஓர் வாசகசாலை ஷை ஊர் பிரபல மிராசுதாரரின் குமாரன் பி. எ. வீரைய கௌடர் அவர்களால் ஸ்ரீமான் வைரவன் செட்டியார் அவர்களின் தலைமையில் திறக்கப்பட்டது.

வி. என். கே. சுப்பைய கௌடர்.

---

## காலண்டர்கள் வரவு

கீழ்கண்ட அன்பர்கள் தம் தம் கம்பெனியின் புது வருடத்திய காலண்டர்கள் அனுப்பியுள்ளார்கள். அவர்கட்கு எமது மனமார்ந்த வந்தனம்.

M. S. P. செந்திக்குமார நாடார் & சன்ஸ்,
வியாபாரம் கள்ளிக்கோட்டை
போடிநாயக்கனூர் & விருதுநகர்

V. K அண்ட் சன்ஸ்,
பின்னோந் & சோப்புத் தொழிற்சாலை
கீழ மாசிவீதி. மதுரை.

M. நடன சுந்தரம் & பிரதர்ஸ்
புஸ்தகவியாபாரம்,
புதுமண்டபம், மதுரை.

## தேவை.

இந்த தாலூகா போர்டிலுள்ள பாடசாலைகளில் உபாத்தியாயர்களாக நியமிக்க டிரெயினிங் ஆனவர்கள் தேவை. லோயர்கிரேட் டிரெயினிங் ஆனவர்கள் புருஷர்கள் ரூ 17 லும் ஸ்திரீகள் ரூ 19 லும் ஹையர் கிரேட் ரெயினிங் ஆனவர்கள் புருஷர்கள் ரூ, 19லும் ஸ்திரீகள் ரூ, 22 லும் ஆரம்பிக்கப்படுவார்கள். மனுக்கள் தாலூகா போர்டு அக்கிராசனாதிபதிக்கு 1—3—29 க்குள் அனுப்பவேண்டும்,

தாலூகாபோர்டு ஆபீஸ் திருவள்ளூர். } டி. கே. ராமய்ய நாயுடு. தாலூகாபோர்டு பிரஸிடெண்டு

---

சுயமரியாதை பெறவேண்டுமானால் "குடி அரசு" "திராவிடன்" பத்திரிக்கைகளை வாங்கிவாசியுங்கள்

---

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சர்ய நிவர்த்தி!!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலிய வைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒருமுறை பரீக்ஷித்து பார்ப்ப தவசியம்.

48-நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட், ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சொக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

---

புத்தகம் 1-க்கு



## இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

*Mysteries of Wedded Life.*

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.

எல்லாப்புத்தக ஷாப்புகளிலும்கிடைக்கும்


வாஸன் புஸ்தகசாலை,
244, தங்கசாலைவீதி. சென்னை.

விலை ரூ. 2—0—0

---

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனம்! இனம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜீனேன் வாட்சு கம்பெனி,
மின்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

---

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் ரிப்பேர் செய்யவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு கேட்டு எழுதவும்.

ஐதராஸ் தென்னிந்தியா மோட்டார், இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்

---

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. நினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி.
புதுச்சேரி.

---

## திருப்பூர் ஸ்பெஷல் கதர் ஜவுளிகள்.

பார்வைக்கு அழகாயும் உறுதியாயும் மெல்லியதாயும் அதிக நாள் உழைக்கக்கூடிய துமான ஸ்பெஷல் கதர் ஜவுளிகள் நம்மிடம் கிடைக்கும்.

மொத்தமாய் ஆர்டர் செய்பவர்களுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

பனியன் தினுசுகளும் கிடைக்கும்.

விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

வெளியூர் ஆசாமிகள் பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும்.

அட்வான்ஸ் இல்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

மா. வெ. கருப்பண்ண செட்டியார்,
கதர் வியாபாரம்,
திருப்பூர். (தென்னிந்தியா)

அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

## [ரூ 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அன்றாடம் கிரமமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும். 24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

## தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.


இந்தமாத்திரை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியையும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.

சாப்பிடும் முறை மருந்துடன் அனுப்பப்படும்.

**தண்டபாணி வைத்தியசாலை,**
292, சைனாபஜார், மதராஸ்

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல்கைக்கெடியாரங்கள்.




இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

## "குமரன்"

ஆசாரத் திருத்த நெறியில் நேர் நின்றுழைப்பது.

எல்லாரும் இன்புற்றிருப்பது
குமரன் கொண்ட நோக்கம்.

வைதிகக் கொடுமைகளையும் அசட்டு வழக்கங்களையும் உடைத்தெறிந்து மக்கட்கு நலம் புரிவதே
குமரன் கொள்கை.

உள்நாடு வருட சந்தா ரூ. 5—0—0.
வெளிநாடு " ரூ. 6—0—0.

மானேஜர்,
தனவைசியன் கம்பெனி, லிமிடெட்,
காரைக்குடி (இராமநாதபுரம் ஜில்லா)

## "முன்னேற்றம்."

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அறிவுத்தடைகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க, உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி.
வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
152, சிலிகிரோட், சிங்கப்பூர்,

## ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்; நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311-
தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மனவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேடலாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் - 20 சாம்பில் பாக்கெட் ரூ 2 10 சாம்பில் பாக்கெட் ரூ 1-4-0.நாட்டு காய்கறி ரூ 2-8-0. சு. கோ. இ. காதர்மீரா சாயபு, வொட்னர்சரி தோட்டம், சேலம்.

## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம், மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ. 4—15—0.

திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.

தி கிருஷ்ணா ஏஜன்ஸி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.